# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 27 ஞாயிற்றுக்கிழமை (13.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 352





23 வாழ்க்கை சொர்க்கமாகும்


## 45 ஆயிரம் ரூபாவுக்கு போதைப் பொருள் குடாநாட்டில் 2 மணி நேரத்தில் விற்பனை

### கைதானவர் வெளியிடும் அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.13

ஹெரோயின் போதைப் பொருள்களை மாணவர்களுக்கு விற்பனை செய்தார் என்ற சநதேகத்தில் கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் இரண்டு மணி நேரத்தில் 45 ஆயிரம் ரூபா பணம் போதைப் பொருள் விற்பனையூடாகப் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

ஹெரோயின் மற்றும் ஏனைய போதைப் பொருள்களைப் பயன்படுத்திய மாணவர்கள் சிலரை கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர். அந்த மாணவர்களிடம் இருந்து பெறப்

பக் 32

## பொலிஸ் நிலையத்துக்கு வரும் பெண்களிடம் தொலைபேசி இலக்கம் கேட்பதை தவிருங்கள்

### அறிவுறுத்துகிறார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

யாழ்ப்பாணம், நவ.13

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்ய வரும் பெண்களிடம் தொலைபேசி இலக்கம் கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன், யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான செயலமர்வில் நேற்று மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்தார்.

சட்ட உதவி மன்றமும் யாழ்ப்பாண

பக் 32




27 துயரைப் புரியவைத்த சட்டத்தரணி


# இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் எவரும் குற்றமிழைத்திருந்தால் நடவடிக்கை

### நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதும் எடுக்கப்படும் என்கிறார் மஹிந்த

கொழும்பு, நவம்பர். 13

இறுதிப் போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்தால் அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. குற்றமிழைத்த யாரையும் தான் பாதுகாக்கமாட்டார் என்றும் அதற்கான தேவை தனக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தெற்காசிய பிராந்திய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மாலைதீவு சென்றிருக்கும் ஜனாதிபதி அங்கு இந்தியத் தொலைக்காட்சியான என்.டி.ரி.விக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது பேட்டியின் விவரம் வருமாறு:

என்.டி: தற்போதைய மீனவர் பிரச்சினை குறித்து...?

மஹி: மீனவர்கள் பிரச்சினை குறித்து உங்கள் பிரதமருக்கு எல்லாவற்றையும் விளக்கி இருக்கிறேன். கடந்த ஒரு வருடமாக, இலங்கைக் கடலுக்குள் வந்து மீன்பிடிக்கும் 40,000 படகுகளுக்கு எதிராக நாங்கள் சண்டையிட்டு வருகிறோம். இதனால் எங்களுக்குத்தான் பிரச்சினை. ஆனால், உங்கள் பிரதமரின் வேண்டுகோளின் பேரில் மீனவர்கள் எவரையும் நாங்கள் கைது செய்வதில்லை. இப்போது நாங்கள் அவர்களை அனுமதிக்கிறோம். முன்னர் இந்த விடயத்தை கடற்படையினரே கையாண்டனர். ஆனால் அதனைக்கூட நிறுத்துமாறு இப்போது உத்தரவிட்டுவிட்டோம்.

என்.டி: இந்தப் பிரச்சினை இந்தியாவில் பெரும் அரசியல் சிக்கலாக இருக்கிறதே?

பக் 31




29 மீண்டும் பலமாக எழுவோம்


## நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளித்த கல்முனைப் பெண்மணி சி.ஐ.டி. விசாரணைக்கு!

### நான்காம் மாடிக்கு வருமாறு அழைப்பு

கொழும்பு,நவ.13

கல்முனையில் எட்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்திருந்த 45 வயதான விதவைப் பெண் ஒருவர் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பி.பி.சியின் சிங்கள சேவையான 'சந்தேசிய' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி கல்முனையில் நடைபெற்ற ஆணைக் குழுவின் அமர்வில்

பக் 32

## தமிழீழ விடுதலைப் போர் மீண்டும் ஒருமுறை வெடிக்கும்

### சென்னையில் காசி ஆனந்தன் முழக்கம்

சென்னை, நவ. 12

தமிழீழ விடுதலைப் போர் மீண்டும் வெடிக்கும் என்று சென்னையில் முழங்கினார் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன். "நாங்கள் நெருப்பின் நடுவில் இருக்கிறோம். ஒன்றை மட்டும் உறுதியாக சொல்ல விரும்புகின்றேன்" - என்றார் அவர்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய மூன்று நூல்கள் நேற்றுமுன்தினம் சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டன. புதுக்கவிதை வடிவில் எழுதப்பட்ட சிந்தல், பொழிச்சல், நறுக்கு என்ற மூன்று நூல்களே சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வில் உலகத் தமிழர் இயக்க தலைவர் பழநெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நடிகர் மணிவண்ணன், கவிஞர் தமிழிச்சி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பக் 31

## கொமன்வெல்த் போட்டியை கோட்டை விட்டது இலங்கை

சென்கீட்மரியட், நவ.13

2018 ஆம் ஆண்டு கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இலங்கையின் அம்பாந்தோட்டை மாவட்டம் இழந்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின், சென்கீட்ஸ்மெரியட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் தகுதிபெற்றுள்ளது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை 2018 ஆம் ஆண்டு நடத்த இலங்கையின் அம்பாந்தோட்டை மற்றும் ஆஸ்திரேலியாவின்

பக் 31

## டக்ளஸ் தொடர்பான வழக்கின் இறுதி விசாரணை 22ஆம் திகதி

கொழும்பு, நவ.13

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்னையில் 1986 மற்றும் 87ஆம் ஆண்டுகளில் தங்கியிருந்தபோது, சூளைமேடு காவல் நிலையத்தில், திருநாவுக்கரசு என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றமை தொடர்பான வழக்கு, 7 வயதுச் சிறுவனைக் கடத்திப் பணம் கேட்ட வழக்கு உள்ளிட்ட மூன்று வழக்குகள் பதிவு

பக் 32


Login www.agsarma

உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட

SINGER POWER ஜெனரேட்டர்கள்

இன்றே விரையுங்கள்.



Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 0774685771

சங்கானை 077 2208232

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408

சுன்னாகம். 021 224 0555

மானிப்பாய். 021 225 5343

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389

நெல்லியடி. 021 226 4937


சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/[illegible]ங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மன்னார், வவுனியா மாவட்டங்களில் இடி, மின்னல் நிலவுவதற்கான காலநிலையும் பிற மாவட்டங்களில் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியமும் உள்ளது.

# வடமராட்சி கிழக்கில் மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணம் வழங்கல் இன்று

## நிகழ்வுக்கு பயனாளிகளிடமிருந்து பணம் வசூல்

யாழ்ப்பாணம், நவ.13

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மீனவர்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை ஆழியவளையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான செலவுகள் பயனாளிகளிடம் இருந்தே பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய இரண்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களே இந்த நிகழ்வின் செலவுக்கான பணத்தை பயனாளிகளிடமிருந்து அறவிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் உபகரணங்களைப் பெறவிருக்கும் 80 பயனாளிகளிடமிருந்து தலா 500 ரூபா வீதம் பணம் அறவிடப்படுவதாகத் தெரியவருகிறது.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு உட்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு பாரம்பரிய தொழில் முறைகளுக்கான கட்டுமரம் மற்றும் வலைத் தொகுதிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆழியவளை பொது மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வின் போது கையளிக்கப்படவுள்ளன.

வெற்றிலைக்கேணி, ஆழியவளை ஆகிய இரண்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உட்பட்ட கடற்றொழிலாளர்கள் 80 பேருக்கு தலா ஒரு லட்சம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் இதில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். அத்துடன் அமைச்சின் உயர் அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எனப் பலர் கலந்துகொள்கின்றனர்.

இவர்களுக்கான மதிய உணவு மற்றும் நிகழ்வுக்கான ஏற்பாடு செலவுகள் என்பன 35 ஆயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தச் செலவுகளுக்கான பணம் பயனாளிகளாகவுள்ள அண்மையில் மீளக்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களிடம் இருந்து அறவிடப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் அந்தப் பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் ஆகியோரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

பயனாளிகளிடம் இருந்து பணம் பெறும் விடயம் தமக்குத் தெரியாது எனக் குறிப்பிட்டனர். அதன் உண்மைத் தன்மை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதாகவும் கூறினார்கள்.

ஆழியவளை கூட்டுறவுச் சங்கத் தலைவர் தங்கத்துரையிடம் இது தொடர்பாகக் கேட்ட போது,

நிகழ்வுச் செலவுக்காக பயனாளிகளிடமிருந்து தலா 500 ரூபா பெறுவதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

ஆழியவளைப் பகுதிக்கான கிராம அலுவலரும் வெற்றிலைக்கேணிக்கான பதில் கிராம அலுவலருமான அம்பிகைபாகனிடம் இதுபற்றிக் கேட்ட போது -

நிகழ்வுச் செலவுகள் பயனாளிகளிடம் இருந்தே பெறப்பட்டு வருகின்றன. மீள்குடியேற்ற அமைச்சு அந்தப் பணத்தை பின்னர் மீள அளிக்கும் அவை மீளவும் பயனாளிகளிடம் வழங்கப்படும் - என்றார். (த-14)

# சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் திடீரென அதிகரிப்பு

நவாலி, நவ.13

மானிப்பாய் பொதுச் சந்தையில் சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் ஐந்து ரூபாவாகத் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் மூன்று ரூபாயாக அறவிடப்பட்டு வந்தது. தற்போது திடீரென இந்தக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சைக்கிளைப் பாதுகாப்பு இடத்தில் நிறுத்தியவுடன் 3 ரூபா எனக் குறிப்பிடப்பட்ட பற்றுச்சீட்டே வழங்கப்படுகிறது.

இது பற்றிப் பொதுமக்கள் கேட்டபோது, இந்த 3 ரூபா பற்றுச்சீட்டு முடிவடையவுள்ளதாகவும் அது முடிவடைந்த பின்னரே புதிய 5 ரூபா பற்றுச்சீட்டு விநியோகிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மானிப்பாய் பிரதேச சபையினர் உடன் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று பாவனையாளர்கள் கோரியுள்ளனர் (த-100)

# சேமலாப நிதி அங்கத்தவரிடம் கைவிரல் அடையாளம் பெறல்

## குறித்த திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் உள்ளடங்குகின்ற அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் படி எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டத் தொழில் திணைக்கள அலுவலகத்தில் கைவிரல் அடையாளம் பெறப்படவுள்ளது.

அன்றைய தினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் கைவிரல் அடையாளம் பெறும் நடவடிக்கை இடம்பெறும்.

அடுத்த மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்திலும்,12ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்திலும் கைவிரல் அடையாளம் பெறும்நடவடிக்கை இடம்பெறும்.

அங்கத்தவர்கள் கைவிரல் அடையாளங்களை வழங்க வரும் போது தேசிய அடையாள அட்டை,தொழில் தருநரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட கடிதம் என்பவற்றை எடுத்து வரவேண்டும் என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளவர்கள் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்காகக் குறித்த தினங்களில் தொழில் தருநர்கள் அவர்களுக்குவிசேடவிடுமுறைவழங்கி ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதி மீளளித்தல் செயற்பாட்டினை இலகுபடுத்தவும் , ஊழியர் சேமலாப நிதி மீளளிப்பில் மோசடிகள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் வகையிலேயே இந்தக் கைவிரல் அடையாளம் பெறப்படவுள்ளது. (த-14)

# சட்டத்தரணி ஜெத்மலானி வைகோ சகிதம் தூக்குத் தண்டனை கைதிகளுடன் சந்திப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரை மூத்த சட்டத்தரணி ராம் ஜெத்மலானி மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் நேற்றுச் சந்தித்துள்ளனர்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களைச் சந்தித்த பின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய சட்டத்தரணி ராம் ஜெத்மலானி; ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மூவருக்காக தான் வாதாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இதுவரை அவர்களை தான் பார்த்ததில்லை என்பதால், நேற்று அவர்களைச் சந்திக்க வேலூர் வந்ததாகவும் கூறியுள்ளார். (ஒ-323)

# வளர்ப்பு மிருகங்களை வீதியில் திரிய விடாதீர்!

பொதுமக்கள் தமது வளர்ப்பு மிருகங்களை வீதிகளில் திரிய விட வேண்டாம் என்று யாழ். மாநகர சபையினர் அறிவித்துள்ளனர்

இது தொடர்பாக மேயர் திருமதி யோ.பற்குணராசா அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்:-

யாழ். மாநகர சபை வீதிகளில் கட்டாக் காலியாக திரியும் எருது, எருமை, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி முதலிய மிருகங்களையும், தெருவோரங்களில் கட்டி வைக்கப்படும் வண்டில் மாடுகளையும் பிடித்து பட்டியில் அடைப்பதற்கு மாநகர சபைகள் சட்டத்தின் 84 ஆவது பிரிவு அனுமதியளிக்கிறது. இதன்படி இவ்விதமான பிராணிகளை மாநகர சபையால் இதற்கென நியமிக்கப்படுபவர்களால் பிடித்து பட்டியில் அடைப்பதை தவிர்க்கும் முகமாக, மேற்குறித்த தத்தமது வளர்ப்பு மிருகங்களை தெருவில் கட்டாக்காலியாக திரியவிடாமல் வீடுகளில் கட்டி வளர்க்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கோப்பாயில் பொலிஸ் பதிவு

யாழ்ப்பாணம், நவ.13

கோப்பாய் பொலிஸ் பிரிவில் குடியிருப்பாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான படிவம் ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

பொலிஸ் கட்டளைச் சட்டம் 76 ஆம் பிரிவின் கீழ் இந்த நடவடிக்கை இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பாளர் பதிவுப் படிவத்தில் பிரதான குடியிருப்பாளர் குடும்ப அங்கத்தவர்கள், வீட்டு உதவியாளர் உட்பட ஏனைய குடியிருப்பாளர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளது.

# நிகழ்வுகள் இன்று

**முதியோர் கௌரவிப்பு**

கனடா வாழ் கைதடி ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு விழா காலை 9 மணிக்கு கைதடி வடக்கு கயற்றசிட்டி கந்தசாமி கோயில் மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக 'ஆறுதல் நிறுவன' நிர்வாக இயக்குநரும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசகருமான சுந்தரம் டிவகலாலா கலந்துகொள்வார். (ம- 288)

**சைவப் புலவர் பட்டமளிப்பு**

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழா காலை 9.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக பீடத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் கலந்து கொள்வார். (ம)

**'வலை' இதழ் அறிமுக நிகழ்வு**

சமகாலப் பொது அறிவு விடயங்களின் தொகுப்பான 'வலை' என்னும் பருவ இதழின் அறிமுக நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி த.கிருத்திகா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இதழின் முதற்பிரதியை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் த.தவசேகர் வழங்கவுள்ளார். நிகழ்வின் இறுதியில் பருவ இதழின் தொகுப்பாளரும் யாழ். இந்து கலாசார கிளை நூலகத்தின் நூலகருமான சி.என்.எச். சாள்ஸ் ஏற்புரை நிகழ்த்துவார். (ம)

**செயலமர்வு**

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகளில் தரம்-6 தொடக்கம் தரம்- 11 வரையான வகுப்புக்களில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 12, 13 வகுப்புக்களில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான விழுமியக் கல்விச் செயலமர்வு காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம- 207)

**சொற்பொழிவு**

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் முற்பகல் 11 மணிக்கு 'மகாபாரதம்' தொடர் சொற்பொழிவு நடைபெறும். இந்தச் சொற்பொழிவை சைவப் புலவர் பொன் சுகந்தன் நிகழ்த்துவார். (ம- 236)

**மாதாந்த நிகழ்வு**

[illegible] அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் அந்தக் கல்லூரியில் நுண் கலைப் பாடங்களைப் பயிலகின்ற மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் முகமாக மாதாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற கலைநிலா அரங்க நிகழ்வின் நவம்பர் மாதத்துக்கான நிகழ்வுகள் பி.ப. 3.30 மணிக்கு பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன. இந்த மாத கலைநிலா அரங்கின் சிறப்பம்சமாக கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவர்களின் மூன்று நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்வார். (ம)

**பரிசளிப்பு விழா**

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடை பெறவுள்ளது.பாடசாலையின் அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார். (ம)

**நினைவுகூரல்**

இசை நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளை நினைவுகூரும் நிகழ்வு மாலை 4 மணிக்கு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் கலாபூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம)

**கலந்துரையாடல்**

வேலையற்ற பட்டதாரி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் முற்பகல் 10.30 மணிக்கு பெருமாள் கோயில் முன்றலில் இடம்பெறவுள்ளது. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீண்டும் ஒருங்கிணைந்து போர்க்களத்தில் குதிக்கவும் முயற்சி

## முன்னாள் போராளிகள் மூலம் தகவல் கிடைத்துள்ளது என்கிறார் ஜனாதிபதி

மாலே,நவ.13

மேற்குலக நாடுகளில் உள்ள புலிகள் மீண்டும் ஒருங்கிணைந்து போரில் குதிக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆதரவாளர்கள், அனுதாபிகளை இரகசியமாகச் சந்தித்துப் பேசுகிறார்கள், ஒருங்கிணைய முயற்சிக்கிறார்கள். இதை நாங்கள் அறிவோம்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சார்க்மாநாட்டில்கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவில் வைத்து 'ரைம்ஸ் நவ்' தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறுதிப்போரில் சரணடைந்த முன்னாள் புலிகள் இயக்க போராளிகள் மூலம் இதுகுறித்து தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அளித்த செவ்வியின் விவரம் வருமாறு -

கேள்வி - விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து உலகின் பல பகுதிகளில் பணம் வசூலித்து வருகிறது எனவும், மீண்டும் தலைதூக்க முயற்சிக்கிறார்கள் என்றும், போராளிகளின் உணர்வுகளை அப்படியே தக்க வைக்க முயற்சிக்கின்றனர் எனவும் உளவுத் தகவல்கள் கூறுகின்றன. அது உங்களுக்கும் தெரியுமா?

**பதில்** - பிரிட்டனிலும் சரி, கனடாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, அல்லது உலகின் பிற நாடுகளிலும் சரி, விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள், அனுதாபிகள் பணம் வசூலிக்கிறார்கள், ஒருங்கிணைய முயற்சிக்கிறார்கள், இரகசியமாக சந்தித்துப் பேசுகிறார்கள். இதை நாங்கள் அறிவோம்.

எங்களிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் மூலம் இது குறித்து எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. புலி அனுதாபிகள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். மீண்டும் போரில் குதிக்கவும் அவர்கள் முயற்சிக்கிறார்கள். புலிகளின் பிரசாரம் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

**கேள்வி** - தமிழர் பகுதிகளில் மீள்குடியமர்த்தல், புனர்நிர்மாணம் உள்ளிட்டவை குறித்து பேசி வருகிறீர்கள். இதுதொடர்பாக உங்களுக்கு உதவி வரும் நட்பு நாடான இந்தியா, இது குறித்த நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைந்துள்ளதா?

**பதில்** - நாங்கள் என்ன செய்து வருகிறோம் என்பதை அங்கு வந்து பார்த்து அனைவரும் தெரிந்து கொள்ளலாம். இந்தியாவும் சரி, பிற நாடுகளும் சரி எங்களது பணிகளைப் பார்த்து சென்றுள்ளனர். அனைவருக்கும் இதில் திருப்தியே.

**கேள்வி** - தமிழகத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜெயலலிதா இலங்கை விவகாரத்தில் தீவிர அக்கறை காட்டுகிறார். அவர் உண்மை நிலையை அறிய இலங்கைக்கு வர விரும்பினால் நீங்கள் வரவேற்பீர்களா?

**பதில்** - கண்டிப்பாக, நிச்சயம் வரவேற்போம். அவர் தாராளமாக வந்து அங்கு என்ன நடக்கிறது? உண்மை நிலவரம் என்ன என்பதை நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். எங்களிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. தமிழர் பகுதிகளில் நாங்கள் செய்துள்ள சாதனைகளுக்காக நான் பெருமைப்படுகிறேன். இதை ஜெயலலிதாவும் நேரிலேயே அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி** - சீனா, இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்து அங்கு ஆழமாக நிலை பெற்று வருவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. இதனால் இந்தியாவுடனான இலங்கையின் உறவில் மாற்றம் வருமா?

**பதில்** - நான் ஆரம்பத்திலிருந்தே ஒன்றை உறுதியாக சொல்லி வருகிறேன். இந்தியா எங்களது தொப்புள் கொடி உறவு. இந்தியாவுக்குப் பிறகு தான் சீனா. இந்தியா எங்களது உறவினர் என்றால் சீனா எங்களது நண்பர். நாங்கள் மட்டுமல்ல ஐரோப்பிய யூனியனும் கூட சீனாவின் உதவியை நாடுகிறது.

எங்களது நாட்டில் துறைமுகம், விமான நிலையம், மின் நிலையம் ஆகியவை அமைக்கும் பணியில் ஈடுபட நாங்கள் முதலில் இந்தியாவைத்தான் நாடினோம். இந்தியாவுக்குத் தான் வாய்ப்பளித்தோம். பிறகு தான் சீனாவிடம் சென்றோம்.

எங்களைப் பொறுத்தவரை இந்தியாதான் முதலில். பின்னர் தான் சீனா. சீனா மட்டுமல்ல, அமெரிக்காவும் கூட இலங்கையில் முதலீடுகளைச் செய்துள்ளது.

சீனாவுடனான எங்களது நட்பால், இந்தியாவுடனான உறவு கெடாது. அதற்கான வாய்ப்பில்லை. அதற்கான உறுதிமொழியை நாங்கள் இந்தியாவிடம் ஏற்கனவே கொடுத்துள்ளோம் - என்றார். (த-சி)

# ஜனாதிபதி மஹிந்தவை திருப்திப்படுத்தவே அம்பாந்தோட்டைத் துறைமுகம் நிர்மாணிப்பு

**மக்களை அரசு தவறாக நடத்துகிறது என ஐ.தே.க. குற்றச்சாட்டு**

கொழும்பு,நவ.13

அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரம் தொடர்பாக அரசு நாட்டு மக்களை தொடர்ச்சியாக தவறாக வழிநடத்துகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இந்தத் துறைமுகத்தின் ஆகக்கூடிய ஆழமான 17 மீற்றர், பெரிய சரக்குக் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்குவதற்குப் போதுமானதாக இல்லை என்பது தொடர்பாக ஐ.தே.க. சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

சீனாவின் நிதி உதவியில் 140 கோடி டொலரில் கட்டப்படும் அம்பாந்தோட்டைத் துறை முகம் தென்பகுதியை அபிவிருத்தி செய்யும் அரசின் திட்டங்களில் முதன்மையானதாக விளங்குகிறது என அரசு தெரிவித்துள்ளது.

2010 ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பெரிய துறைமுக அபிவிருத்தித் திட்டமானது பல காரணங்களினால் தடைப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலுக்கு அருகிலுள்ள கடற்படுகையில் காணப்படும் பெரிய பாறையால் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் தாமதங்கள் ஏற்பட்டன என அப்போது அரசு தெரிவித்திருந்தது.

இந்தப் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்ட போதிலும் கூட ஆழமற்ற சிறிய கடற்கலங்கள் மட்டுமே அம்பாந்தோட்டைக் கடற்கரையை அண்டி பாதுகாப்பாக வரமுடிகிறது என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே அம்பாந்தோட்டைத் துறைமுகம் கட்டப்படுகின்றது என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் துறைமுகத்தின் கொள்ளளவு தொடர்பாக பெர்னாண்டோவால் கூறப்பட்ட கருத்தை லண்டன் துறைமுக அதிகார சபையும் ஆதரித்துள்ளது.

இதற்கப்பால் பருவப் பெயர்ச்சி மழை ஏற்படும் காலங்களில் இந்தத் துறைமுகம் பெரும் ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியேற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத்துறைமுகத்தில் 7000 சீன பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் உள்ளூர் மக்கள் இங்கு தமக்கான தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர் எனவும் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (த-சி)

# உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்து விடுவேன் என அஞ்சுகிறது மத்திய அரசு

## ராஜீவ் கொலைக்கைதிகளைச் சந்தித்த பின் சீமான் பேட்டி

சர்வதேச அளவில் தமிழர்களை நான் ஒருங்கிணைத்திடுவேன் என்று மத்திய அரசு அச்சப்படுகிறது. அதன் காரணமாகவே எனக்கு அமெரிக்கா, கனடாவுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலைக் கைதிகளான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனைக்கு 8 வார காலத் தடை விதிக்கப்பட்டது. இது தொடர்பாக நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் சீமான், வேலூர் சிறையில் இருக்கும் தண்டனையாளர்கள் மூவரையும் சந்தித்துப் பேசினார்.

பின்னர் வெளியே வந்த சீமான் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

சிறையில் உள்ள 3 பேரின் தூக்குத்தண்டனை வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அவர்கள் 3 பேரும் சட்டரீதியாக விடுதலையாவார்கள்.

29ஆம் திகதி நீதிமன்றில் நடக்கும் வழக்கில் அவர்கள் விடுதலையாவார்கள் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடமும் உள்ளது. தமிழக அமைச்சரவையை முதலமைச்சர் ஜெயலலிதா கூட்டி தூக்குத் தண்டனையை இரத்துச் செய்வதற்குத் தீர்மானம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும் உள்ளது. - என்றார் அவர். (த-சி)

# அமெ.பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி இலங்கை வருகிறார்

கொழும்பு, நவ.13

காலி நகரில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்க, அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்களத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவுக்கான பிரதி உதவிச்செயலர் றொபேட் ஸ்கெர் இலங்கை வரவுள்ளார்.

இந்த இரண்டு நாள் கடல்சார் பாதுகாப்பு கருத்தரங்கு காலியில் உள்ள வெளிச்ச வீட்டு விடுதியில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முதல்நாள் கருத்தரங்கில் அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலர் றொபேட் ஸ்கெர், பூகோள மற்றும் பிராந்திய கடல்சார் பாதுகாப்பில் பொது வான [illegible] பாயத்தின் முக்கியத்துவம் என்ற பொருளில் ஆய்வு ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஆசிய விவகாரங்களில் நிபுணரான இவர் முன்னதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் பணியாற்றியிருந்தார்.

இந்தநிகழ்வில் சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் உரையாற்றவுள்ளார்.

காலி கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் அவுஸ்ரேலியா, பிரான்ஸ், ஜப்பான், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இந்தியா, பிரித்தானியா, சீனா, அமெரிக்கா, மாலைதீவு, ஐக்கிய அரசு எமிரேட்ஸ், பங்களாதேஸ், கென்யா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தென் [illegible] இந்தோனேசியா, [illegible] ஓமான், கட்டார் ஆகிய நாடுகள் பங்கேற்கவுள்ளன. (த)

# நோர்வேயின் அறிக்கைக்கு இலங்கையரும் ஒத்துழைப்பு

கொழும்பு,நவ.13

இலங்கையில் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சி குறித்த மீளாய்வு அறிக்கை தயாரிப்பதற்கு இலங்கையர்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் இந்த 208 பக்கங்கள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்துள்ளனர்.

இந்த அறிக்கை தயாரிப் [illegible] இலங்கையர்களின் பெயர்களை அந்நாட்டு அரசு வெளியிடவில்லை.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நோர்வே இவ்வாறான ஓர் அறிக்கையை எதற்காகத் தயாரித்தது என்பது இன்னமும் புலனாகவில்லை என சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை குறித்துப் பாதுகாப்புத் தரப்பினரிடம் எவ்வித தகவல்களையும் நோர்வே பெற்றுக் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை வெளியிடும் நிகழ்வில் இலங்கை அரச சார்பற்ற நிறுவனங்களும் கலந்து கொண்டுள்ளன. (த)

# 18 ஆவது சார்க் மாநாடு நேபாளத்தில்

அட்டு,நவ.13

18ஆவது சார்க் உச்சி மாநாட்டை நேபாளத்தின் காத்மண்டு நகரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலைதீவில் நிறைவுற்ற 17ஆவது சார்க் உச்சி மாநாட்டின் இறுதியில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை சார்க் மாநாட்டில் வலய ஒத்துழைப்புக்கள் குறித்து நான்கு பொது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை அபிவிருத்திக்கு ரூ. 3 லட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கீடு


யாழ்ப்பாணம், நவ.13

நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிதியில் 2011 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடாக ரூபா 3 லட்சத்து 85 ஆயிரம் நிதி வழங்கியுள்ளனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பாரதி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு ரூபா 75 ஆயிரமும் ஞானவீர சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு ரூபா 50 ஆயிரமும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வளவட்டை ஒழுங்கை புனரமைப்புக்கு ரூபா ஒரு லட்சமும் கோண்டாவில் ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய நூல் கொள்வனவுக்கு ரூபா பத்தாயிரமும்-

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன் கோண்டாவில் வடக்கு கலைவாணி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு ரூபா 50 ஆயிரமும் திருநெல்வேலி கலைச்சுடர் சனசமூக நிலையக் கட்டடப் புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ரூபா ஒரு லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். (ஒ-07)

## வாழும் கலை பயிற்சி



மூச்சு பயிற்சி, பிரணாயாமம், சுதர்சனகிரியா, தியானம், யோகாசனம்.
இடம்: மகேஸ்வரன் மணிமண்டபம், நல்லூர்
காலம்: 14.11.2011 திங்கள்
அறிமுக உரை
பயிற்சி: 15.11.2011 20.11.2011
நேரம்: காலை 6.00 8.30, 10.00 12.30
மாலை 2.00 4.30, 5.00 7.30
முன்பதிவுகளுக்கு: 0777740593 (10410) (4-6-7)

Valai வலை சமகால பொது அறிவுத் தொகுப்பு
சமகால பொது அறிவு விடயங்களை உள்ளடக்கிய "வலை" இதழ் – 01 வெளிவந்து விற்பனையாகிறது
அரச போட்டிப் பரீட்சைகளுக்கும், மாணவர்களுக்கும் உகந்த வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
பிரதி ஒன்றின் விலை 20/= மட்டும்
யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். பிரதிகளுக்கு முந்துங்கள்...
"வலை" இதழின் அறிமுக விழா நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று பி.ப. 3.00மணிக்கு இடம் பெறும். (10368)(6,3)



## Sales Representatives (All Island)

- More than 3 Years experience in Similar capacity
- Age below 30 Yrs.
- Preference will be given to those who have experience in paints or hardware field
- Fluent in English language and Communicate in Tamil language would be an advantage
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island
- Should be a self-motivated and result oriented professional

## Sales Executives (Industrial)

- More than 2 Years experience in Paints or Hardware field
- Age below 30 Yrs.
- Should be a self-motivated and result oriented professional
- Fluent in English language and Communicate in Tamil language would be an advantage
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island

Apply with complete CV and **indicating the post on the top left hand corner of the Envelope** to reach us within 7 days to the address below.

General Manager,
C.P.T. CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd.
Sunny Auto HI-BUILD LACQUER · LUXURY EMULSION PAINT · Colour box · KENLUX · DEBEER CAR-REFINISHES OVER 50,000 COLOURS · CAUSEWAY

## எல்லா நோய்களையும் கட்டுப்படுத்தக்கூடிய பக்க விளைவுகளற்ற மருந்து வகைகள்



உப உணவுப்பொருட்கள்,
பெண்மைக்கு மென்மை சேர்க்கும் இயற்கை மூலிகைத் தாயாரிப்புக்கள்.
Sri Lanka
ஆண்களின் கட்டுடல் மேனியை மென்மேலும் பொலிவுறச் செய்யும் லேகிய வகைகள்
நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய உப உணவு, மருந்துவகைகள் டயபோஷா, குறிஞ்சாப் பவுடர், நாவல் கோப்பி.
எல்லா வயதினரது ஆரோக்கியத்தைப் பேணக்கூடிய NAP கோப்பி. பெண்களின் அழகிற்கு PaPaya whitening soap, Face Pack, Creams,Oil மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக Lovemum.
நியூ ஆரோக்கிய தாயாரிப்புக்கள் என்று கேட்டுவாங்குங்கள்
New Arokya Products
No.16-1/2,E.S. Fernando Mawatta, Colombo-06, Tel 0114651199
Sirruppiddy North,Neervely, Jaffna.Tel : 0214 920920

## மண்டைதீவில் இம்முறை நெற்செய்கை கட்டாக்காலி மாடுகளால் நாளாந்தம் பயிர் சேதம்

யாழ்ப்பாணம், நவ.13

மண்டைதீவில் பல வருடங்களின் பின்னர் நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில் கட்டாக்காலி மாடுகள் பயிர்களைச் சேதப்படுத்தி அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடம் பெயர்ந்து மீள் குடியமர்ந்த பின் இப்போது தான் முதற்தடவையாக விவசாயிகள் அங்கு நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பயிர்கள் செழித்து நன்றாகக் காணப்படும் நிலையில் கட்டாக்காலி மாடுகள் அவற்றைச் சேதமாக்கி வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக விவசாய சம்மேளனம் மற்றும் திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனவும் மண்டைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-7)

## VISA SERVICE

CANADA, UK, NEWZEALAND, AUSTRALIA ஆகிய நாடுகளுக்கான VISA ஒழுங்குகள்...
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு குடிபுகுவதற்கான ஒழுங்குகளும். அத்துடன் REFUSAL , PENDING WORK அனைத்து நாடுகளுக்குமான VISA க்களும் நம்பிக்கையுடனும், கால தாமதமின்றியும் செய்து தரப்படும்.
ROYAL INTERNATIONAL VISA CONSULTING
Phone No:- 0772484403 General Line:- 0112363880
Web site:- WWW.RICVISA.COM
Address:- 257 1/1 A, Galle Road, Wellawatte, Colombo-06.
E-mail:-jeansasi@yahoo.co.in
FLEX Graphic

## தேவை வாடகைக்கு/குத்தகைக்கு

ஆயுள் வேத மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் பிரபல்யமான நிறுவனத்துக்கும், அதன் துணை நிறுவனமான வைத்தியசாலைக்கும் மிகக் குறைந்த வாடகையில் இடம் தேவை.
தொடர்புக்கு : 0773535516


## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி சிவன் கோவில் தெற்கில் 6¼ பரப்புக் காணி விற்பனைக் குண்டு.மேலதிக விபரங்களுக்கு : ப.கமலவேணி
தொ.இ. 0217200223, 0777780573
(10416) (6-7-8)

## ஜெனறேற்றர் விற்பனைக்கு

தொடர்பு T.P. 0213211890

## லண்டன்/அவுஸ்திரேலியா/மலேசியா/சுவிஸ்/யூஎஸ்ஏ/ஜேர்மனி/சிங்கப்பூர்/கனடா/போலண்ட் ஆகிய இடங்களில் கல்விவாய்ப்பு



WORK VISA
KDU UNIVERSITY COLLEGE · SEGi University College · LINTON · JAMES COOK UNIVERSITY AUSTRALIA · INTI
Our Partner Universities / Colleges
MULTIMEDIA UNIVERSITY · AEC · JCU · WEST GEORGE · UNB · LBRA · Stansfield College · SOUTH LONDON COLLEGE · SAM
ஜனவரி 2012 அனுமதிக்கு இப்போது விண்ணப்பிக்கவும்
UK Office: 75 Cranford Lane Heston Middlesex TW5 9HA UK
Malaysia Office: Scholastic Education Services Block 05-06,Koi Kinrara Suite Jalan Pipit,Bukit Tandang 47190 Puchong Selangor - MALAYSIA
iCS
107 B-1/1, Galle Road, Colombo 06. (Opposite to Colombo plaza NOLIMIT)
www.icslanka.com
தொடர்புகளுக்கு
077 3013060 / 2553520

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகலெட்சுமி இரத்தினசபாபதி



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகலெட்சுமி இரத்தினசபாபதி 12.11.2011 சனிக்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் அல்லைப்பிட்டி காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (உடையார்)-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், மண்டைதீவு காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர்-சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் (அல்லைப்பிட்டி முன்னைநாள் உபதபால் அதிபரும், சமாதான நீதிவானும்) அன்பு மனைவியும், கேதீஸ்வரநாதன், கௌரிநாயகி, சொர்னநாயகி, றங்கநாயகி, யோகநாதன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தவவிநாயகம் (முன்னைநாள் அல்லைப்பிட்டி விதானையாரும், முன்னைநாள் அல்லைப்பிட்டி கிராமசபைத் தலைவரும்) மற்றும் தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, நடேஸ்வரி மற்றும் நடேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 130, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
பிரான்ஸ்-0033145946910 (10413)(6-5)

தகவல்:
செ.நடேசபிள்ளை
(சகோதரன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும், யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை அதிபருமாகிய

அமரர் சிவசுப்பிரமணியம் குமாரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.
(5756)(6-7-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிர்வாக அங்கத்தவர்
கு.வாமதேவன்
அவர்களின் அன்புத் தந்தை

இராசா கும்பிஜயா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வாழ்வக சமூகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
(5763)(6-7-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோர்வேயின் தோல்வியின் பின்னால்...!

இலங்கையில், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரை நிறுத்தி, அமைதியைக் கொண்டு வருவதற்கான நோர்வே அரசின் முயற்சிகள் குறித்த அறிக்கை நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

நோர்வே அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் தயாரிக்கப்பட்ட அமைதிக்கான அடமானங்கள் (Pawns of Peace) என்ற 208 பக்க அறிக்கையில் சமாதான முயற்சிகள் தோற்றமைக்கான காரணங்கள் அக்குவேறு ஆணிவேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 1997 ஆம் ஆண்டு முதல் 2009 வரையான பன்னிரண்டு வருடங்களாக நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சிகள் குறித்து அந்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது, விவரிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் முறிந்துபோக, தோல்வியுற, இந்தியா எவ்வாறு காரணமாக இருந்தது என்பது குறித்தே பல இடங்களில் விளக்கமாகவும் விஸ்தாரமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக, சமாதான முயற்சிகளில் கூடுதல் பங்களிப்பு நல்குமாறு நோர்வே தொடர்ச்சியாக இந்தியாவிடம் கேட்டுக்கொண்ட போதிலும், வலியுறுத்திய போதிலும், புதுடில்லி அரசு அதனை நிராகரித்தே வந்ததாக அமைதிக்கான அடமானங்கள் (அ.அ) அறிக்கையில் நோர்வே மிகுந்த கவலையுடன் தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் மெதுவாகக் கட்டவிழத் தொடங்கியபோது, இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை, இந்தியா ஆக்கபூர்வமானதாக நோக்காமல், அனுதாபத்துடனேயே அணுகியதாகவே நோர்வேயின் அ.அ அறிக்கை குறிப்பிடுகிறது.

புதுடில்லியில் 2004ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடம் ஏறிய பின்னர், தமிழர்களின் அபிலாசைகளை பாதுகாப்பதாக அது கூறியபோதிலும், கொழும்பு அரசின் - மகிந்த அரசின் - இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டுக்கு உள்ளூடாக ஆதரவு கொண்டிருந்தது; அதற்கு எதிராக எவ்வித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை -

தனிப்பட்ட சந்திப்புகளில் நோர்வேயை, விடுதலைப் புலிகளின் நண்பர் என்றே இந்தியா விமர்சித்து வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் புலிகளை அவர்களின் இடத்தில் வைக்க வேண்டும் என்று கூறியதாகவும் அ.அ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர்த் தளபாடங்களை இலங்கைக்கு வழங்குவதில்லை என்ற கொள்கையை இந்தியா கடைப்பிடித்தது. ஆனால் ஏனைய நாடுகளிடம் இருந்து மிக வீரியமான தாக்குதல் தளபாடங்களை இலங்கை கொள்வனவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று அ.அ அறிக்கை தெரிவிக்கிறது.

2004ஆம் ஆண்டில் புதுடில்லியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த போது, விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலினால் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா, இந்தியாவின் சக்தி வாய்ந்த அரசியல் தலைவியாக மாறினார்.

அதனால் இலங்கையில் நடைபெற்ற போர் குறித்த இந்திய நிலைப்பாட்டில் திடீர் திருப்பம் ஏற்பட்டது என்பதனையும் நோர்வேயின் அ.அ அறிக்கை சுட்டுவிரலால் காட்டுகிறது.

2008 இன் இறுதியில் வன்னியில் பொது மக்களின் இழப்புகளை மட்டுப்படுத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா கோரிய போதிலும், அது இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கவும் ஆதரவு வழங்கியது; அவற்றில் மிகத் தெளிவாகவே இருந்தது என்பதும் அ.அ அறிக்கையில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தபோது, தாக்குதல்களை நிறுத்துமாறு இந்தியா மஹிந்த அரசுக்கு எவ்வித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை என்பதும் அதில் கவலையுடன் பதியப்பட்டிருக்கிறது.

அதிலிருந்து, போரை நிறுத்துவதிலோ தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுப்பதிலோ இந்திய அரசு அக்கறை கொள்ளவில்லை என்பது வெளிப்படுகிறது. இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது ஆச்சரியத்துக்கு உரியதாகவோ அதிர்ச்சி தருவதாகவோ இல்லை. அத்தோடு, அவர்கள் தமக்குள் எதிர்பார்த்தது தான்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில், இந்திய மத்திய அரசு நெடுங்காலமாக இரட்டை வேடம் போட்டு வருகிறது என்பதனை, பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்கள் தெரிந்து வைத்துள்ளனர் என்பது மூடுமந்திரமன்று.

இந்தியாவின் செல்வாக்குள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தின் மக்களுடன் இலங்கைத் தமிழர்களுக்குத் தொப்புள்கொடி உறவு உள்ளதால், தமது உரிமைகளைப் பெறுவதற்கு மத்திய அரசின் மீது ஒருவகைச் செல்வாக்குச் செலுத்த இயலும் என்ற ஈழத்தமிழரின் நப்பாசை அர்த்தமற்றது என்பதனை நோர்வேயின் அ.அ அறிக்கை உணர்த்துவதைச் சீரணித்துக் கொண்டாக வேண்டிய நிலை வெளிப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசு எப்போதும் தனது பிராந்திய நலனுக்கும், தென்கிழக்காசியாவில் தனது மேலாண்மையை நிலைநாட்டும் நோக்குடனுமே செயற்படும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இத்தகைய ஒரு சூழமைவில், இலங்கை அரசும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் விவகாரத்தில் தான் மேலோங்கி நிற்க வேண்டும் என்ற கோட்பாட்டை, கொள்கையை இலங்கை அரசு வலுப்படுத்தும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

1987 ஆம் ஆண்டில் தமிழர் பிரச்சினை சர்வதேசமயப்பட ஆரம்பித்த போதிலும், இன்னும் அவர்களுக்குரிய அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

நோர்வேயினால், மிக நீண்ட காலத்தின் பின்னரே பலஸ்தீனத்தில் அதிகார சபை ஒன்றை நிறுவுவதற்கு உதவிட முடிந்த போதிலும் -

இலங்கையில் தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவ முடியவில்லை. ஆறு மாத காலத்தில் தீர்வு ஒன்று உருவாக முடியும் என்று எதிர்பார்த்த நோர்வேயினால் ஆறு வருடங்களாகியும் ஆக்கபூர்வமான விளைவு, பெறுபேறு எதனையும் பெற்றுத் தரமுடியவில்லை.

அந்த வகையில் இலங்கை அரசுக்கு வெற்றி என்ற கோதாவில் நின்று கொண்டு,-

இரண்டு தசாப்த காலப் போரில் வெற்றி கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு இப்போது சமாதானத்தை வெல்லவேண்டிய தேவை உண்டு என்று -

நோர்வேயின் சமாதான முயற்சியில் முக்கிய புள்ளியாக விளங்கிய, அமைதி முயற்சிகளுக்கான முன்னாள் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருப்பதனை அரசு ஏற்றெடுத்துப் பார்க்குமா?

நோர்வே, அமெரிக்காவின் பிரதியாளராகவே (Proxy) இலங்கையில் சமாதான முயற்சியில் ஈடுபட்டது என்பது வெறும் ஊகம் [illegible], இனித் தமிழர்களின் நிலை என்ன என்ற வினாவைத் தவிர்க்க முடியாதே! எதற்கும் காலம் ஏதோ ஒரு பதிலைச் சொல்லும், அவ்வளவே.

# புல்மோட்டையில் 500 ஏக்கரில் புதிய தொழிற்பேட்டை விரைவில்

கொழும்பு, நவ.13

புல்மோட்டை கனியமணல் நிறுவனத்தை மையமாகக் கொண்டு 500 ஏக்கர் நிலப் பரப்பில் தொழில் பேட்டையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியின் அனுமதிக்கு முன் வைக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக அரச வளங்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் தயாதிஸ்ஸ திசேரா தெரிவித்துள்ளார்.

புல்மோட்டை கனியமணல் நிறுவனத்தின் உற்பத்திகளை வேகப்படுத்துவதற்கு 70 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புதிய இயந்திரத் தொகுதியொன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த ஆண்டில் கனியமணல் நிறுவனம் 111 கோடி ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது எனவும் இந்த ஆண்டில் 700 கோடி ரூபா என்ற இலாப இலக்கைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித் தார்.

அத்தோடு, எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தின் மூலம் 500 வரையான வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியுமெனவும், இந்த நிறுவனத்தால் பல மாற்றங்களை மேற்கொண்டு இலாபமீட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-22)

# போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கை மையமாக இலங்கை செயற்படுகின்றது

## தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை அறிவிப்பு

போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கான மையமாக இலங்கை செயற்படுகின்றது என தேசிய ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

ஐரோப்பா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையில் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கேந்திர நிலையமாக இலங்கை செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு போதைப் பொருளை கடத்துவதற்கு இலங்கை பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தலைநகர் கொழும்பு மற்றும் மாலைதீவின் தலைநகர் மாலே ஆகிய நகரங்கள் இடைத்தங்கல் மையங்களாகச் செயற்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறவுண் சுகர் எனப்படும் போதைப் பொருள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 58 வெளி நாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 25 பேர் பாகிஸ்தானியர்கள் எனவும், நான்கு பேர் இந்தியர்கள் எனவும், ஆறு பேர் மாலைதீவு பிரஜைகள் எனவும், ஐந்து பேர் ஈரானியர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டில் மட்டும் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 25 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப் பகுதியில் 58 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 4 கிலோகிராம் கொக்கேய்ன் போதைப் பொருளும் கடத்தப்பட்டுள்ளன.

போதைப் பொருள்களை உற்பத்தி செய்யப்படும் முக்கிய மூலகங்களான மருந் துப் பொருள்களும் அதிகளவில் கடத்தப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (த)

# பாரத கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கடத்தப்பட்டார்

கொழும்பு, நவ.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்களில் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரியந்த எனப்படும் தபர கட்டா என்ற நபரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார். அவர் மின்னேரியா பிரதேசத்தில் மறைந்திருந்த போது இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலபொட என்னும் வேறு பெயரும் இருந்ததாகக் குறிப்பிடப்படும் இச் சந்தேக நபருக்கு பல்வேறு படுகொலைச் சம்பவங்கள், கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவருடன் இருந்த மற்றுமொரு நபரையும் இனந்தெரியாதோர் கடத்திச்சென்றுள்ளனர்.

பாரத மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது தபர கட்டா என்பவரே என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். (த)

# தொலைக் காட்சியில் ஜனாதிபதி மஹிந்தவை கடுமையாக விமர்சித்தார் பிரதி அமைச்சர்

## விரைவில் பதவி பறிபோகலாம்

கொழும்பு, நவ.13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விமர்சித்த பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ணவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேல் மாகாண வீதி அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, வீடமைப்பு மற்றும் மீன்பிடித் துறை அமைச்சரான நிமால் லான்சாவின் வீட்டில் காவற்துறையின் சிறப்பு அதிரடிப் படையினர் போதைப் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கான திடீர்ச்சோதனை ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேல் மாகாண அமைச்சர் லான்சாவின் வீட்டிடுக்குச் சென்று ஆறுதல் கூறியது தொடர்பாக, பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ண விமர்சித்திருந்தார்.

சிறப்பு அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச்சோதனை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு மேல் மாகாண அமைச்சர் லான்சா வேண்டுகோள் விடுத்த பின்னரே ஜனாதிபதி அவரது வீட்டுக்குச் சென்றதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்தச் சந்திப்புத் தொடர்பாகப் பிரதிஅமைச்சர் குணரட்ன தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதி அமைச்சர் குணரட்ணவின் சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பாக அறிக்கை தருமாறு கேட்டுள்ளார்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்குத் தாவிய நிமால் லான்சாவுக்கும், பிரதி அமைச்சர் குணரட்ணவுக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவி வருகின்றது.

குணரட்ண கடந்த 30 ஆண்டுகளாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இருந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவியாளர்களுக்கான (Helpers) உடனடி வேலைவாய்ப்பு

ஆண், பெண் இருபாலருக்கும் இலவச தங்குமிட வசதி, குறைந்த விலையில் உணவு மற்றும் மேலதிக வேலைக் கொடுப்பனவு உள்ளடங்கலாக 20,000/= வரை சம்பளம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

**மேலும் விடுதி பொறுப்பாளர் ஆண்/ பெண் தேவை.**

உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**இல. 18, வெளியமுன வீதி, ஏகித்த, வத்தளை.**

## மரண அறிவித்தல்

### இராசா தம்பிஜயா



முதலியார் வளவு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசா தம்பிஜயா நேற்று (12.11.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - பாலாமணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பூமணி தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் (ரதி) அன்புக் கணவரும் கோசலாதேவி (சுவிஸ்) வாமதேவன் (அதிபர், யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), கௌசலாதேவி, மீராதேவி (நெதர்லாந்து), கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் உமாகாந்தன் (சுவிஸ்), தேன்மொழி (ஆசிரியர், யா/ மகாஜனக் கல்லூரி), சிறிகுலராசா, பரமலிங்கம் (நெதர்லாந்து), சுதன் ஆகியோரின் அன்பு மாமனும் ஐங்கரன், லாவண்யா, காருண்யா, தசாரகன், ரிசபன், யாழவன், சனுசா, நிசனன், பதுசனன், நிதிசன், அஸ்வினி, சுபர்னன், பிருந்தாவனா, மிதுர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ரதிகோட்டம்'
முதலியார் வளவு,
கே.கே.எஸ்.றோட், சுன்னாகம்.

தகவல்: த.வாமதேவன் (மகன்)
(அதிபர், யா/ ஏழாலை வடக்கு, அ.மி.த.க.பாடசாலை)
(சி/5758)(4-6-7)

## காணி விற்பனை

2 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வீடு, கிணறு, மரங்கள் உள்ளிட்ட 2 பரப்பு 6.5பரப்பளவுள்ள காணி விற்பனைக்குண்டு. சுப்பிரமணியம் பூங்கா, யாழ்.பொது நூல் நிலையம், யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மேல் நீதிமன்றம் என்பன 5 நிமிட நடைதொலைவிலுள்ளன. 15 நிமிட நடைதொலைவில் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்.மாநகரம் உள்ளது. கண்டி- யாழ். வீதிக்கு அருகில்.
தொடர்புகளுக்கு: 0777571079
(4-6-7)

## கடை வாடகைக்கு

மின்சார நிலைய வீதி, (பஸ்நிலையத்துக்கு பின்பக்கம்) யாழ்ப்பாணத்தில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம், 175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0775119774 (10367)(6-7-8)

## கடை வாடகைக்கு

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக எல்லா வசதிகளுடனும் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு : 0776081693 (10411) (6-7-8)

யாழ் நகரில் සිංහල පංති
சிங்கள வகுப்புகள்
[எழுத, பேச, வாசிக்க பூரணபயிற்சி]
புத்தம் புதிய ஆரம்பம்
NOV 19
சனி, ஞாயிறு தினங்களில்
7.a.m - 7.p.m
தலைநகர் பிரபல ஆசிரியர்
K.பரமேஸ்வரன்
ஆசிரியரின் தொடர்புக்கு: 0777 624 510
சகல தொடர்புகளுக்கும்:-
CAPSTONE (PVT) LTD.
01, Brown Road, Jaffna
Tel: 021 2220727, 0217200777, 0771250350

## மானிப்பாய் பொலிஸாரின் சிரமதானம்

நவாலி,நவ.13

மானிப்பாய் பொலிஸாரினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் சங்கானை ஜே/180,181 கிராம சேவையாளர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மல்கம் பேத் தலைமையில் இது இடம்பெறும். இதேவேளை டெங்கு பரவும் விதத்தில் தமது வீடுகள், காணிகள் என்பவற்றை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (த)

நீங்கள்.. ஏதேனுமொரு துறையில்
HND
OR Advanced Diploma OR IT துறையில் 2 வருட கற்கைநெறியைப் பயின்ற
தகமையுள்ளவரா?
ஒரு வருடத்தில்
B.Sc. கணினிப்பட்டத்தினை அல்லது
B.Com. with Computer Application
சலுகைக் கட்டணத்தில்!
பெற்றுக்கொள்ள அரிய வாய்ப்பு!
Post Graduate Diploma in Comp. Sc. >> M.Sc.
Duration: 01 Year (Any Degree)
No.01 British Qualification
சர்வதேசதரம் வாய்ந்ததென்று எச் சந்தர்ப்பத்திலும் நிரூபித்துவரும் பட்டச்சான்றிதழ்களைப்பெற இன்றே இணையுங்கள்—
நாளைய பட்டதாரியாகுங்கள்....
எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்
NORTH LANKA IIT
#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774

# வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

(13.11.2011)


### அமரர் தேசமானிய கலாநிதி டாக்டர்

## இளையதம்பி விக்னராசா

[சமாதான நீதிவான்]

குழந்தையாய்
மண்ணில்: 22.12.1924

தெய்வமாய்
விண்ணில்: 08.10.2011



பல்லோரும் போற்ற பரணிதனில் வாழ்ந்த ஐயா
எல்லாமே பொய்யென்று ஈசனடி சென்றீரே
பாசமிகு தந்தையாய் நேசமிகு தலைவனாய்
பாங்காக நாம் வாழ வழி நடத்தி எமை உயர்த்தி
மைந்தர்கள் ஏற்றமிகு கல்வியென
ஏணியாய் இருந்தீர்கள் எல்லோரையும் வென்றீர்கள்
சாதனைகள் படைத்தீரே சரித்திரத்தில் இடம் பிடித்தீரே
வேதனைகள் தந்தீரே விமலனடி சேர்ந்தீரே

புன்னை நகர் ஆயாக்கடவையான் பாதமதில்
அமைதியாய் சாந்திபெற அனுதினமும்
இறைஞ்சுகின்றோம் ஆறாத்துயருடன்

8.10.2011 இல் சிவபதப்பேறு அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் சிவப்பதப்பேறு பெற்றவேளை உதவி புரிந்தவர்களுக்கும் மரணச்சடங்கிற்கு வருகை தந்து எம் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி, தொலைநகல், தந்தி, கடிதங்கள் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் மலர் வளையம் சாத்தியும் இரங்கல் உரை ஆற்றியும் தம் அஞ்சலிகளை செலுத்திய அனைத்து நெஞ்சங்களுக்கும் அன்னாருக்கு வைத்திய சேவை புரிந்த டாக்டர் எஸ்.ரவிராஜ் [சத்திர சிகிச்சை நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை] மற்றும் டாக்டர் ஆ.திருநாவுக்கரசு [புன்னாலைக்கட்டுவன்] அவர் தம் குடும்பத்தவர்க்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக் கிரியைகள், அந்தியேட்டியின்போது அன்னாரது இறுதி ஊர்வலத்தின்போது கலந்துகொண்டவர்களுக்கும் பாஷாண உத்தாபனம் [கல்லெடுப்பு] வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டவர்களுக்கும் அமரரின் விக்னா காவியம் எனும் நினைவு மலருக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பெரியார்கள், அந்தணப் பெரியார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மகன்: வி.வன்னியநாதன் (ஜேர்மனி)
தொ.பே: 004974611808680

குடும்பத்தினர்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

(10412)(1,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனை தொடர்பில் உடன் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்

## கல்வி அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்டத்தில் சகல பாடசாலைகளும் மாணவர்களின் நடத்தை தொடர்பாக விழிப்பாக இருப்பதுடன், மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள போதைப் பொருள் பாவனை தொடர்பில் பெற்றோருக்கு உடனடியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வலியுறுத்தியுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநரின் தலைமையில் வட மாகாணக் கல்விப் புலம் சார்ந்த அலுவலர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கூட்டம் யாழ். பொது நூலகத்தில் அமைந்துள்ள வடமாகாண மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே வட மாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மேலும் தெரிவித்தமை வருமாறு:

பாடசாலைகள் தோறும் பாடசாலை அபிவிருத்திச்சபை, பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர் கொண்ட ஒழுக்காற்றுக் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து அதன் மூலம் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் மாணவர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், உரிய வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், பாடசாலை மட்ட ஒழுக்கத்தை உறுதிப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளரது மேற்பார்வையில் சகல பாடசாலைகளுக்கும் சென்று கண்காணிப்புக் குழுக்களை அமைத்து மாணவர்களைக் கண்காணிப்பதுடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்த வேண்டும்.

பெற்றோர்கள் இந்த வேளையில் தமது பதின்ம வயதுடைய பிள்ளைகளின் செயற்பாடுகளையும் ஒழுக்கத்தையும் கண்காணிப்பது அவசியமானது. பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரத்தில் மாணவர்கள் பெற்றோருடன் இருப்பதால் இந்த விடயத்தில் பெற்றோர்கள் அக்கறையுடன் இருக்கவேண்டும் என்ற விடயங்கள் ஆளுநரால் சுட்டிக்காட்டப்பட்டதாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார். (த-15)

## மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக மரியதாசன் ஜெகூ

யாழ்ப்பாணம், நவ.13

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக மரியதாசன் ஜெகூ கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் பதவியேற்றுள்ளார்.

இவர் கடந்த 6 மாத காலமாக யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவி வகித்தவராவார். தற்போது வெற்றிடமாக உள்ள யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பதவிக்கான நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை. (த-14)

## வீரசிங்கம் மண்டபத்தில் இராணுவத்துக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.குடாநாட்டிலுள்ள படைப் பிரிவுகளின் இராணுவ அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் வரை இந்தக் கலந்துரை யாடல் இடம் பெற்றது. இதில் குடாநாட்டிலுள்ள இராணுவ அதிகாரிகள் சுமார் 500 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். (த-14)

## பிரதம நீதியரசர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,நவ.12

இலங்கையின் முதல் பெண் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். அன்றைய தினம் பிரதம நீதியரசர் பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பார்.

பருத்தித்துறை நீதிமன்றத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி திறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க நீதிமன்றக் கட்டடத் தொகுதியை நாடாவை வெட்டித் திறந்து வைப்பார். இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்வார். பருத்தித்துறை நீதி மன்றத்தின் கட்டடம் கடந்த காலம் போர் நடவடிக்கையால் மோசமாக சேதமடைந்திருந்தது.

இதனால் நீதிமன்றச் செயற்பாடுகள் வதிரிச் சந்திக்கும் மாலுசந்திக்கும் இடையில் பிரதான வீதியின் அருகே அமைந்துள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இடம் பெற்று வந்தது. இதையடுத்து இந்தக் கட்டடத்தைப் புனரமைக்கும் பணிகள் நீதியமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப் பட்டுவந்தன. (த-319)

## பயன்தரு மரங்கள் பல அழிப்பு

தென்மராட்சிப் பகுதியில் பல பயன்தரு மரங்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் வெட்டப்பட்டு வருகின்றன. அவற்றுக்குப் பதிலாக புதிய மரங்கள் எவையும் நடப்படவில்லை.

ஏ-9 வீதி அகலிப்புப் பணி காரணமாக தனியார் காணிகளின் எல்லைகள் உள்நகர்த்தப்பட்டு வருவதுடன் பயன்தரு மரங்கள் உட்படப் பல மரங்களும் வெட்டப்பட்டு வருகின்றன. ஏற்கனவே வீதி அகலிப்புப் பணிக்கு ஒதுக்கப்பட்ட அளவிலும் பார்க்க குறைந்த அளவில் காணிகள் எடுக்கப்பட்டு வீதி அகலிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வீதி அகலிப்புப் பணிக்காக ஒதுக்கப் பட்ட அளவிலும் பார்க்கக் கூடிய அளவு தூரம் நகர்த்தி தொலைபேசிக் கம்பங்களை பொருத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-86)

## பச்சிலைப்பள்ளியில் வாக்காளர் பதிவு படிவங்களைப் பலர் இன்னும் பெறவில்லை

### உடன் பதிவு செய்யக் கோருகிறது மக்கள் ஒன்றியம்

தென்மராட்சி, நவ.13


கடந்த 2000 ஆம் ஆண்டு தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து இதுவரை தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீள்குடியமர அனுமதிக்கப்படாத பச்சிலைப் பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களில் 18 வயது பூர்த்தி செய்து இதுவரை வாக்காளர்களாகப் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சி மாவட்டச் செயலகங்கள் அல்லது பளை பிரதேச செயலகத்தில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு பச்சிலைப் பள்ளி மேற்கு மக்கள் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை, கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களையே வாக்காளர்களாகப் பதிவு செய்யுமாறு ஒன்றியத் தலைவர் செ.மார்க்கண்டு அறிவித்துள்ளார்.

இப் பிரதேசத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான மீளாய்வு செய்வது மட்டும் உதவித் தேர்தல்கள் ஆணையாளரினால் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை தவறாகப் புரிந்து கொண்ட பலர் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான படிவங்களை பெறவில்லை. முன்னைய பதிவுகள் மீளாய்வு செய்வது நிறுத்தப்பட்டுள்ளதே தவிர புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்வது நிறுத்தப்படவில்லை.

எனவே பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களில் 2010, 2011 ஆகிய வருடங்களில் 18 வயது பூர்த்தி செய்தவர்கள் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பளை பிரதேச செயலகத்தில் அல்லது தத்தமது பகுதிக் கிராம அலுவலரிடம் உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் அல்லது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளார். (த-207)

### பூரண அறிவுக்கு....



அவசியமான வாசிப்பு: சரசாலை வடக்கு நித்தியா மகளிர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்துக்குத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீஸ்காந்தருடன் ஒரு தொகுதி நூல்களை நூலகர் இ.தர்மலிங்கத்திடம் கையளிக்கிறார். (த- 207)

## சாவகச்சேரி பிரதேச சபையின் வாசிப்பு மாத இறுதி நிகழ்வு

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும் இன்று ஞாயிறு நண்பகல் 12.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி, கோவிலாக்கண்டி பிரிவு படை அதிகாரி லெப். கேணல் பாஸ்ப் புலத்கம ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மரம் நடுகை, தினம் ஒரு குறள் பெயர்ப் பலகை திரைநீக்கம், எழுத்தாளர் பொ.சுப்பையா கௌரவிப்பு, வாசிப்பு மாதத்தை யொட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கல் ஆகியன[illegible] பெறும். (த- 204)

## அரச அலுவலகங்களுக்கு வருகை தரும் மாற்று ஆற்றலுடையோருக்கு முன்னுரிமை

### யாழ். அரச அதிபர் அதிகாரிகளுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

மாற்று ஆற்றலுடையோர் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசஅலுவலகங்களுக்கு வரும்போது அவர்களது நிலையைக் கவனத்தில் எடுத்து அவர்களது தேவைகளை உடன் பூர்த்தி செய்து விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள், [illegible] துள்ள கடிதங்களில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கோரியுள்ளார்.

மேலும் பிரயாணிகள் வாகனங்களில் மாற்று ஆற்றலுடையோர் வருகை தரும்போதும் அவர்களுக்கு இருப்பிட வசதிகளை வழங்குவதுடன் அவர்களுக்கென வாகனங்களில் இருப்பிட வசதிகளை ஒதுக்கி வைத்து அவர்கள் சிரமமின்றிப் பயணம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அரச அதிபர் கோரியுள்ளார்.

மாற்று ஆற்றலுடையோர் பிரயாணங்களின்போது சிரமங்களை அனுபவிப்பதுடன் அலுவலகங்களுக்கு இவர்கள் செல்லும்போது அவர்களது தேவைகள் உடன் கவனிக்கப்படாமல் உதாசீனப்படுத்தப்படுவதாகத் தமக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதனால் மாற்று ஆற்றலுடையவர்களுக்குக் கருணை காட்டுமாறு யாழ். அரச அதிபர் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (த- 300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி
C.Y இராமகிருஷ்ணன் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சிசிலியா றொட்ரிக்கஸ்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். (சி/ 5745) (4-6-7)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து

### தற்காலிக களஞ்சிய முகாமையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு தற்காலிக களஞ்சிய முகாமையாளர் பதவிக்கு நாள்சம்பள அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ★ வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு ரூபா 400.00 சம்பளம் வழங்கப்படும்
- ★ விண்ணப்பதாரி கல்வித்தகைமை கல்விப் பொதுத்தராதர (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்/கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
- ★ தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் சங்கத்தால் கோரப்படும் பிணைகளை செலுத்துவதற்கு தயாராக இருக்கவேண்டும்.
- ★ தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தகுதிகாண் காலம் வரை நாட் சம்பள அடிப்படையில் அமர்த்தப்படுவார்கள். இக்காலத்தில் பணியாளரின் சேவைத்திறன் ஆற்றல்களை கருத்திற்கொண்டு நிரந்தர நியமனம் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும்போது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சட்டப்பிரமாணங்களுக்கு அமைவான சம்பள படிநிலையில் மாதச் சம்பளத்தில் அமர்த்தப்பட்டு உரித்துடைய ஏனைய சம்பள படிகளும் வழங்கப்படும்.
- ★ விண்ணப்பங்களை சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 செலுத்தி தலைமைக்காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 2011.11.18 ஆம் திகதிக்கு முன் 'பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்கலாம். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தற்காலிக களஞ்சிய முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்பட்டிருக்கவேண்டும்.

(சி 5752)(1,6,7) பொது முகாமையாளர்

## ஓட்டோ விற்பனைக்கு

21-xxxx இலக்க ஓட்டோ
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770457292

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியை அண்டிய 3½ பரப்புக்காணியும் பங்குக் கிணறும், கொக்குவில் கிழக்கு பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணியும் வீடும், மீசாலை கண்டி வீதியில் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 8½பரப்புக் காணி என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0775471451

## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, இராச வீதியில் 5 பரப்பிலமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773101371

## வீட்டுடன் காணி விற்பனை

நல்லூர், செட்டித் தெரு நடுப்பகுதியில் அமைந்துள்ள 3 பரப்பு 5.3 காணி சகலவசதிகளும் கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0750424927

## வாகனம் வாடகைக்கு

TATA single cab 2000Kg எடை ஏற்றக் கூடிய வாகனம் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு -0775155640
(0403) (6-7-8)

## VEHICLE SALE

Hero Honda, Karizma - ZMR Black 2010 2 years company warranty Maintained by stafford - Motors 9500Km, WPVY xxxx. Transfer can be arranged 280,000/
(C/5985) (6-7-8) 0776295272

## உடன் தேவை

யாழில் இயங்கி வரும்
construction company க்கு
அனுபவமுள்ள Technical
officer உடன் தேவை
தொடர்புகளுக்கு:
011 7207565/66,
0772298295
(C357) (6-7-8)


## மலேசியா

### தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

- * கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- * மெடிக்கல் (Medical) - இலவசம்
- * இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
- * விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- * தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
- * உணவு (Food) - இலவசம்
- * 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் - முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
**GOODLINE MANPOWER SERVICES**
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592



## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் வடக்கு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்புரிமையாளர் சபைத் தலைவராக கடந்த 13 ஆண்டுகள் இருந்து வந்த
**அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம்** (J.P)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்புரிமையாளர் சபை, மருதடி
வீரகத்தி விநாயகர் ஆலயம், காரைநகர்.
(சி/ 5747) (4-6-7)

# கண்ணீர்ப் பூக்கள்



**அமரர் சிவசுப்பிரமணியம் தயாபரன்**

அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பீட
நெறியின் இணைப்பாளரும்
இரண்டாம்மொழி
கல்வி/சிங்களம், ஆங்கிலம்
உதவி இணைப்பாளரும் ஆகிய

## அமரர் சிவசுப்பிரமணியம் தயாபரன்

*இறந்தனன் என நினைக்க*
*இரும்பினால் இதயம் வேண்டும்*
*வருந்துவோர் துயர் களைய*
*தயாபரன் வரவே வேண்டும்*
*கருந்தனம் கல்வி தன்னைக்*
*கனதியாய்க் கற்ற செம்மல்*
*பிரிந்ததன் மர்மம் என்ன?*
*பேசத்தான் வார்த்தை இல்லை*

*மத்திய கல்லூரி மண்ணில்*
*மனமுயர் கல்விமாணி*
*நித்தமும் இதுவே சிந்தை*
*நீள்தொடர் இரண்டாம் மொழிகள்*
*பத்தியாய் உளவியல் மற்றும்*
*பாங்குறு சிங்களத் தோடும்*
*இத்தனை சேர்த்து இனிமேல்*
*உரைப்பவர் யாரோ? கேண்மின்*

*எங்களின் உயர்ச்சி வேண்டி*
*ஏற்றமாய் உழைத்தீர் ஐயா*
*பொங்கிடும் கண்ணீர் சிந்த*
*புனிதரே அஞ்சலி தந்தோம்*
*இங்கினி உங்கள் நாமம்*
*என்றுமே வாழும் ஐயா*
*நங்களின் இறைவன் பாதம்*
*நண்ணியே அமைதி காண்க*

விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்களும்,
கல்விமாணிக் கற்கைநெறி இரண்டாம் மொழிக் கல்வி, தேசிய கல்வி நிறுவகத்தின்
யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி கற்கை நிலையம், யாழ்ப்பாணம்.
(10407)(1,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உணர்வை மட்டுமல்ல ஆபத்தை உணரும் சக்தியும் நாய்களுக்கு உண்டு!

பண்டிகை, திருவிழா கொண்டாட்டங்களின் போது சிறுவர்கள் வெடிகொளுத்தி மகிழ்கிறார்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியும் கிளுகிளுப்பும் தருகின்ற விடயம். ஆனால் குறும்புத்தனமுள்ள சிறுவர்கள் வெடிகளை கொளுத்தி பிறருக்கு இம்சை தரும் விதத்தில் விளையாடுவதைக் காணலாம்.

பக்கத்து வளவில் நிற்கும் நாவல் மரத்தில் கள்ளமாக ஏறிப் பழம் பிடுங்கும் போது அங்கு நின்ற நாய்கள் குரைத்து கலவரம் செய்ததால் அந்த நாய்களை மௌனம் ஆக்குவதாக நினைத்துக் கொண்டு சில இளைஞர்கள் அங்கு பட்டாஸ் வெடிகளைக் கொளுத்திப் போட்டார்கள்.

நாய்களுக்கு வெடிச்சத்தம் ஒத்துக் கொள்வதில்லை. அவைகளின் செவிப்பறை பெரிய சத்தங்களைத் தாங்கிக் கொள்வதாக இல்லை. அதனால் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் வெடிச்சத்தங்களை அல்லது இடிமுழக்கங்களை கேட்டால் வீட்டுக்குள் ஓடிப் போய் முடங்கிவிடுங்கள். தெருநாய்கள் சத்தம் கேட்காத இடங்களில் சென்று பதுங்கிவிடுங்கள்.

அவ்வாறு தான் குறித்த வளவில் நின்ற நாயும் எங்கோ ஓடிச் சென்று விட்டது. இதை அறிந்த வளவுக்காரர் நாவல் மரத்தைச் சுற்றி முட்களைக் கட்டி பையன்கள் களவாக பழம் பறிக்காத படி செய்து விட்டார்.

**நாய்களின் திறமை**

நாய்கள் குரைத்ததால் அந்த வீட்டில் இருந்த இருவரும் பக்கத்து வீட்டில் இருந்த இருவருமாக நான்கு பேர் உயிர் தப்பினார்கள் என்ற செய்தி எதைக் காட்டுகிறது? நாய்கள் நன்றியுடைய மிருகம் என்பது பொதுவான கருத்து. நன்றி உணர்வை விடச் சில நாய்களுக்கு ஆபத்துக்களை உணரக்கூடிய சக்தியும் இருக்கிறது என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது. அந்த உணர்வில் தன்னை மட்டுமன்றி தன்னைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற முற்படுகின்றது.

தன் எஜமானியின் ஒரு பக்க மார்பை அடிக்கடி முகர்ந்து பார்த்துவந்த நாய் ஒன்று அவரின் மார்பகத்தை முன்னங் கால்களால் பிராண்டியபடி முனங்கியதாம். அதனால் கலக்கமுற்ற அந்த அம்மையார் வைத்தியரை அணுகி ஆராய்ந்த போது அவருக்கு மார்பகப் புற்று நோய் ஆரம்பநிலையில் இருப்பது தெரிய வந்ததாம். இதுவும் சமீபத்தில் பத்திரிகைகளில் வந்த செய்தியாகும். ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டதால் சுலபமாக குணமாக்க முடிந்தது.

பழைய பாலபோதினி இரண்டாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் ஒரு நாயின் கதை வருகிறது. தொழில் நிமித்தமாக வியாபாரி ஒருவர் குதிரையில் ஏறி புறப்பட்டுச் செல்கிறார். அவரது வளர்ப்பு நாய் அவரைப் போக விடாமல் தடுக்கிறது. குதிரையின் முன்நின்று குரைக்கிறது. தொழிலுக்குச் செல்லவிடாமல் தடுக்கும் நாயின் மீது சீற்றம் கொண்ட வியாபாரி அதனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தொடர்ந்து போகிறார். ஓர் இடத்தில் தங்கி ஓய்வு எடுத்த போது தனது பணப் பையை வீட்டில் வைத்து விட்டு வந்திருப்பதை உணர்ந்து மீண்டும் இருப் பிடம் திரும்புகிறார். அங்கே பணப்பை கிடக்கிறது. அதன் மீது அந்த நன்றியுள்ள நாய் இரத்தம் தோய்ந்த நிலையில் படுத்து உயிரை விட்ட நிலையில் காணப் படுகின்றது. இவ்வாறு நாயின் நன்றியுணர்வை வெளிப் படுத்தும் உண்மைக் கதைகள் ஏராளம் உண்டு.

**அசை போட ஒரு 3 விடயம்**

**தீபாவளியைக் கொண்டாடாத கிராம வாசிகள்**

புதுச்சேரியில் ஒரு கிராமத்தில் வௌவால்களுக்கு இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கிராம மக்கள் இந்த ஆண்டு தீபாவளியை வெடிகள் கொளுத்திக் கொண்டாடவில்லையாம். கடந்த பல ஆண்டுகளாகவே அந்த ஊர் மக்கள் வெடி கள் கொளுத்தி பண்டிகைகளைக் கொண்டாடுவதில்லையாம்.

இரவு முழுவதும் இரை தேடித் திரிந்து விட்டு பகல் வேளைகளில் அந்தக் கிராமத்தில் உள்ள பெரிய மரம் ஒன்றில் வௌவால்கள் ஆயிரக்கணக்கில் வந்திருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதுண்டு. அவைகள் வெடிச் சத்தத்தினால் குழம்பிப் போகாமல் இருப்பதற்காக அந்தக் கிராம மக்கள் வெடி கொளுத்துவதில்லையாம். இது ஒரு பாராட்டுக்குரிய விடயம் அல்லவா!

நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக பிற உயிர்களை இம்சைப்படுத்துவதென்பது அநேகருக்கு விருப்பமான ஒரு காரியம்.

மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆயிரக் கணக்கான வௌவால்கள் மீது வெடியொன்றைக் கொளுத்திப் போட்டு விட்டால் அவை அந்தச் சத்தத்தினால் பயமுற்று குழம்பிப்போய் மரத்திலிருந்து அழைத்துக் கொண்டு கிளம்புவது அவர்களுக்கு வேடிக்கையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். ஆனால் அந்தப் பிராணிகளுக்கு ஏற்படும் துன்பத்தை அவர்கள் எண்ணிப்பார்க்க மாட்டார்கள்.

இரவில் இரை தேடுவதும் பகலில் தலைகீழாகத் தொங்கி ஓய்வெடுப்பதும் வௌவாலின் வாழ்க்கை முறை. அதைக் கெடுத்து இன்பம் காண்பதென்பது காட்டு மிராண்டித் தனம் அல்லவா!

**கோயில்களும் கொண்டாட்டங்களும்**

கோயில்களில் நடைபெறும் கொண்டாட்டங்களும் விழாக்களும் பக்தர்களுக்கு பரவசம் அளிப்பவைதான். அங்கே நடைபெறும் வேள்விகளை, பூசைகளை, தீபாராதனைகளைக் காண்பதும் உபந்நியாசங்கள், கதாகாலாட்சேபங்களை மந்திர உச்சாடனங்களை காதாரக் கேட்பதும் புண்ணியம் என்று பக்தர்கள் நம்புகின்றார்கள். அதற்காகவே ஆவலோடு கோயில் திருவிழாக்களில் அவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

ஆனால் இந்தத் திருவிழாக் காலங்களில் கோயில் நிர்வாகிகள் ஒலிபெருக்கிகளை அளவுக்கு அதிகமான சத்தத்தில் ஒலிக்க விடுவது நியாயமாகத் தெரியவில்லை.

ஒலி பெருக்கிகளே இல்லாமல் திருவிழாக்கள் நடைபெற்ற காலம் ஒன்று இருந்தது. ஏன் ஒலிபெருக்கி வைக்கவில்லையென்று ஆண்டவன் கேட்பதில்லை. எல்லாம் உபயகாரர்களின் பணம் செய்யும் வேலை. பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடும் போது ஒலிபெருக்கி தேவைப்படலாம். ஆனால் அந்த சுற்றுவட்டாரத்துடன் அந்தச் சத்தத்தை நிறுத்திக் கொள்ளக் கூடாதா என்று பலர் கேட்கின்றனர்.

இந்தச் சத்தங்கள் சுற்று வட்டாரங்களில் உள்ள அநேகருக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகிறது. படிக்கும் பிள்ளைகள், நோயாளிகள் இன்னும் பல விதமானவர்களுக்கு இதனால் தாக்கம் ஏற்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நல்லூர் பிரதேச சபையில் ஆலோசித்ததாகவும், நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோயில் நிர்வாகிகள் பலரையும் அழைத்து இது பற்றி ஆலோசிப்பதற்கு அவர்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிகின்றது.

இது ஒரு நல்ல முடிவு என்று கருதலாம். சமூக நலன் கருதி சபையினர் தெரிவிக்கும் கருத்தினை கோயில் நிர்வாகிகள் ஏற்று நடப்பார்களானால் மகிழ்ச்சி தான்.

**ஒலி எழுப்ப வேண்டாம்**

யாழ். போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுகள் அமைந்துள்ள பகுதிக்கு முன்னால் பிரதான வீதியின் ஓரத்தில் ஓர் அறிவித்தல் பலகை வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வாகனங்கள் குழல் ஊதி ஒலி எழுப்பலாகாது என்பதற்கான நல்ல நோக்கத்தில் தான் இந்த அறிவித்தல் வைக்கப்பட்டுள்ளது. அது இருக்கும் இடத்தில் நின்று இரண்டு நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் தமிழ் பண்டிதர் மற்றவர் உயர்கல்லூரியொன்றில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்.

ஆங்கில ஆசிரியர் கூறினார்; " இந்தப் பலகையில் காணப்படும் ஆங்கில சொல்லைப் பார்த்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துப் போகலாம் போலிருக்கிறது" என்று.

"ஏன்" என்று மற்றவர் கேட்டார்.

"பின்ன என்ன, Horning என்பதற்கு Corning என்று எழுதிவைத்திருக்கிறார்கள்" என்றார் ஆசிரியர்.

ஹோர்னிங் என்றால் தமிழில் ஒலியெழுப்புவதைக் குறிக்கும். கோர்னிங் என்று ஒரு சொல் இருப்பதாகத் தெரியவில்லை. கோர்ன் என்று மட்டும் கூறினால் கோதுமை போன்ற தானியத்தைக் குறிக்கும். இவ்வாறு படித்தவர்கள் ஆங்கிலம் தெரிந்த பலரும் நடமாடும் இந்த இடத்தில் ஆங்கிலத்தைப் பிழையாக எழுதியிருக்கிறார்களே என்ற கவலை அந்த ஆசிரியருக்கு.

தமிழ்ப் பண்டிதர் ஆங்கில ஆசிரியரைப் பார்த்துக் கேட்டார்; "ஓர் ஆங்கில எழுத்து தவறாக எழுதப்பட்டிருப்பதற்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகத் துணிகிறீரே, அப்படிப் பார்த்தால் மூலை முடுக்குகள்தோறும் தமிழ் சொற்கள் கொலை செய்யப்பட்டுள்ளனவே அதற்காக நான் என்ன செய்வது. எத்தனை தடவைகள் தற்கொலை செய்துகொள்வது?" என்று.

ஒலி எழுப்புவது தடை செய்யப்பட்டிருப்பதாகத் தமிழில் எழுதியிருக்கிறார்கள். மக்கள் தங்களுக்குள் உரத்துக் கதைப்பது, வாகனங்கள் புறப்படுவது போன்றவையும் ஒலியெழுப்புவது தானே, வாகனங்கள் குழல் ஒலி எழுப்புவது தடை என்றல்லவா இருக்க வேண்டும் என்பது பண்டிதரின் வாதம்.

ஒன்றை நாம் மறந்து விடலாகாது. வர்த்தக நிறுவனங்கள் தங்கள் பெயர்களையும், பொருள்களையும் பரப்புரை செய்வதற்காக இவ்வாறு பொது இடங்களில் பெயர்களை எழுதி தம் பெயர்களுடன் காட்சிப் படுத்துகிறார்கள். இது பொது மக்களுக்கும் உதவியாகத் தான் இருக்கிறது. ஆனால் அது எந்த மொழியிலானாலும் எழுத் துப் பிழைகள் இல்லாமல் எழுதிவைப்பதே சிறப்பாகவிருக்கும். அதுவே பொது மக்களுக்கும் இந்தப் பிரதேசத்துக்கும் செய்கின்ற சேவை.✱

■ ரம்யன்

# அளவுக்கு மீறி நஞ்சாய் அல்ல அளவுடன் அமிர்தமாய் வேண்டும்

கண்ணுக்கு மையழகு கவிதைக்குப் பொய்யழகு, கன்னத்தில் குழியழகு, கார்கூந்தல் பெண்ணழகு என்று வகைப்படுத்தும் கவிஞர் வைரமுத்துவின் அழகழகான கவி வரிசைகள், இரசனைகள் ஆளுக்கு ஆள் வேறுபடும். ஆனால், அதன் தொடர்ச்சியாய் வரும் மழை நின்ற பின்னாலும் இலை சிந்தும் துளியழகு என்னும் கவிதைவரி அழகை காட்சிப் படுத்துகின்றது.

மழை பெய்வதற்கு முன்னால் மற்றும் மழை ஓய்ந்து முடிந்து கொண்டிருக்கும் வேளையில்தான் கவிஞனின் கவிதை மனம் இரசனையென்னும் மேகவெளியில் மெல்ல சிறகடித்துப் பறக்கின்றது. ஆங்காரமாய், ஓங்காரமாய் ஊழிப்பேயின் விசையோடு மழை சுழன்றடிக்கும் பொழுதுகளை காப்பியங்களும், கவிதைகளும் விவரித்திருக்கின்றன.

சூரிய வெப்பத்தால் பூமியிலும் கடலிலும் உள்ள நீர் ஆவியாகி மேகங்களாகத் திரண்டு மழையாக பொழிகின்றது என்று எழுத ஆரம்பித்தால் இது பள்ளிக் குழந்தைகளுக்குக் கூடத் தெரியுமே என்று பதட்டப்பட வேண்டாம்.

ஆனால் சூரிய வெப்பம், கடல், ஆவி , மேகங்கள், மழைத்துளி ஆகியவை பற்றி இன்னும் கொஞ்சமே கொஞ்சம் விரிவாய் தெரிந்து கொண்டால் யாரும் கோபித்து கொள்ளப்போவதில்லை.

பூமியில் உள்ள தண்ணீரில் 97 சதவீதம் கடலாக உள்ளது. மீதியுள்ள 3 சதவீதம் பனியாக, பனி மலையாக, நிலத்தடி நீராக, ஏரிகளாக, குளங்களாக உள்ளது. அதைப்போல் சூரியன் வெப்பத்தை நேரடியாக பூமிக்கு அனுப்புவதில்லை. அகச்சிவப்பு கதிர்கள் வழியாக வெப்பம் அனுப்பப்படுகின்றது. எந்தப் பொருளின் மீது பட்டாலும் அப்பொருளை சூடாக்கிவிடும் குணம் படைத்த அக்கதிர்கள் காற்றைச் சூடாக்கி அடர்த்தி குறைத்து மேலே அனுப்பிவிட்டு பின் பூமிக்கு வருவதால் பூமி சூடாகின்றது.

இந்த அகச் சிவப்பு கதிர் தண்ணீரை முட்டி ஆவியாக்கி, மேலே சென்று நீர்த் துளிகளாகி மேகமாகின்றது என கன்னங்கரேல் அல்லது கருஞ்சாம்பல் நிறத்தில் இருக்கும், மழையை உருவாக்கும் மேகத்துக்கு கியூமுலோ நிம்பஜ்ஸ் என்று பெயர்.

இடி மின்னலை உருவாக்கும் மேகத்துக்கு [illegible] என்றும் [illegible] என்றும் பெயர். சுருக்கமாகச் சொன்னால் ஆவியாகி துளிகளாகி, மேகமாகி, துளிகள் அதிரித்து, கனத்துப் பெரிதாகி மழையாக விழத் தொடங்குகின்றன.

வான வெளியில் வெப்பக் காற்றும் குளிர் காற்றும் எதிரெதிரே உரசிக் கொள்ளும் சந்திப்பின்போது குளிர்காற்று மண்டலத்தை வெப்பம் உறிஞ்சிக் கொள்கின்றது. இதன்மூலம் ஒருவகை வெப்ப முகப்பு உருவாகின்றது.

மேற்கிலிருந்து கிழக்காக வெப்பக்காற்று வீசும் பொழுது சக்தியிழந்த குளிர்காற்று பூமியை நோக்கி வரும் பொழுது நேரே விழுவதற்குப் பதில் சற்று சாய்வான கோணத்தில் விழுகின்றது. இது போன்ற சாய்வான, லேசான மழைத் துளிகளின் பொழிவை ஜலதோஷம் பிடிக்கும்வரை நனைந்து கொண்டே சந்தோஷமாய் தூறல் என அழைக்கின்றோம்.

பேரிடர் , இயற்கை சீற்றங்களின் போது அரசு அதிகாரிகளும், மக்களும் செயல்படும் முறை, அது சம்பந்தமான பயிற்சிகள், நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை பொறியாளர்கள் இனிமேல் வடிவமைப்புகளையும் உத்திகளையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

மனித சமுதாயம் தழைத்தோங்க இடைவிடாத, ஒழுங்கான தண்ணீர் சுழற்சி தேவைப்படுகின்றது. மனிதர்களின் கண்ணீர்த் துளிகள் காணாமல் போக வேண்டுமெனில் இந்த மண்ணுக்கு மழைத்துளிகள் கட்டாயம் தேவை. அளவுக்கு மீறி நஞ்சாய் அல்ல, அளவுடன் அமிர்தமாய் வேண்டும் மழைத்துளிகள்.✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKAN – GERMAN DEVELOPMENT COOPERATION

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

# VACANCIES

The Deutsche Gesellschaft für International Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GIZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

Development oriented emergency and Transitional Aid (DETA) Project will promote the reintegration of IDPs returning to their regions of origin in the vanni region, and is jointly supported by the Governments of Germany and Sri Lanka. The objectives of the project is to improve the livelihood of about 5000 returning IDP households located in the Kilinochchi and Mullaitivu districts. To achieve its objectives, the project intends to work in the following intervention areas: (i) food production (ii) community infrastructure rehabilitation and increasing self-help capacity of the community (iii) support for Fisherman and (iv) Education sector support.

GIZ-DETA invites applications from dynamic and committed professionals for the below positions.

## ENGINEER (CONSTRUCTION)

### Required qualifications, competences / skills and experience

- Degree from a recognized Technical College or professional Bodies on building / construction technology;
- At least 7 years of working experience in recognized private companies or government institution related to constructions;
- Excellent interpersonal and ability to take a lead role in the project work;
- Proven experience in managing personnel, contractors and worksite staff;
- Willingness to travel to Kilinochchi and Mullaitivu;
- Strong computer skill (Ms office);
- Excellent commend of English and Tamil both verbally and in writing.

### Responsibilities

- Identify, plan and manage all activities related to construction of building under the DETA Vanni project;
- Identify, plan, and manage restoration of damaged infrastructures such as repair of schools, rehabilitation / cleaning of wells and sanitary facilities and other small community infrastructures;
- Prepare or evaluate estimates, bill of quantities and other costs submitted by the contractors in order to ensure estimates are prepared properly qualitative constructions of infrastructures;
- Carry out feasibility assessments of the suitability of the sites of constructions, accessibilities to beneficiaries and other requirements to fulfill the purpose of the infrastructure;
- Identify which infrastructure projects will be sub-contracted (larger rehabilitation work) and which will be directly implemented by the project in cooperation with the beneficiary communities (minor repair work);
- Plan and maintain an effective oversight function on the construction sites to ensure quality standards and time commitments to complete the construction;
- Maintain cordial relationship, coordination and collaboration with project staffs, officials of the relevant government institutions and beneficiary communities to ensure smooth functioning of the construction division;
- Maintain of team spirit and team work with other staff of the project and ensuring proper reporting to the project management;
- Coordinate and work closely with contractors.

## TECHNICAL ASSISTANT

### Required qualifications, competences / skills and experience

- Diploma from a recognized Technical College or Professional Bodies on building / construction technology;
- At least 3+ years of working experience in recognized private companies or government institution related to constructions;
- Willingness to travel to Kilinochchi and Mullaitivu;
- Strong computer skill (Ms office)
- Good command of English and Tamil both verbally and writing.

### Responsibilities

- Take measurement at the site and prepare working drawings;
- Assist in taking measurement from working drawings, check and prepare BOQ, rates and estimates;
- Prepare material and labour schedules;
- Assist in setting out buildings;
- Assist in the preparation of work plans for the projects;
- Assist to prepare phase programme and progress chart;
- Prepare weekly progress report;
- Check stock book and tool books;
- Check materials and labour schedule and maintain daily record of control;
- Maintain cordial relationships, coordination and collaboration with project staffs, officials of the relevant government institutions and beneficiary communities to ensure smooth functioning of the construction division;
- Coordinate and work closely with contractors.

## FIELD ASSISTANT CUM TRANSLATOR

### Required qualifications, competences / skills and experience

- Basic degree in translation studies;
- At least 3+ years of professional experience working as a Translator / Interpreter with the public sector, local government, non – governmental sector or international organizations;
- Excellent communication and report writing skills;
- Willingness to travel to Kilinochchi and Mullaitivu;
- Strong computer skill (Ms Office)
- Excellent command of English and Tamil Language, knowledge of Sinhala advantageous.

### Responsibilities

- Translate technical related documents (including training material) to English and / or Tamil
- Interpret from English to Tamil and vice versa during field visits
- Handle day to day office correspondence

Qualified applicants must submit an updated CV including email & telephone contacts of two professional referees to GIZ-DETA Project Office, No.17, Kandy Road, Jaffna on or before 25th November 2011

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை இராமநாதன்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர் யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, துணைவியைப் பிறப்பிட மாகவும் கந்தர்மடம் மணற்தறையை வசிப்பிட மாகவும் தற்போது இலண்டனில் வசித்தவரு மாகிய செல்லத்துரை இராமநாதன் 10.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பொன்னையா - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானரத்தினம், நடராசா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் கஜானனன், தயாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகா, சபேசன் ஆகியோரின் மாமனாரும் லகுமிரன், கபிலாஸ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பற்குணசிங்கம் (மலேசியா) சற்குணசிங்கம் (மலேசியா), புஸ்பராணி, கமலாதேவி, புவனேஸ்வரி மற்றும் சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19, மணற்தறை ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 00442084298720*

தகவல்: பொ.சிவஞானம் *(மைத்துனர்)*

(10351)(1,6,7)

## SPOT ADMISSION 2011-11-16

### STUDY IN GERMANY



O/L - A/L சித்தி பெற்றுள்ள மாணவ மாணவிகளுக்கு 3 வருடம் இலவசமாக ஜேர்மன் சென்று பட்டப்படிப்பினை முடிப்பதுடன் ஜேர்மன் Citizen ship யும் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பமாகும். இது சம்மந்தமான நேரடி பதிவினை எதிர்வரும் 2011.11.16 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி அளவில் சமூகமளித்து நீங்களும் பதிவினை பெற்றுகொள்ள முடியும். இந்நிகழ்ச்சிக்கு ஜேர்மனியிலுள்ள அதிபர்கள் நேரடியாக கலந்து கொள்ள இருப்பதால் தயவு செய்து உங்களது O/L -A/L ஆவணங்களுடன் மாணவ மாணவிகள் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் தெரிவிக்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள 0772 955 977

(4 YEARS FREE STUDIES AND FIRST YEAR ONLY PAY THE COLLEGE FEES)

NO NEED IELTS O/L & A/L pass

**INTERNATIONAL CITY COLLEGE**

No-07,2nd floor, W.A,Silva Mawatta,wellawatha, Colombo-06
E-mail: citycollegelanka@gmail.com Web: citycollegelanka.com
0114 594 104 - 077 12 50 789 - 0772 953 963 Fax:0112 582 722

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25 - 02 - 1949

இறப்பு 25 - 10 - 2010

அமரர்

### மருதலிங்கம் பார்வதி

காவியங்கள் உள்ளவரை கன்னித்தமிழ் அழிவதில்லை
உருக்குலைந்த கோட்டையினை சரித்திரங்கள் மறப்பதில்லை
"அம்மா"
எம் உயிர்மூச்சு உள்ளவரை உன் உறவு முடிவதில்லை
திருமுலையின் அமுதமது எம் உடல் உள்ளவரை உறைவதில்லை
உன் உருவம் எம் விழிகளில் உறங்கும்வரை மறைவதில்லை
இறுதிவரை உன் வழியில் எம் பயணம் தொடர்ந்திடுவோம்
உன் திரு வடியில் ஆணை அம்மா
திருமகளே எமை காத்திடம்மா.

தகவல் குடும்பத்தினர்.

(10347)(2,6,7)

## Dr.Pimple + Care

TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic



முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road. Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

# கடும் மழையால் முல்லைத்தீவில் மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு

முல்லைத்தீவில் பெய்து வரும் கடும் மழை காரணமாகப் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த இந்த மக்களில் பலர் தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். இந்த வீடுகள் மழை மற்றும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தாழ்வான இடங்களிலுள்ள இத்தகைய வீடுகள் வெள்ள நீரால் சூழ்ந்து காணப்படுகின்றன. அத்துடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் இவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக மாறியுள்ளது.

மேலும் சிற்றாறுகள் பெருக்கெடுத்து ஓடுவதால் மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியே செல்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதிகளும் மோசமான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்துக்கள் முற்றாகவே சீரழிந்து காணப்படுகின்றன.

சில கிராம மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட வெளியே செல்ல முடியாது அவலப்படுகின்றனர்.

வைத்தியசாலைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்வதிலும் இவர்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர். கடும் மழை காரணமாக இவர்களால் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்ததால் இவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் மழைகாரணமாக இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங் களும் நிறுத்தப்பட்டுள்ளதால் தமது அன்றாட உணவுக்கே இவர்கள் அல்லாடுகின்றனர். கையில் பணமில்லாததால் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கும் சக்தியும் இவர்களிடம் இல்லை. இந்த மக்களின் பரிதாபகரமான நிலைமை உணர்ந்து தொண்டு நிறுவனங்கள் தமக்கு உதவ வேண்டுமென்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.(க)

## கமநலசேவை நிலையங்கள் பொலிஸாரிடம்; அவற்றின் நிர்வாகச் செயற்பாடுகள் பாதிப்பு

கிளிநொச்சி, நவ.13

வவுனியா வடக்கு கனகராயன்குளம் கமநலசேவை நிலையம், கிளிநொச்சி முழங்காவில் கமநல சேவை நிலையம் என்பன பொலிஸாரின் பாவனையில் இருந்து வருவதால் இவற்றின் நிர்வாகச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வவுனியா வடக்கு கனகராயன்குளம் கமநல சேவை நிலையக் கட்டடம் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பொலிஸாரின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

இதனால் கமநல சேவை நிலையச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுவருவதுடன் விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டிய மானிய உரங்களை களஞ்சியப்படுத்துவதிலும் விவசாய நடவடிக்கைகளுக்கான உழவு இயந்திரங்களைப் பராமரிப்பதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியநிலை காணப்படுகின்றது.கமநல சேவை நிலைய உழவு இயந்திரங்கள் யாவும் தனியார் வீடுகளில் விடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இவற்றைக் காவலாளிகள் மூலம் பராமரிப்பதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன. கமநலசேவை நிலைய கட்டடத் தொகுதியைக் கடந்த மாதம் 25 ஆம் திகதி பொலிஸார் உரியவர்களிடம் ஒப்படைப்பதாகக் கூறிய போதும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

இதேபோன்று முழங்காவில் கமநல சேவை நிலையக் கட்டடமும் பொலிஸாரின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. மேலும் நிர்வாக அலகுகள் வேறு இடத்திலும் களஞ்சிய பகுதிகள் வேறு இடத்திலும் இயங்கி வருகின்றன. இதனால் நிர்வாகச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

எனவே இவ்விரு கமநல சேவை நிலையங்களையும் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

## கசிப்பு விற்ற மூவருக்கு ரூ. 35 ஆயிரம் அபராதம்

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட மூவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சி மருதநகர்ப் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடமைகளுடன் வைத்திருந்த ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினர்.

இவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை முரசுமோட்டைப் பகுதியில் 5 போத்தல் கசிப்பைத் தனது உடமைகளுடன் வைத்திருந்த மற்றொருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கிளிநொச்சி மருதநகர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபரொருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (க-6)

## மீண்டும் ஒரு மீள்குடியமர்வு...



கடமை முடிந்தது: வவுனியா மெனிக்பாம் முகாமிலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கென புதுக்குடியிருப்பு கோம்பாவிலில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீடுகளே இவை. (6)

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை

துணுக்காய் கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலையில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று இடம்பெறவிருப்பதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் அறிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவையின் போதுதேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் என்பனவற்றுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் முதியோர் அட்டைகள், பொலிஸ் அறிக்கைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

மேலும் பிரதேச சபையால் வழங்கப்படும் உரிமங்கள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்படவுள்ளது. இங்கு தேவைப்படும் சகல புகைப்படங்களுக்குமான செலவையும் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் வழங்கும்.

பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நடமாடும் சேவையில் அயற் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இதைப் போன்ற நடமாடும் சேவைகள் 16 ஆம் திகதி ஐயங்கன்குளத்திலும், 22 ஆம் திகதி மல்லாவி திருநகர் கிராமத்திலும் இடம்பெறுமென துணுக்காய் பிரதேச செயலர் மேலும் அறிவித்துள்ளார்.(க-410)

# கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

அக்கராயன், நவ.13

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நோயாளர்கள் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், வன்னேரிக்குளம் போன்ற முக்கிய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணியில் இல்லாமை மற்றும் பருவ மழை தொடங்கியிருப்பதன் காரணமாகவே பெருமளவு நோயாளர்கள் கிளிநொச்சி பொது மருத்துவ மனைக்குப் படையெடுக்கின்றனர்.

பூநகரி, ஜெயபுரம், வன்னேரிக்குளம், அக்கராயன், வட்டக்கச்சி, பரந்தன், தருமபுரம், இராமநாதபுரம், உருத்திரபுரம், கோணாவில், கிளிநொச்சி நகரம் போன்ற இடங்களிலிருந்து பெருமளவு நோயாளர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு வருவதன் காரணமாகக் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, நோயாளர் விடுதிகள் என்பன நிரம்பிக் காணப்படுகின்றன.

மேலும் வெளிநோயாளர் பிரிவில் நாள்தோறும் 1000 வரையான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஏனைய மருத்துவமனைகளில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறையை நிரப்புவதன் மூலம் கிளிநொச்சிப் பொது மருத்துவமனையின் நோயாளர்கள் தொகையைக் கட்டுப்படுத்தலாம்.

மீளக்குடியமர்ந்த தாய்மார்கள் தமது கைக்குழந்தைகளுடன் பணம் செலவு செய்து பயணம் செய்து நீண்ட நேரம் காத்திருந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

மல்லாவிப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்களும் மேலதிக சிகிச்சைக்கென கிளிநொச்சி வருகின்றனர். (க-410)

## மீண்டும் பெரும்போக செய்கையில் முல்லைத்தீவு விவசாயிகள் மும்முரம்

முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடுமையான மழை வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாமதமாகப் பெய்த மழை காரணமாக விவசாயிகள் காலம் தாழ்த்தியே நெல் விதைப்பில் ஈடுபட்டனர். நெற்பயிர்கள் ஓரளவு முளைத்துவரும் நிலையில் தற்போது கடும் மழை பெய்து பெருவெள்ளம் ஏற்பட்டதால் அந்தப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

இதனால் மீண்டும் நெல்லை விதைக்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பயிர்கள் முளைத்து வரும்போது மீண்டும் பெருவெள்ளம் ஏற்பட்டால் இந்தப் பயிர்களும் அழிவடையும் நிலை ஏற்படும்.

காலநிலையின் மாற்றம் காரணமாகத் தமது விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் எஞ்சியுள்ள வயல்களில் நிற்கும் நெற்பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் விவசாயிகளின் நிலை பரிதாபகரமாக உள்ளது. (க-500)

## பேருந்து சாரதிக்கு அபராதம்

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சி ஏ-9 வீதியில் ஆபத்தான முறையில் பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து சாரதிக்கு 2 ஆயி ரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கடந்த 4 ஆம் திகதியன்று தனியார் பேருந்து ஒன்றில் மிகவும் ஆபத்தான நிலையில் பயணிகளை ஏற்றிச் சென்றதாகக் கூறி கைது செய்யப்பட்ட ஒருவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டவேளை இவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுள்ளது. (6)

## பாலவேலைகளோ அரைகுறையில் பயணிக்கும் மக்களோ அவலத்தில்

கிளிநொச்சி, நவ.13

உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால், இரத்தினம் பண்ணை முதலாம் வீதியில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுவரும் பாலத்தின் வேலைகள் நிறைவடையும் வேளையில் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் மேற்படி வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பயணம் செய்ய முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, மேற்படி பாலத்தின் வேலைகள் நடைபெற்று முடியும் கட்டத்தை நெருங்கிய வேளையில் வவுனியாவில் இருந்து வந்த ஒப்பந்தகாரர்கள் தமக்கான ஒப்பந்தப் பணத்தைக் குறிப்பிட்ட நிறுவனம் செலுத்தவில்லை எனவும் அதனாலேயே பால வேலைகளை இடைநிறுத்திவிட்டு வெளியேறுவதாகவும் கூறி அந்தப் பணியைத் தொடராது வெளியேறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யு.என்.டி.பி நிறுவனத்தைச் சேர்ந்த அந்த வேலைகளுடன் தொடர்புடையவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது தமது நிறுவனம் உரிய ஒப்பந்தப் பணத்தை வழங்கியுள்ளதாகவும் மழை காரணமாகவும் ஒப்பந்தகாரர்கள் வேறு வேலைகள் செய்வதாலுமே தான் மேற்படி பால வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (க-426)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆங்கில பாட சிரேஷ்ட ஆசிரியர் திருமதி C.Y. இராமகிருஷ்ணன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிசிலியா றொபட் றிக்கஸ்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம். (சி/5746) (4-6-7)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



கொழும்பு BMICH மண்டபத்தில் 07.11.2011 அன்று உயர் கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம்பெற்ற

செல்வி **துஷ்யந்தினி கணபதிப்பிள்ளை**

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்ந்திட பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: சுபா, வில்சன், ரிஷி, கௌஷி, அப்பா, அம்மா, அண்ணாமார். (10291) (4-6-7)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr. P. ஆறுமுகம்**

T.P-0719315664,0777569205

**யாழில் 16.11.2011 வரை மட்டுமே!**

பதிவுக் கட்டணம் ரூபா 300/

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். குழந்தைப் பேறின்மை - பல பேருக்குக் குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**கமால் ருரிஸ்ற் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)**
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில், 392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

யா/ கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலய ஆசிரியை திருமதி லோசனாராணி சிவசேகரம் அவர்களின் அன்புத் தந்தை

**நாகலிங்கம் சரவணமுத்து**

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் ஆசிரியர் லோசனாராணி அவர்களுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் துயரில் நாமும் பங்கு கொண்டு ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்,
கைதடி. (சி/5739) (4-6-7)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி வீதியில் வீடு, காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776619675 (4-6-7)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:0776146434

## விற்பனைக்கு

தனிப்பட்ட பாவிப்பில் உள்ள LG இரண்டு கதவுகள் உள்ள குளிர்சாதனப் பெட்டி, Safari 48CC பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள், Stand விசிறி வேறு சில பொருள்களும் விற்பனைக்கு உண்டு.
G.R. மருதம் J.P, 8/1 அம்மன் வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 0212226166 (10248) (6-7-8)

## மணமகள் தேவை

மலேசியாவில் இருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பொறியியலாளருக்கு 30-40 வயதுக்குட்பட்ட ஆங்கிலம் பேசக் கூடிய மணமகள் தேவை.
தொடர்பு: 006 012 2822117- Mobile
அல்லது 0060379 560 540
E.mail. pnmal1@yahoo.co.uk (10317) (5-7-8)

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் பாகவும் ஏ-9 வீதிக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக் குண்டு.
தொடர்பு:0775834770 (10286)(3,7,8)

## தேவை

பளை, எழுதுமட்டுவாள் பகுதி யில் மின்சார வசதியுடன் கூடிய தென்னங்காணி அல்லது வெறுங் காணி தேவை. தொடர்பு:
(10322) (6-7-8) 0776653875, 0778470476

## காணி விற்பனை

நல்லூர் கோவில் வீதியில் முன்னாள் ICRC வாகன தரிப்பிடமாக பாவிக்கப் பட்ட 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
071 8474384 (காலை 7 மணிக்கு முன்னர் மாலை 5 மணிக்கு பின்னர்) (10261) (6-7-8)

## வீடு, காணி விற்பனைக்கு

மல்வம், உடுவிலைச் சேர்ந்த பகுதி யில் அமைந்துள்ள சிறிய வீட்டுடன் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0775942396, 0214916283
(10271) (6-7-8)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மஞ்சவனப்பதிக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட பெரிய மாடி வீடு அரச/அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: எஸ்.சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம்.
0770464298,0213001295 (10251) (3,5,8)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1972 ரேவதி 2 இல் குற்றமற்ற செவ்வாய், கிரகபாவம் 28¼ MSc ஆசிரியருக்கு பெற்றோர் அரச திணைக்களம் or ஆசிரியர் சேவையிலுள்ள சிவந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். (வயது வித்தியாசம் 6 இலும் கூட) ஜாதகம், புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். (குடும்பவிவரம், முகவரி, தொலைபேசி இலக்கம் குறிப்பிடவும். ) பொருத்தமற்றவை மீள திருப்பி அனுப்பப்படும்.
விளம்பர இல:- 4194 C/o உதயன்
36, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
(10305) (6-7-8)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் நான்கு பரப்புக் காணியும் வீடு வளவும் விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல- 0774404269 (6-7-8)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நிறை கூடிய புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறொயிலர் சுத்தம் செய்தது 01 கிலோ கிராம் ரூ.470/= மட்டுமே)
காலை 06.00 மணி தொடக்கம் இரவு 08.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். யாழ்ப்பாணம். (4-6-7)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர் **நல்லலிங்கம் ஜெயராமலிங்கம்**
[வருமானப் பரிசோதகர் R I நகரசபை வவுனியா]



தோற்றம்: 01.07.1950

மறைவு: 14.10.2011

கடந்த (14.10.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (நகரசபை விடுதி வவுனியா) நடை பெறும். தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுகயீனத்தின் போதும் இறுதிக் கிரியையின் போதும் சுக துக்கத் தொடர்புகளை மேற்கொண்டவர்களுக்கும் நேரடியாக உதவி செய்தவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகஏற்றுக் கொள்ளவும்.

0779485364,
0778378608 (Foc) (2-6-7)

குடும்பத்தினர்,
நகரசபை விடுதி, வவுனியா.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
16. 1.1933

மறைவு
14.10.2011

**திருமதி மார்க்கண்டு புஸ்பவதி** (குஞ்சம்மா)

கடந்த 14.10.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி மார்க்கண்டு புஸ்பவதி (குஞ்சம்மா) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

113/1, பாரதி வீதி, கச்சேரி,
யாழ்ப்பாணம். (4-6-7)(சி/5743)

குடும்பத்தினர்.


**MIGRATE TO CANADA**

**PERMANENT RESIDENCY**
Apply through our fast track process

**STUDENT VISAS**
Schools/Colleges/Universities

Educate your child in a Canadian School (Grade 1 to 12)
Get the best higher education from one of the most prestigious Colleges or Universities in Canada

*Permanent Residency after Graduation !*

Contact : 011 2501675 , 011 2503281, 011 2592551
Hot Line : 0777 890841 E-mail : alkarrim@slt.lk
www.al-karrim.com

**AL KARRIM LANKA CONSULTANTS (PVT) LTD**
IMMIGRATION CONSULTANTS SINCE 1990
126, Maya Avenue, Colombo 6.


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, சோமசுந்தரம் அவன்யூவில் நான்கு அறைகள், இணைந்த குளியலறைகள், சமையலறை மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773742934 (10175) (2-6)

## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, உரும்பிராயில் ' சைவ தமிழ் வித்தியா சாலைக்கு அடுத்ததாகவும், கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையிலும் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள 8 படுக்கை அறைகளுடனான மாடி வீடு ஒன்று விற்பனைக்குள்ளது. தொடர்பு: குகன் தொ.பே.எண்: 004917220790 42 ஜெகன் தொ.பே.எண்: 00492132769303, 0777314760 (சி/5983)(3,7,8)


இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

V Care

**DR.HAIR**
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலை முடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-24,25 ஆகிய திகதிகளில் முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாட்சி ஆனாலும் சரி குடியாட்சி ஆனாலும் சரி தர்மத்தின் வழி நடக்க வேண்டும்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

இலக்கியக்



திருக்குறளில் "வழி நோக்கான" என்ற சொற்றொடர் வருகிறது. திருக்குறள் சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் கொண்ட ஒப்பற்ற நூல் என்பதை உலகு அறியும்.

இந்தத் தொடர் அரசனுக்கு அறிவு கூறுவதாக அமைந்துள்ளது. இன்றைய மக்களாட்சித் தலைவர்களுக்கும் பொருத்த மானது.

ஆணவம் கொண்ட அரசன் தர்மத்தின் வழியை நோக்கான். ஐம்பெரும் குருவும் எண்பேராயமும் சொல்வதையும் ஆணவம் காரணமாக ஆராய மாட்டான். தன் முன்னோர் ஆண்ட வழியும் நோக்கான்.

அதேபோலத்தான் ஜனநாயக ஆட்சித் தலைவனும் ஆட்சியில் அமர்ந்தபின் தர்மத்தை நோக்கான். பலவழியிலும் பெரியோர் சொல்லும் அறிவுரைகளை ஏற்கமாட்டான். மக்களுக்கும் ஆட்சிக்கும் தருமம் என்ற திசையைக் காட்டும் திசை காட்டியாக விளங்கும் பத்திரிகைகள் கூறும் நல்லவற்றையும் ஏற்கமாட்டான்.

" வழிநோக்கான் வாய்ப்பன
செய்யான் பழிநோக்கான் பண்பிலன்
பற்றார்க்கினிது"

ஆணவம் கொண்ட அரசன் தர்மத்தின் வழி நோக்கான் தர்மம் கூறுவதைச் செய்யான். அவனிடம் மனிதப்பண்பு இராது. அவன் தனக்கு வரும் பழியை நோக்கமாட்டான். இவனுடைய பகை, பகைவர்க்கு இனிமையாக இருக்கும். ஏனென்றால் இவன் தானே அழிந்து விடுவான்.

பாஞ்சாலியின் துகில் உரிய நினைத்த போதே துரியோதனன் தனக்கு அழிவைத் தேடிக் கொண்டான். தர்மத்தின் வழியையே நோக்கும் தருமரும் தம்பியரும் பெரு வெற்றி காண்கிறார்கள்.

மக்களாட்சியிலும் தாங்கள் பெரும்பான்மையினர் என்ற நிலையிலும் சிறுபான்மையினரைத் தர்மத்தின் வழி நோக்காது அழிப்பவர்கள் துரியோதனன் முடிவையே காண்பார்கள்

நல்ல அரசன் எப்படி இருப்பான் என்பதையும் திருவள்ளுவரே விளக்குகிறார்.

நல்ல அரசன் தர்ம வழியில் ஆட்சி செய்வான். அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறியில் நிற்பான். இப்படிப் பட்ட அரசன், பிறப்பால் மனிதன் ஆயினும் செயலால் கடவுளாகக் கருதப்படுவான்.

" முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்".

இது இன்றைய ஜனநாயக ஆட்சிக்கும் பொருந்தும். இனவேறுபாடு மத வேறுபாடு கருதாமல் எல்லா மக்களையும் நாட்டின் செல்வங்கள் எனக் கருதி நடக்கும் ஆட்சித்தலைவன் தெய்வமாகவே மதிக்கப்படுவான்.

பாண்டியன் ஆட்சியில் வாழ்ந்த வணிகன் ஒருவன் வணிகம் கருதி வெளிநாடு செல்ல நினைத்தான். ஒரு நாள் இரவு தன் கருத்தை தன் மனைவிக்குத் தெரிவித்தான். அதற்கு அவனுடைய மனைவி "உங்கள் துணையில்லாமல் நான் எப்படித் தனிமையில் இரவைக் கழிக்க முடியும் என்று அச்சத்துடன் கேட்டாள். அதற்கு வணிகன் " நாம் பாண்டியன் ஆட்சியில் வாழ்கிறோம். இங்கு திருடர் பயமோ கொடியோர் பயமோ இல்லை" என்று துணிந்து நம்பிக்கையுடன் கூறினான்.

அந்த வேளை மாறுவேடத்தில் சென்ற பாண்டியன் செவிகளில் இந்த உரையாடல் கேட்டது.

தன் ஆட்சி மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை அவனுக்குப் பேரு வகையை அளித்தது.

மக்கள் தன் ஆட்சிமீது கொண்ட நம்பிக்கை சிறிதும் குறையக்கூடாது என்று கருதிய பாண்டியன் அந்த வணிகன் வெளிநாடு சென்று திரும்பும் வரையில் அவன் வீட்டுக்குக் மற்றவர் அறியாதவாறு மாறுவேடத்தில் நின்று காவல் புரிந்தான். அவன் தான் காவலன். அவன் தான் இறைவன்.

அரசருக்கு வேண்டிய தனிச்சிறப்பு மக்கள் யாரும் நினைத்தவுடனே சென்று தமது குறையைக் கூறக் கூடிய எளிய இயல்புடன் இருத்தல் ஆகும்.


அத்துடன் மக்கள் அஞ்சாமல் அணுகுவதற்குரிய இன்சொல் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

" காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன அல்லனேல்
படிப்போனவர்களுக்கும் குறை.

வேண்டிப் போனவர்களுக்கும் காண்பதற்கும் எளியவனாகவும் அவர்களிடம் இன் சொல் உடையவனாகவும் இருந்தால் அவன் நாட்டை மற்ற நாடுகளிலும் உயர்வாக உலகு மதிக்கும்.

முடியாட்சியாக இருந்தாலும் குடியாட்சியாக இருந்தாலும் ஆட்சியில் தர்மம் இருந்தால் மக்கள் நல்வாழ்வு வாழ்வர். ஆட்சியாளரின் நடுவுநிலைமை இன,மத,பேதம் இல்லாது அமைதியான நல்வாழ்வுக்கு வழிவகுக்கும். ✱

# பண்பைத் தொலைக்காத பணம்



நெடுந்தீவு மகேஷ்

சிறுகதை

அன்று காலையிலிருந்தே பெய்த மழை அடங்கி இருந்தது. சூரியன் தன்னைச் சூழ்ந்த அந்தக் கருமுகில்களைக் கலைத்துப் பூமியைப் பார்த்தான். இராமசாமி குடிசையைவிட்டு வெளியே வந்து முற்றத்தில் இறங்கினான். மழையில் நனைந்து ஈரம் படிந்த நிலத்தில் இராமசாமியின் நிழல் குறுமுனியாகி மேற்கு நோக்கி நீண்டு கிடந்தது. இராமசாமியின் இரண்டு பெண் பிள்ளைகளும் சனிக்கிழமையானதால் பள்ளிக்குப் போகவில்லை. வீட்டுக்கு உள்ளேயே தாயின் அருகில் அமர்ந்திருந்தார்கள். பாடசாலைக்குப் போகும் நாள்களில் அங்கே அந்த உணவுத்திட்டத்தின் செயற்பாட்டில் ஏதாவது சாப்பிடக் கிடைக்கும்.

இன்று அவர்கள் வீட்டிலே நிற்கிறார்கள். அந்தச் சிறுசுகளுக்கு எதையாவது உண்ணக் கொடுக்கலாம் என்றால் வீட்டிலோ எதுவுமில்லை. இராமசாமியிடமும் காசில்லை. நாள்க் கூலிக்கு வேலியடைத்தோ, வயலில் வேலை செய்தோதான் அவனும் அவன் குடும்பமும் வயிற்றை வளர்த்து வந்தது. உழைக்கும் பணத்தில் மிச்சம் என்று சேர்த்து வைக்க இயலாத வறுமையின் கணக்கு.

மனைவி மங்களம் போரின் வடுக்களால் எழுந்து உற்சாகமாக நடமாட இயலாத நிலையில் அவளின் தேவைகளுக்குப் பலவேளைகளில் பிள்ளைகளோ இராமசாமியோ உதவினாற்தான் உண்டு. பாயும் படுக்கையும் அவளை ஓரிடத்தில் இருத்தி வைத்துவிட்டன. அவளுக்கான பணிவிடைகளில் எல்லோருமே எப்போதுமே இணைந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதில்லை. எனினும் தன் வேலையைத் தானே செய்யும் துணிவு அவளிடத்தில் இருந்தது. அசைந்தசைந்து அவற்றை நிறைவேற்றிக் கொள்வாள்.

மனைவியின் மீது இராமசாமி கொண்டிருக்கும் அன்புக்குப் பஞ்சமில்லை. அதனாலேயே விடிந்தால் பொழுதுபட்டால் வேலையும் உழைப்பும் என்று ஓடித்திரிந்தான். அத்துடன் பத்தும் பன்னிரண்டுமான வயதைக் கொண்ட பெண் பிள்ளைகளின் கல்வியில் நிறைவே அவன் கரிசனை கொண்டிருந்தான். உழைப்பில் பெரும் பகுதியைப் பிள்ளைகளுக்காகவே செலவு செய்தான். இன்றைய நாள், பிள்ளைகளின் பசியோடும் மனைவி மங்களத்தின் வருத்தத்தோடுமே விடிந்திருந்தது. என்ன செய்யலாம் அவர்களின் சாப்பாட்டுக்கு வழிகாண வேண்டுமே! மனம் அந்தரித்தது. மங்களம் பாயிலிருந்து எழுந்து நிமிர்ந்தாள்.

முதலாளி முத்தையரசு காரும் பங்களாவும் என்று வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் வேலையாள்களை இருத்தித் தன் குடும்பத்தைத் துயரம் தொடாமல் அலங்கரித்திருந்தார். அவரது உதவிதான் அந்தப் பிரதேச மக்களுக்கு என்றாலும் எல்லா நாள்களிலும் எல்லா வேளைகளிலும் எல்லோருக்கும் உதவுதல் என்பது இயலாததுதானே. இன்று வேலையுமில்லை, கூலியுமில்லை யாரிடமாவது கொஞ்சம் காசு கடன் கேட்கலாமா என்ற எண்ணத்தோடு வீட்டில் சொல்லிக் கொள்ளாமலேயே வீதியை நோக்கி நடந்தான்.

அவனின் எண்ணங்கள் முத்தையா முதலாளியிடமிருந்து தேவையான காசைக் கடனாகப் பெற வேண்டுமே என்பதுதான், அது கிடைக்கும்! கிடைத்தால் பிள்ளைகளுக்குப் பாணோ பணிசோ வாங்கிக் கொடுக்கலாம். மங்களத்துக்குக் கொஞ்சம் நல்லதாகக் கடையில் ஒரு சோற்றுப் பாசலை வாங்குவோம் என எண்ணங்கள் நீண்டன.

மழைக்கால வெயில் சுள்ளென்று எறித்தது. படலையைத் திறந்து வீதிக்கு வந்ததுமே நடையின் வேகத்தை அதிகரித்தான். எழுந்தும் விழுந்தும் நினைவில் விரியும் ஆசைகளால் - தேவைகளால் அவன் பயணிக்கும் பாதையின் வண்ணத்தையே பார்க்காத கண்கள் சிறிது தூரம் சென்றதுமே திடீரென எதையோ கண்டுவிட்ட ஆவலில் விழித்துக் கொண்டன.

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக் கொண்டு கொடுக்கும் என்பார்களே! அங்கே தெருவில் மடிப்புக் குலையாமல் ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டு அந்தக் கிறவல் பரவிய செம்மண் றோட்டில் கிடந்தது. அங்குமிங்கும் கண்களை ஓடவிட்ட இராமசாமியின் பார்வையில் யாருமே தென்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 நவம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 13.11.2011 முதல் 19.11.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீண் அலைச்சல், செலவு உருவாகும். சில வேலைகளைச் செய்ய மறந்து அதனால், அவதிப்படலாம். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாயும். பிள்ளைகள், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் தொந்தரவுகள், சிரமங்கள் உண்டாகலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளுக்கு ஆளாவதால், எரிச்சல் அடையலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில், கடும் சிரமங்களை எதிர்கொள்ளலாம். கொடுக்கல் வாங்கல்களிலும், நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள, கடும் சிரமப்படலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### இடபம்

வேலை நெருக்கடிகள் உண்டாகும். தொழில் ரீதியான பண வரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். கடன் மிகுதிகள் வசூலாகி, திருப்தி அடைவீர்கள். வீண் அலைச்சல்கள் அதிகரிக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். கணவன்-மனைவி உறவில், விரிசல்கள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். வாகனங்கள் வழியில், எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தாய் வழியில் எதிர்பாராத செலவுகள் உருவாகலாம்.ண் பேச்சுக்களால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### மிதுனம்

உடல் உபாதைகளால், முடியாத காரியங்களை நினைத்து வருத்தம் அடைவதால், மனச்சோர்வு அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள், வெற்றிகரமாக முடியும். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எந்த விடயத்திலும் தன்னம்பிக்கையோடு, துணிச்சலாகச் செயற்படுவீர்கள். பெண்கள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வாகனங்களால் பிரச்சினை உருவாகலாம். தேக ஆரோக்கிய விடயங்களில், அக்கறை அவசியம். தேவையற்ற அலைச்சல் உண்டு. செலவு, அலைச்சல் உண்டு. சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி கேட்கலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### கடகம்

எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். பல நாள்களாக பார்க்காத சிலரை, திடீரெனப் பார்க்கலாம். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். தந்தை வழியில் அலைச்சல், திரிச்சல் உண்டாகலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவர். சகோதரர்கள் சந்திப்பால், மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகளை முன்னிட்ட கவலைகள் அடிக்கடி ஆள்கொள்ளும். காரிய வெற்றி உண்டு. குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். ஆதாயகரமான பண வரவுகளைப் பெறலாம். குழப்பம், தடுமாற்றம் நேரும். சில பிரச்சினைகளை நினைத்து அதிக கவலைப்படுவீர்கள். உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். நல்ல செய்தி கேட்கலாம். மேலும், அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால், அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம்.

### சிங்கம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மற்றவர்களைப் பார்த்து பொறாமை, ஆதங்கம் அடைவீர்கள். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்றுக்கு, அதிகமாகச் செலவாகலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தடைப்பட்டிருந்த சில வேலைகளை சுறுசுறுப்பாக முடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உருவான தொல்லைகள் குறைந்து, அவர்களால் நன்மை அடையலாம். இழுபறியாக இருந்த பத்திரப் பதிவுகள் நடக்கலாம். எந்த விடயத்துக்கும் உடனே கோபம் கொள்ளாமல், பொறுமையாகச் செயற்பட வேண்டும். சகோதரர்களால் சிரமங்கள் உண்டாகலாம். கலகலப்பான அனுபவம் உண்டு. உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். எண்ணிய காரியம் நிறைவேறும்.

### கன்னி

அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தந்தையுடன் ஏற்படும் வாக்குவாதங்களால் அதிருப்திக்கு ஆளாகலாம். அவர் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். பணிபுரிவோர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். எந்த வேலையையும் சுலபமாக முடிப்பது என்பது கடினமாகும். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். மந்தம், மறதி, கவனக் குறைவு, தண்டச் செலவுகளால் அவதிப்படலாம். எதிர்பாராத சந்திப்பு உண்டு. பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

### துலாம்

குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட காரியங்களை மட்டுமின்றி, திட்டமிடாத சில காரியங்களை முடிக்க நேரிடலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். சகோதரர்களால் நன்மை, உதவி பெறலாம். நிலம், பூமி வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். அவசரப்பட்டு யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கவனம் அவசியம். மருத்துவச் செலவு நேரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கடன்கள் வசூலாகும்.

### விருச்சிகம்

ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்யலாம். பிள்ளைகளுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் உண்டு. அடுக்கடுக்காக வேலைகள் குவியும். உங்களை நம்பி முக்கியமான பொறுப்புகளை மற்றவர்கள் ஒப்படைக்கலாம். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தேக ஆரோக்கிய குறைவுகள் நீங்கி, தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். அடிக்கடி வயிறு தொடர்பான உபாதைகளுக்கு ஆள்படலாம். வீண் செலவுகளாலும் அவதிப்படலாம். மாற்று மதத்தினர் தொடர்பான வகையிலும், பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### தனுசு

சோர்வு, சோம்பல் இல்லாமல் உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். பணிபுரிவோர் சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். வேலைப்பளு அதிகரிக்கும். கடந்த கால இழப்புகளை எல்லாம் ஈடுகட்டுவதற்காக கூடுதல் நேரம் பணியாற்றுவீர்கள். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிர்பாராத பயணங்களால் சேமிப்பு கரையலாம். சொத்து வாங்கல் கொடுக்கல் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளால் உருவான தொல்லைகள் குறையும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகளில் சுமுக முடிவு காணலாம்.

### மகரம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் கைக்கு கிடைக்கலாம். தடைப்பட்ட காரியங்கள் விறுவிறுப்பாக முடியும். பணிபுரிவோர் நிர்வாகத்தினர் மூலம் ஆதாயம், அனுகூலம் பெறலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். சகோதரர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. உறவினர்களால் தொல்லையுண்டு. குழப்பம், தடுமாற்றம் நேரும். பயணங்களாலும் அலைச்சல் உண்டாகும்.

### கும்பம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட சில வேலைகளை செய்ய முடியாமல், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். பணப் பிரச்சினைகளைச் சமாளிக்க நேரிடலாம். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்லலாம். கடன் பிரச்சினைகளாலும் கவலை அடையலாம். வேலை நெருக்கடிகளும் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டபடி முடிக்க முடியாமல் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். உறவினார்களால் தொல்லை உண்டு.

### மீனம்

விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலைய நேரிடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மருத்துவ காரியங்களும் பலன் தரும் வகையில் அமையாது. மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டலாம். பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். குடும்பச் செலவு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக் குழந்தாய்!



சின்னக் குழந்தாய்! சின்னக்
குழந்தாய்!
ஒரு சொல் கேட்டிடம்மா
கதிரவன் எழும் முன்னே தினம்
காலையில் நீ எழுந்திடம்மா
புறத்தூய்மை பேண நன்றாய் நீயும்
குளிர் நீரில் குளித்திடம்மா
அகத்தூய்மை பேண அனுதினமும்
இறைவனை மனதில் நினைத்திடம்மா

நொடிப் பொழுதும் தாமதமின்றி- தினம்
பள்ளி சென்றிடம்மா
நல்ல நண்பர் குழாம் உனைச்சுற்றி
பள்ளியில் நீ அமைத்திடம்மா
கற்றுத்தரும் ஆசானை ஆண்டவன்
போல்
நாளும் மனதில் நினைத்திடம்மா
கற்ற கல்வி வழிநின்று - தினம்
நீ வாழ்வில் உயர்ந்திடம்மா.

வளர்ந்து வரும் உலகில் சிறந்திட
கணினியைக் கற்றுத் தேர்ந்திடம்மா
எவ்வுயரம் வளர்ந்திட்ட போதும் - நீ
பழைமையைப் போற்றிப் பேணிடம்மா
அன்னை தந்தை ஆசான் பேணி- நீ
தாய் மொழியை வளர்த்திடம்மா!

ஆ.கபிலன்

# தலையில் வீழ்ந்த பழம்

துருக்கி நாட்டில் மல்பெரி என்ற ஒரு மரம் உண்டு. நீண்ட கிளைகளுடன் உயர்ந்து அடர்ந்து செழித்து அந்த மரம் காணப்படும். அந்த மரத்தின் பழம் மிகச் சிறியதாக இருக்கும்.

ஒருநாள் முல்லா அந்த மல்பெரி மரத்தின் நிழலில் அமர்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக ஓர் இளைஞன் அங்கே வந்து சேர்ந்தான். நீண்ட தூரத்திலிருந்து வெயிலில் அவன் நடந்து வந்திருக்க வேண்டும்; நிழலைக் கண்டதும் அவனுக்குப் பேரானந்தமாய் இருந்தது.மரத்திலிருந்து வேரின் மீது தலைவைத்துப் படுத்துச் சற்று நேரம் களைப்பாறினான்.அப்போது அண்ணாந்து மரத்தைப் பார்த்தான். மரத்தின் சின்னஞ்சிறு பழங்கள் அவன் கண்களில் பட்டன.அவன் உரக்கச் சிரித்தான்.முல்லா அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு ''ஏன் சிரிக்கிறீர்?'' என்று கேட்டார்.''கடவுளின் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன்'' என்றான் அந்த வழிப்போக்கன்.

''கடவுள் அப்படி என்ன முட்டாள்தனம் செய்து விட்டார்?'' என்று முல்லா ஆச்சரியத்துடன் கேட்டார். ''இந்த மரத்தைப் பாருங்கள்; ஒரு பெரிய கூடாரத்தைப்போல எவ்வளவு பெரிதாக இருக்கின்றது. ஆனால் இந்த மரத்தின் பழங்கள் மட்டும் எவ்வளவு சிறியனவாக உள்ளன; இவ்வளவு பெரிய மரத்தின் பழங்கள் எவ்வளவு பெரியவையாக இருக்கவேண்டும் என்று கூடத் தீர்மானிக்க முடியாத கடவுளை முட்டாள் என்று கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்?'' என்றான் வழிப்போக்கன்.



முல்லா பதில் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டார்.சற்று நேரம் கழித்து காற்றுப் பலமாக அடித்தது. மரத்தின் கிளைகள் வேகமாக அசைந்தாடிக் கிளைகளில் இருந்த சின்னஞ்சிறு பழங்கள் பொலபொலவெனக் கொட்டின.சில பழங்கள் வழிப்போக்கனின் தலையிலும் வீழ்ந்தன.முல்லா அவனைப் பார்த்து ''நண்பரே! உமது தலைமீது ஏராளமான பழங்கள் வீழ்ந்தன போலிருக்கிறதே'' என்று கேட்டார். ''ஆமாம் காற்றில் அவை உதிர்ந்துவிட்டன. என்றான் வழிப்போக்கன்.

''நண்பரே! கடவுள் சிருஷ்டியில் அநாவசியமானதும் அர்த்தமற்றதும் என்று எதுவும் இல்லை. எதையும் ஒரு காரணத்தோடுதான் இறைவன் சிருஷ்டித்திருக்கிறார். இவ்வளவு விசாலமான மரக்கிளைகளின் நிழலில் நிறைய மனிதர்களும் விலங்குகளும் நிழலுக்காக வந்து தங்கும் என்று கடவுளுக்குத் தெரியும். அதனால்தான் கடவுள் நிழல்தரும் பெரிய மரத்தின் பழங்களை மிகவும் சிறியனவாகப் படைத்திருக்கிறார் என்றார் முல்லா.

# மருத்துவம்

01.மருத்துவத்தின் தந்தை- கிப்போ ஹிரட்டீஸ்
02.மனித உடலின் சாதாரண வெப்பநிலை- 36.8°c
03.காசநோய்க்குரிய தடுப்பு மருந்து- B.C.G
04.விற்றமின் எனும் பெயரை அறிமுகம் செய்தவர்- பங்விற்றமின்
05.பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர்- அலெக்ஸாண்டர் பிளேமிங்
06.உலகின் முதல் பெண் தாதி- புளோரன்ஸ் நைற்றிங்கேல்
07.உளமருத்துவத்தின் தந்தை- சிக்மன்ஃ புரொய்ட்
08.மனிதர்களுக்கு தடிமனை ஏற்படுத்துவது- றேனோவைரஸ்
09.ஆயுர்வேத மருத்துவ முறையின் தந்தை- சாரகா
10.மனிதனின் இதயத்துடிப்பை அறியும் கருவி- கார்டியோ கிராப்


ச.ஐஸ்வர்யா, தரம் 8k
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி.

# பொது அறிவு

01.2003 ஆம் ஆண்டு சீனாவில் மேற்கொள்ளப்பட்ட உலக சாதனைகள் எத்தனை?
-19
02.ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளினால் யூரோ நாணயம் எப்போது உருவாக்கப்பட்டது?
-1999 தைமாதம்
03.கணினியின் தந்தை எனப்படுபவர் யார்?
-சார்ள்ஸ் பபேஜ்
04.குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த ஆண்டு எது?
-1990
05.மாலைதீவு நாட்டின் உத்தியோக பூர்வ மொழி எது?
-திவெகி
06.விண்வெளிக்கு மனிதனை அனுப்பிய மூன்றாவது நாடு எது?
-சீனா
07.தாய்லாந்து நாட்டில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட ஆண்டு எது?
-1997

ஞா.அபர்ணா,
தரம் 6A
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# காவுக்பல் கடலாமைகள்



காவுக்பல் ஆமைகள் ஏனைய கடலாமைகளைப் போல் அமைப்பிலும் உருவிலும் ஒரே வகையாக இருந்தாலும் அளவில் சிறியவையாக இருக்கும். முதிர்ந்த இவ்வாமைகள் ஏறக்குறைய 50 கி.கி எடையும் 90 சென்ரிமீற்றர் நீளமும் உடையவை.

இவை பெரும்பாலும் வெப்ப வலயக் கடற்கரைகளில், முருகக் கற்பாறைத் தொடர்ப் பிரதேசங்களிலேயே காணப்படும். இது ஒரு மாமிசப் பட்சினி ஆகும். இவை ஜெலிபஸ், கடற்பஞ்சு உயிரினம் மற்றும் கடல்வாழ் பிராணிகளின் எச்சங்களை உண்டே வாழ்கின்றன.

இவற்றுக்குப் பறவைகளின் சொண்டு போன்ற குறுகி நீண்ட சொண்டு இருக்கும். இந்த சொண்டின் உதவியால் பாறை இடுக்கில் உறையும் நுண்ணிய உயிரினங்களைக் கௌவிப்பிடித்து உண்ணும்.

இந்தவகை ஆமைகள், தமது தசைக் கோளங்களில் விஷச் சுரப்பிகளை கொண்டிருக்கும். அதனால் இவற்றைப் பிடித்து உண்ணும் மனிதர்கள் உட்பட ஏனைய உயிரினங்களும் மரணிக்க நேரிடும்.

முக்கியமாக இவ்வாமையின் மாமிசத்திலும் பார்க்க அதன் தோலோடுகளுக்காகவே மனிதர் அவற்றை வேட்டையாடுகின்றனர். சுத்தமாக்கப்பட்டால் மிகவும் பளபளப்பாக ஜொலிக்கும் அதன் ஓடுகளைக் கொண்டு ஆபரணங்களை அழகுபடுத்திக் கொள்ளலாம்.






ஜெ.தயாளநந்தன்,
யாழ்.இந்துக் கல்லூரி

# விடை தெரியுமா? 133

## உங்களுக்கும் பரிசில்கள்

1. மிகவும் வேகமாகப் பறக்கக் கூடிய பறவை எது?
2. பூனைக்கு எத்தனை முள்ளந்தண்டுகள் உள்ளன?
3. 2011 ஆம் ஆண்டின் உலக அழகி எந்த நாட்டில் இருந்து தெரிவானார்?
4. உலகில் ஆயிரம் வாவிகள் கொண்ட நாடு எது?
5.கரப்பான் பூச்சியின் இரத்தம் என்ன நிறம்?


## விடைகள் 132

1. ஒஸ்லோ
2.Familiar face
3.அஸ்திரேலியா
4.அல்பேனியா
5. குதிரை


## வெற்றி பெற்றோர் விவரம்

★நோ.துஷாளினி, தரம் 3A, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★நோ.சில்வின் சரோன், தரம்-4A,யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★கோ.துலக்சினி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
★சத்தியதாசன் ஐஸ்வர்யா, யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம்.
★ந.சுபாஜினி, தரம் 10A.
★நோ.விதுஸின், ஆரம்பப் பாடசாலை பண்டத்தரிப்பு, சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.

விடை தெரியுமா?
தெரிந்தால் 19.11.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, 125, 100 பெறுமதியான ... மூவருக்கும் தலா ரூபா 75 பெறுமதியான பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.



இ.சாரங்கன்,
தரம்-8, யாழ்.இந்துக் கல்லூரி.



ச.பிரியங்கா,
தரம்-6A,யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்



ம.ரதீசன்,
தரம்- 9, யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கழிவுகளோடு கழியும் வாழ்க்கை

சோறு வழியில்லாமல் மக்கள்
சேற்றுக்குள் பயிராய்
சேர்ந்து விட்டனரே
சேரிக்குடிக்குள்
சொல்லுக்கு அரசியல் நடத்தும்
செல்வந்தர்களே சற்றே நில்லுங்கள்
சொல்ல முடியாத துன்பத்தில்
செல்லாக் காசுகளாய் அங்கே அவர்கள்
கொட்டும் மழையிலும்
கொழுத்தும் வெய்யிலிலும்
கோபமே கொள்ளாதவர்களாய்
கொடியழுந்த கிளைகளாய் அவர்கள் அங்கே
ஆளை விட்டா சாமியென்று
ஆங்காங்கே துப்பும் இடமெல்லாம்
அநியாயமற்ற உறவுகள்
அடைமழையிலும் அடையாகின்றனர்
கஞ்சிக்கே வழியில்லா கயமைக்காறர்களாய்
காரணமின்றி கண்ணீர் சொரிகின்றனர்
காரணவான்களோ கண்மூடிக் கிடக்கின்றனர்
நிலைப்பாட்டில் தளர்ந்து
சாப்பாட்டிற்காய் பாத்திரம் உயர்ந்து
சாமானிய மக்களாய் நிற்பவரை
சரித்திரத்தில் ஒரு துளியாவது எழுதாப்
பரம்பரையாய்த் தொடங்கிய வாழ்க்கை
பம்பரம் போல் இன்று இங்கே சுற்றுகிறது
பாவர மக்களா? இவர்கள் ஏன்
பாதாளத்தில் நிற்கிறார்கள்
அரசே இதற்குப் பதில் சொல்.

ஜெயாம் ஜெகன்,
புதுக்குடியிருப்பு.

# தனிமை



இருட்டில் நீ நடக்கையில்
உன் நிழலும் உன்னை
விட்டு விலகிவிடும்
நீ மட்டும் தான் இந்த
உலகத்திலே உனக்கு துணை
தீயோடு போகும் வரையில்
தீராது இந்த தனிமை...!

ச.சோபியா,

# நியாயமா ?

நீ...
சொன்ன அந்த வார்த்தைகள்!
கிளி சொன்ன வார்த்தைகள் போல்,
பக்கத்திலிருந்து- நீ
சிரித்த சிரிப்புகள்
பற்களின் வரிசைகள்
அடுக்கு மல்லிகையின் மணங்கள்
தேடிவந்தால் நானும்
நாடி வந்தேன்
பாலுக்குள் பழமாக

தேனும் பாலுமாக
காந்தத்துடன் இணையும் இரும்பாக- என்
கண்களுக்குள்- உன் உருவம்
இதய மாளிகையில்
உலா வரும் அழகுராணி- நீ
சொன்ன அந்த வார்த்தைகளை நம்பி
என்னைக் கொடுத்தேன்- இன்று
வெளிநாட்டு ஆசையில்
என்னை விட்டுப் போனது
நியாயமா?

வி.அன்ராசா (அருள்),
கொம்மாந்துறை

# சொந்தம்




நீ எனக்கு சொந்தம்
இல்லை என்றாலும்
உன் ஞாபகங்களுக்கும்
நினைவுகளுக்கும்
சொந்தக்காரி நான்...!

காவியா

# நிசப்தம் கலைத்த ஓலம்

ஒரு சாமப்பொழுதின்
நிசப்தம்,
ஓலங்களால்...
குலைக்கப்பட்டிருந்தது
நாய்கள்...
ஊளையிட்டுக் கொள்கின்றன
புரியாதபடி,
ஏதோ? யாரோ?
பேசிக் கொள்கிறார்கள்
ஆட்காட்டிக் குருவி
குரலெழுப்பிப் போகிறது
கதவின்,
திறப்புத் துவாரத்தின் ஊடாக
வெளியே நோக்கினேன்
கிடுகு வேலிக்கு மேலாக
ஒரு உருவம் தெரிகிறது
தூரவாய் பலர்...
வெளிச்சங்களுடன்
அலறியபடி ஓடுகிறார்கள்
மரணபீதி ஆட்கொள்ள
மௌனத்தில்...
உறைந்து போகிறேன்
நேற்றுப் போல்....
இன்றைய சாமப் பொழுதின்...
நிசப்தம்,
தொடரவில்லை.

கவிஞர் சு.க. சிந்துதாசன்.



# பகிரங்கக் காதல்



சில்லென வீசுகின்ற
காற்றோடு
மெல்லப் பேசுவேன்
முற்றத்து
நிலவு ஒளி மூலம்
அம்புலிக்குக்
கவிதை எழுதுவேன்
அதிகாலை
முற்றத்து மல்லிகைக்கு
தேன் அருந்த வரும்
சிட்டுக் குருவியுடன்

காதல் கதை பேசுவேன்
வானத்து விண்மீன்களை
கொக்கைத் தடியால் இழுத்து
இருண்ட அகதி முகாம்களுக்கு
வெளிச்சம் கேட்பேன்
இளவேனில் மரங்களிடம்
[illegible]
[illegible]
கேட்பேன்.

ஆ.முல்லைதிவ்யான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை நோக்கிய பாதையில் ஜனநாயகம்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

**ஊடகங்கள் இன்று ஒரு விதமான சுயதணிக்கை முறையையே மேற்கொள்கின்றன. ஜனநாயகத்தின் மூல மந்திரமான எழுத்துச் சுதந்திரம் பிரகடனம் செய்யப்படாத ஊடகத் தணிக்கைக்குள் ஒடுங்கிப் போய்விடுகின்றது.**



ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக உருவாக்கப்படும் மக்களின் ஆட்சிமுறை என்று வரைவிலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஜனநாயக நாடுகள் எனப்படும் நாடுகளில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்ய அங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெறும் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அதேவேளையில் பொதுவுடமைக் கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி நடைபெறும் நாடுகள், சர்வாதிகார ஆட்சி இடம்பெறும் நாடுகள் எனக் கூறப்படுகின்றன. ஜனநாயக நாடுகளில் பல கட்சிகள் செயற்படும் அதேவேளையில் பொதுவுடமை நாடுகளில் ஒரு கட்சி ஆட்சியே நிலவுகிறது.

ஆனால் பொதுவுடமைவாதிகளோ ஜனநாயகம் என்பது குறைந்த தொகையினராகிய முதலாளித்துவ வர்க்கம் நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் மீது நடத்தும் சர்வாதிகாரம் எனவும் பொதுவுடமை அமைப்பானது நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் நாட்டின் சிறுபான்மையினரான முதலாளித்துவ வர்க்கத்தின் மீதும், சுரண்டும் வர்க்கத்தின் மீதும் நடத்தும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனவும் கூறி வருகின்றனர்.

## ஜனநாயகம் பற்றிய வரைவிலக்கணம்

நடைமுறையில் பார்க்கும்போது ஜனநாயகம் பற்றிய வரைவிலக்கணமும் கோட்பாடுகளும் தினமும் கேள்விக்குள்ளாக்கப்படுவதையும் உதாசீனப்படுத்தப்படுவதையும் உணர முடிகிறது. பொதுவுடமைவாதிகள் ஜனநாயகம் பற்றிக் கூறும் கருத்தாக்கம் உண்மை என்பது போன்ற தோற்றப்பாடு உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

ஜனநாயகக் கோட்பாடுகளின்படி பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பன மிகவும் முக்கியமானவையாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் ஊடகங்கள் மக்களின் கருத்துக்களைச் சுதந்திரமான முறையில் பிரதிபலிப்பனவாகவும் ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டி நாட்டைச் சரியான திசையில் வழி நடத்துவனவாகவும் அமைய வேண்டும் என்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். அந்த வகையில் ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் ஒரு அத்தியாவசியமான தேவையாகவே திகழ்கின்றது.

## ஆட்சியில் இருந்தோரை ஆட்டம் காண வைத்த ஊடகங்கள்

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில் ஊடகங்கள் மிகவும் வலிமை பெற்றவையாகவே விளங்கி வருகின்றன. எவ்வளவு பெரிய அதிகாரம் படைத்தவர்களையும் கூட, அவர்கள் தவறு செய்யும்போது அவை சந்திக்கு இழுக்கத் தயங்குவதில்லை. வாட்டர்கேட் ஊழலை அம்பலப்படுத்தியதன் மூலம் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் நிக்சன் பதவி துறக்க வேண்டிய நிலையை ஊடகங்கள் ஏற்படுத்தியமையை நாம் மறந்து விட முடியாது. அதேபோல முன்னாள் அதிபர் கிளிங்டன் - மோனிகா பாலியல் விவகாரத்தை வெளிப்படுத்தி அவரை ஊடகங்கள் படாதபாடு படுத்தியமையும் மறந்து விட முடியாது. இவ்வாறுபுறுவ்வியூமா - கிறிஸ்ரின் கீலர் தொடர்பு மூலம் பிரிட்டிஷ் இராணுவ இரகசியங்கள் ரஷ்யாவுக்குத் தெரிய வந்த பிரச்சினை கூட ஊடகங்களாலேயே வெளிக்கொண்டு வரப்பட்டன. அண்மையில் கூட பிரிட்டிஷ், பாதுகாப்புச் செயலரின் முறைகேடுகளை அம்பலப்படுத்தி ஊடகங்கள் அவரைப் பதவியிறங்க வைத்ததுடன் மன்னிப்புக் கோரவும் வைத்திருந்தன. இவ்வாறே உலக வங்கித் தலைவர், பல பிரிட்டிஷ், பிரான்ஸ் அமைச்சர்கள் ஆகியோரின் தவறுகள் ஊடகங்களால் அம்பலப்படுத்தப்பட்டு அவர்கள் பதவி துறக்கும் நிலையை ஊடகங்கள் ஏற்படுத்தியிருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக விக்கிலீக்ஸ் இணையத்தளம், ராஜதந்திர நடவடிக்கைகள் என்ற பேரில் அமெரிக்கா உட்படப்பலநாடுகள்மேற்கொண்டுவரும் முறைகேடுகளை அம்பலப்படுத்தி வருகின்றது.

## ஊடகங்களை மிரட்டும் சர்வாதிகாரிகள்

இவற்றிலிருந்து, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும் அது தனது வழித்தடத்திலிருந்து மாறி ஒரு சர்வாதிகாரப் பாதையில் பயணிப்பதைத் தடுப்பதிலும் எவ்வளவு காத்திரமான பங்கை ஊடகங்கள் வகிக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் ஜனநாயகத்தின் பேரால் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி விட்டு ஒரு சர்வாதிகார ஆட்சியதிகாரத்தை உருவாக்குபவர்கள் ஊடகங்களைத் தமக்குத் துதிபாடும் ஏவலர்களாக மாற்ற முனைகின்றனர். அப்படிக் கட்டுப்படாத ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் சட்டபூர்வமாகவும் சட்டபூர்வ மற்ற வழிகளிலும் அடக்குமுறையை மேற்கொள்கின்றனர். இந்தவகையில் இலங்கையில் அண்மையில் 5 இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டுவிட்டன. இவற்றில் கூடுதலானவை ஏற்கனவே இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கியவை. இவற்றுக்கு எதிராகப் பலமுறை வன்முறைத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இவற்றின் ஊடகவியலாளர்கள் சிலர் இனம் தெரியாதவர்களால் கொல்லப்பட்டனர்; கடத்தப்பட்டுக் காணாமற் போக வைக்கப்பட்டனர். இப்படியாக நெருக்கடி மேல் நெருக்கடிகள் அவைமேல் தொடுக்கப்பட்டபோதிலும் அவை தளர்ந்து போய்விடவில்லை. மாறாக தங்கள் தளங்களை வெளிநாடுகளுக்கு மாற்றி அங்கிருந்து இயங்க ஆரம்பித்தன.

இந்த நிலையில்தான் அவை தடை செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் ஒரு ஊடகம் தவறு செய்தால் அதன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படமுடியும் எனவும் அவர்கள் மீது நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் ஆனால் அரசு நேரடியாக ஒரு ஊடகத்தைத் தடை செய்ய முடியாது எனவும் கூறப்படுகிறது. எப்படியிருப்பினும் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஊடகங்கள் தடை செய்யப்படுவது ஒரு முறைமீறல் எனவே கூறப்படுகிறது. இலங்கையில் போர் நடந்த காலத்திலும் சரி போருக்குப் பின்பும் சரி ஊடகங்கள் மீதான மறைமுக அடக்குமுறை நிலவி வந்ததை நாமறிவோம். அதேவேளையில் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பேரில் சட்டபூர்வமான ஒரு ஒடுக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

## தொடரும் ஊடக அடக்குமுறை

1971 ஆம் ஆண்டு சொய்கா என்ற இளம் பத்திரிகையாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவின் நாலாம் மாடியிலிருந்து தூக்கி வீசப்பட்டதிலிருந்து ஆரம்பித்து இன்று வரை நூற்றக்கணக்கான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு விட்டனர். தராக்கி எனப்படும் சிவராம், ஜி.நடேசன், நிமலராஜன், லசந்த விக்கரமதுங்க போன்ற பல சர்வதேசத் தரம் வாய்ந்த ஊடகவியலாளர்கள் நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். விக்டர் ஐவன் போன்றவர்கள் நீண்ட காலச் சிறைவாசம் அனுபவித்தனர். ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு இருபது வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. லக்பிம பத்திரிகையின் நிருபரான இளம் பெண் உட்படப் பலர் காரணம் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுப் பின் குற்றம் எதுவும் சுமத்தப்படாமலே விடுவிக்கப்பட்டனர். பிரகித் எக்னலியகொட உட்படப் பலர் காணாமற் போயுள்ளனர். இக்பால் அத்தாஸ் உட்பட்ப் பல பிரபல பத்திரிகையாளர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டே ஓடி விட்டனர். சிரச, எம்.ரி.வி. லங்கா, ஈ.நியூஸ் உட்படப் பல ஊடக நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டுச் சேதமேற்படுத்தப்பட்டன, எரியூட்டப்பட்டன. உதயன், சுடர் ஒளி பத்திரிகைகள் பலமுறை தாக்கப்பட்டு பல பணியாளர்கள் கொல்லப்பட்டனர்; காயப்படுத்தப்பட்டனர். உதயன் ஆசிரியர் கானமயில்நாதன், செய்தி ஆசிரியர் குகநாதன் ஆகியோர் மீதும் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலாக அரச நிறுவனமான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் ஓர் அமைச்சர் தனது கையாள்களுடன் புகுந்து வெறியாட்டம் ஆடி அங்குள்ளவர்களைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

இப்படியான ஊடகங்கள் மீதும் ஊடகவியளார்கள் மீதும் மீண்டும் மீண்டும் வன்முறைகள், கொலை முயற்சிகள், கொலைகள் எனப் பல தாக்குதல்கள் இடம்பெற்ற போதிலும் அவை தொடர்பாக எவரும் தண்டிக்கப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாதபடி கைது செய்யப்படுபவர்கள் கூட உடனடியாகப் பிணையில் விடுவிக்கப்படுவதுண்டு.

ஆனால் பல ஊடகவியலாளர்கள் வன்முறையைத் தூண்டியது, பயங்கரவாதத்துக்குத் துணை போனது போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர்; சிறைவாசம் அனுபவித்துள்ளனர். அதாவது அரசுக்கு எதிராக வாய் திறப்பவர்கள் கொலை அச்சுறுத்தல் உட்படப் பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். இது இங்கு நிலவும் யதார்த்தம். அவர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் கிடையாது.

## சுயதணிக்கையில் அநேக ஊடகங்கள்

இந்த நிலையில் பெரும்பான்மையான ஊடகங்கள் ஒரு விதமான சுயதணிக்கை முறையையே மேற்கொள்கின்றன. ஜனநாயகத்தின் மூல மந்திரமான எழுத்துச் சுதந்திரம் பிரகடனம் செய்யப்படாத ஊடகத் தணிக்கைக்குள் ஒடுங்கிப் போய்விடுகிறது.

இந்த ஜனநாயகக் கொலையின் இன்னொரு கட்டமாகவே மேற்படி இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

எவ்வளவுதான் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டம், வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், அபிவிருத்தி என மாயமான்களைக் காட்டியபோதும் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்பது உண்மை. அதாவது கடன் வாங்கி ஏற்கனவே பட்ட கடன்களுக்கு வட்டி கட்ட வேண்டிய நிலைமை. மேலும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், நாணய மதிப்பிறக்கம் என்பன பெரும் பூதங்களாக எழுகின்றன. வேலை நிறுத்தங்கள், மாணவர் போராட்டங்கள் என்பன வெடிக்க ஆரம்பித்துவிட்டன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் கட்டளைகளுக்கு அமைய அரச செலவினங்கள் குறைக்கப்படவேண்டும். எனவே சுகாதாரம், கல்வி, சம்பள உயர்வு என்பனவற்றுக்கான செலவினங்களில் வெட்டு விழுவது தவிர்க்க முடியாது. இவற்றை அம்பலப்படுத்தி மக்களை விழிப்படைய வைக்கும் நிலை ஊடகங்களுக்கே உண்டு. எனவேதான் அரசு ஊடக அடக்குமுறையை ஒரு முக்கியமான ஆயுதமாகக் கையெடுத்துள்ளது.

நாடு இன்று வெகுவேகமாக ஜனநாயகத்தின் பெயரிலான ஒரு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறது. அதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறை, பாதுகாப்பு என்ற பெயரில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் இராணுவ மயமாக்கல் என்பன அனுகூலமாகவே அமைந்துள்ளன. எனவே தான் இவற்றுக்கு ஊடகங்கள் தடையாக இல்லாத வகையில் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளும் மிரட்டல்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

எப்படியிருந்த போதிலும் மரணத்தை நோக்கி நகர்த்தப்படும் ஜனநாயகத்தையும் மக்களின் ஜனநாயக உரிமைகளையும் எத்தகைய நெருக்கடிகள் மத்தியிலும் பாதுகாக்க வேண்டியது ஊடகங்களின் கடமையாகும். அதேபோல் ஊடகங்களும் தமது பொறுப்புணர்ந்து, தர்மம், விழுமியங்களை மதித்து நடக்க வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13 நவம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

# சதுரங்கம்




விமர்சனம்

சமூகப் பொறுப்புள்ள பத்திரிகையாளனாக வரும் ஸ்ரீகாந்த் 'திசைகள்' பத்திரிகையில் செய்தியாளராகப் பணிபுரிகிறார். சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளைப் பத்திரிகையூடாக எழுதி வெளியிடும் பணியைச் செய்யும் தரமான கதாபாத்திரத்தில் வலம் வருகிறார். பத்திரிகையில் செய்தியாளராக இருந்து பல சமூகச் சீர்கேடுகளை எழுதி வெளியிடுவதால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதையும் தெளிவாக வெளிக்காட்டி இருக்கும் சதுரங்கம் திரைப்படத்தின் கதை பாராட்டத்தக்கது.

ஸ்ரீகாந்த் எழுதும் கட்டுரைகளுக்கு வாசகர்கள் மத்தியில் பாராட்டும் அதிகாரிகள் மத்தியில் சலசலப்பும் ஏற்படுகிறது. ஸ்ரீகாந்தால் பாதிக்கப்படும் அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் ஸ்ரீகாந்தை எச்சரிக்கின்றனர். என்றாலும் நெஞ்சை நிமிர்த்தி எதற்கும் பயப்படாமல் தில்லாக நிற்கிறார் ஸ்ரீகாந். ஒரு பத்திரிகையின் அதன் வாயிலாக வெளிவரும் செய்திகளின் பெறுமதி பெரியது. ஆனபடியால் பத்திரிகையாளனாக வலம் வரும் எந்த ஒரு நபரும் எதற்கும் பயப்படாமல் தைரியத்துடன் தனது பணியைச் செய்ய வேண்டும் என்பதை தெட்டத் தெளிவாகக் காட்சி அமைப்புகள் வெளிக்காட்டி இருக்கின்றன. ஸ்ரீகாந்தின் காதலியான சோனியா அகர்வால் ஸ்ரீகாந்தின் முன்னே கடத்தப்படுகிறார். யார் கடத்தினார்கள் என்று தெரியாமல் சோனியாவைத் தேடிக் கண்டுபிடிப்பதில் துணிச்சலாகச் செயற்படுகிறார். ஒரு பத்திரிகையாளனுக்குப் பல எதிரிகள் இருப்பார்கள். அதேபோல் ஸ்ரீகாந்துக்குப் பல எதிரிகள் இருப்பதால் யார் சோனியாவைக் கடத்தினார்கள் என்று தெரியாமல் குழம்பிய நிலையில் தேடுகிறார். நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு லேசான புன்முறுவலோடு எதிராளியின் எச்சரிக்கையை அலட்சியம் செய்யும் ஸ்ரீகாந்த், அதே அலட்சியத்தை இறுதிவரை காட்ட முடியாதளவுக்கு யதார்த்த வலையில் சிக்கிக் கொள்வதை ஊசி செருகியதைப் போல உணர வைக்கிறார் இயக்குநர்.

ஸ்ரீகாந்துக்கும் சோனியாவுக்கும் காதல் அழகான பூங்கொத்து. கதாநாயகிகள் வெறும் மரம் சுற்றிகள் அல்ல என்பதை நிரூபிக்கிறார் சோனியா. அந்தளவுக்குச் சோனியாவின் நடிப்பு அழகானது. ஒருபக்கம் காதல். இன்னொருபக்கம் அரசியல், அரச அதிகாரிகளுடன் மோதல் என்று முதல்பாதி விறுவிறுப்பாகச் செல்கிறது. சோனியாவைக் கடத்தி வைத்திருக்கும் சிறை அதிகாரி ஸ்ரீகாந்தை அங்குமிங்கும் அலையவிடும் காட்சிகள் திகிலாக இருக்கின்றன. திசைகள் பத்திரிகை ஊடாக சோனியாவின் படத்தைப் போட்டு கல்வியில் பட்டம் பெற்ற செய்தியைப் பிரசுரித்து நாசுக்காக சோனியா எங்கே இருக்கிறாள் என்று அறிகிறான் ஸ்ரீகாந்த். சிறை அதிகாரி சோனியாவை எங்கே வைத்திருக்கிறேன் என்று ஸ்ரீகாந்துக்குப் போனில் சொல்லும்போது அந்த இடமெல்லாம் ஓடி ஓடிப்பார்த்தும் அங்கே சோனியா இல்லை. சிறை அதிகாரி ஸ்ரீகாந்தை ஓட விட்ட இடமெல்லாம் விபச்சாரம், கள்ளக் கடத்தல், அரிசி மூடை பதுக்கிய இடங்களாக இருந்தன. இத்தனை இடங்களைப் பார்த்த ஸ்ரீகாந்திடம் சிறை அதிகாரி சொல்கிறான், நீ சோனியாவைத் தேடிப் பார்த்த இடமெல்லாம் சமூக சீர்கேடு நடக்கிறது. இதை எல்லாம் விட்டுவிட்டு என்னைப் பற்றிப் பத்திரிகையில் எழுதி எனது சிறை அதிகாரி வேலைக்கே ஆப்பு வைத்து விட்டாய். அதனால் சோனியாவை உன்னால் கடைசிவரையும் பார்க்கவே முடியாது என்கிறான். சோனியாவை டுபாய்க்காரனுக்குக் கூடுதலான பணத்துக்கு விற்றுவிடுகிறான் அந்த சிறை அதிகாரி. அந்த டுபாய்க்காரனின் வேண்டுகோளுக்கு இணங்க சோனியாவை நாடு கடத்தப் பார்க்கிறார்கள். அதாவது சோனியாவை ரயிலில் ஏற்றிச் செல்வதற்காகப் புகையிரத நிலையம் செல்கிறார்கள். அங்கே வந்து விடுகிறான் ஸ்ரீகாந்த். சண்டை நடக்கிறது. அவர்களிடம் இருந்து சோனியாவைக் காப்பாற்றுகிறான். இதுதான் படத்தின் கதையாகும்.

இளவரசு, மனோபாலா, பத்திரிகை ஆசிரியராக வரும் மணிவண்ணன் என அவரவர் தங்கள் பாத்திரம் உணர்ந்து நடித்துள்ளனர். பத்திரிகை சார்ந்த கதையை கே.வி.ஆனந்த் 'கோ' படம் மூலம் கொடுத்து வெற்றி பெற்றுவிட்டார். இந்தப் படம் 2004 இல் எடுத்த படம். அப்போது இந்தப் படம் வெளிவந்திருந்தால் சினிமா ரசிகர்களுக்குப் புதுமையானதாக இருந்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இயக்குநர் கரு.பழனியப்பன் பத்திரிகையாளராக இருந்தவர் என்பதால் ஸ்ரீகாந் அச்சு அசலாய் பத்திரிகையாளராக மாத்தி இருக்கிறார். மந்திரியாக வரும் மகாதேவன் ஸ்ரீகாந்தைப் பார்த்து எங்கள் மாதிரி தப்பானவங்க ஜெயிப்போம் என்று நம்புகிறோம். உங்களை மாதிரியான நல்லவங்கள் தோத்துடுவோம் என்று பயப்படுகின்றீர்கள். முதல்ல ஜெயிப்போம் என்று நம்புங்க என்று பேசும்போது பத்திரிகையாளர்களை உயர்த்தி வைக்கிறது. வித்தியாசாகரின் இசையில் மகாகவி பாரதியாரின் 'ஆடுவோமே' பாடல் மனதில் நிற்கிறது. விழியும் விழியும் பாடல் இனிமை. என்ன தந்திடுவேன் நான் என்னைத் தந்திடுவேன் என்ற பாடல் இனிமையிலும் இனிமை படத்துக்கு சேர்க்கிறது. திவாகரின் ஒளிப்பதிவு படத்துக்கு பக்கபலமாக இருக்கிறது. அதற்கு உறுதுணையாக இருக்கிறது சுரேஸ் அர்ஸின் பட்ததொகுப்பு. ராஜீவனின் கலை வண்ணத்தில் திசைகள் பத்திரிகை அலுவலகம் கலக்கல். கதையைப் புதுமையான பாதையை நோக்கி கொண்டு செல்கிறார் இயக்குநர் கரு.பழனியப்பன்.

குமார்.

# கனவுகள் எதற்காக வருகின்றன?

கனவுகள் மனிதர்களின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு அங்கம். கனவு ஏன் வருகிறது, எப்படி வருகிறது என்பது இதுவரை அறிவியல் பூர்வமாக கண்டுபிடிக்கப்படவில்லை.

நமது மனதில் தங்கிப் போகும் விடயங்கள்தான் கனவாக வருகின்றன என்பது மட்டுமே இதுவரை நிரூபிக்கப்பட்ட ஒன்று. இருந்தாலும் கனவுக்கு இதுதான் காரணம் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அதேபோல் கனவுகள் பலிப்பதில்லை என்பதும் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட ஒன்று. இருந்தாலும் ஜோதிடர்கள் சும்மா இருக்காமல், அதிகாலைக் கனவு பலிக்கும். பகல் கனவு பலிக்காது. இந்த மாதிரி கனவு கண்டால் இன்ன மாதிரியான பலன்கள் கிடைக்கும் என்று புத்தகம் புத்தகமாக எழுதிக் கொண்டே இருக்கிறார்கள்.

இதில் பகல் கனவைத் தடுக்க ஒரு நூதன மருந்தை சொல்லியிருக்கிறார்கள் ஆய்வாளர்கள். அதாவது ஏதாவது மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தால் கனவு வராதாம். இவ்வாறான நேரங்களில் தனிமையில் இருத்தல் கூடாது என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஏதாவது மும்முரமாக ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அப்படியே நம்மையும் அறியாமல் கற்பனை உலகில் சஞ்சரிக்க ஆரம்பித்து பகல் கனவில் மூழ்கி விடுவோம்.

இது உடலுக்கு கேடு என்பது அறிவியலாளர்களின் கருத்தாகும். இதைத் தடுக்கத்தான் இப்போது தனிமையை விரட்டியடிக்க வைக்கின்றனர் ஆய்வாளர்கள்.

அனைவருக்குமே பகல் கனவு வந்து போவதுண்டு. அடிக்கடி வராவிட்டாலும் கூட அவ்வப்போது ஒவ்வொருவரையும் தொட்டுச் செல்வதுண்டு இந்த பகல் கனவு. சிலருக்கு பல் விளக்கும்போது, எதையாவது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போது போன்ற இந்த சந்தர்ப்பத்தில்தான் வரும். மனம் அலை பாய்வதால் வருவதுதான் இந்த பகல் கனவுகள்.

இப்படிப்பட்ட மனம் அலைபாய்தல் தனிமையற்ற நேரங்களில் மிகவும் குறைவாக இருக்குமாம்.

இதனால்தான் மனம் அலை பாய்கிறதா, பகல் கனவில் மூழ்க ஆரம்பிக்கிறீர்களா, உடனே தனிமையை விரட்டுங்கள் என்கிறது இந்த ஆய்வு.

தனிமையை விரட்டி மகிழ்வுடன் இருக்கும் போது மனம் அலை பாய்வது, வழக்கமான சமயத்தை விட 30 சதவீதம்வரை குறையுமாம்.

இது குறித்து கலிபோர்னியா பல்கலைக்கழ பேராசிரியர் ஜோனதன் ஸ்மால்வுட் கூறுகையில்,

பகல் கனவுக்குக் காரணம் மனம் அலை பாய்வதுதான். அதற்கும், எதிர்மறையான எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. எனவே பகல் கனவு என்பது நமது உடலுக்கு மட்டுமல்லாமல், மனதுக்கும் கூட தேவையற்றதாகும், ஆபத்தானதுமாகும்.

மனம் அலை பாய்வதைத் தடுக்க ஒரே வழி தனிமையை விரட்டுவது தான் என்று முற்று முழுதாகச் சொல்ல வரவில்லை. ஆனால் வெகுவாக குறையும். இதன் மூலம் மனம் அலை பாயும் பிரச்சினையை படிப்படியாக குறைக்க முடியும்.

ஒரு வேளை, நமது மனம் அலை பாய ஆரம்பிக்கும்போது வேறு சிந்தனைகள் நம்மை ஆட்கொண்டால் அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட முடியும் என்று தெரிவித்துள்ளார்.

கனவு காண்பது நல்லதுதான். அதேசமயம், பகல் கனவால் பலன் இல்லை என்கிறபோது குணப்படுத்த முயற்சிக்கலாமே....!

நிஷாவதி
சங்கானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுத்த பழம் போல் நாடகத்துறையில் இனிப்பவர்

# குழந்தை ம.சண்முகலிங்கம்

ஈழத்தமிழில் ஒன்றாக விளங்குவது நாடகக்கலை. இவற்றுள் ஒன்றான கூத்துப் பண்பாடானது ஈழத்தில் தொன்று தொட்டு இன்றுவரை செழித்தோங்கிக் காணப்படுகின்றது. இதேபோல் கூத்து அல்லாத நாடக அரங்க முறைமைகளும் பெருவளர்ச்சி கண்டு வருகின்றன. இந்தக் கலைத்துறையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடிகனாகவும் நாடக எழுத்தாளராகவும் நெறியாளராகவும் பன்மொழிப் புலமையாளராகவும் ஒப்பற்ற சிந்தனையாளராகவும் நம்மிடையே விளங்கி ஈழத்து நவீன நாடக அரங்கை உயிர் பெறச்செய்த மறுமலர்ச்சியாளராகவும் இந்தத் துறையை ஆற்றுகைக் கலையாக மட்டுமல்லாமல் கற்றலுக்கான பாடநெறியாகவும் அறிமுகம் செய்து எண்ணற்ற வல்லுநர்களை உருவாக்கிப் பல ஆண்டுகளாக அளப்பெரும் பணியாற்றிவரும் நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்கிய பேராசானாகவும் திகழ்பவர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்.

அமரர்களான மயில்வாகனம் - அசுவதி தம்பதியரின் மகனாக 15.11.1931 இல் திருநெல்வேலியில் இவர் பிறந்தார். யாழ்.இந்துக்கல்லூரியில் தனது கல்வியைப் பெற்றுக்கொண்ட பின் 1953இல் சென்னைப் பல்கலைக்கழகம் சென்று நான்காண்டுகள் கற்றுக் கலைப்பட்டதாரியானார். 1957இல் தாயகத்தில் காலடி பதித்த இவர் ஆசிரிய நியமனம் பெற்று செங்குந்த இந்துக்கல்லூரியிலும் பளை மகா வித்தியாலயத்திலும் பணியாற்றி 1987இல் ஓய்வுபெற்றார். இதன் பின் யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்தத் துறைக்கான தற்காலிக விரிவுரையாளராகவும் வருகை விரிவுரையாளராகவும் பதினேழு ஆண்டுகளாகப் பணியாற்றி ஆசிரியத்துவத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

சிந்தனைக்கு விருந்தாக வல்ல நகைச் சுவைகளை இடைவெளியில்லாமல் நடிப்புடனும் நயமுடனுமாற்றும் திறன் இயல்பாகவே இவரிடம் இருந்தமையால் பத்தொன்பதாவது வயதில் நாடகத்துறையில் இணைத்துக்கொள்ளப்பட்டார். 1950இல் யாழ்.இந்து வாலிபர் சங்கத்தில் இணைந்து பல நாடகங்களைக் கூட்டு முயற்சியில் உருவாக்கி மேடையேற்றியதுடன் 'அருமை நண்பன்' என்னும் நாடகத்தை முதன்முறையாக எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். பன்முக ஆளுமைகளுடன் நாடகத்துறையில் புகழ்பெற்றுவந்த இவர் 1958இல் கலையரசு சொர்ணலிங்கத்தின் நெறிப்படுத்தலில் உருவான தேரோட்டி மகன் என்னும் நாடகத்தில் அருச்சுனனாக நடித்ததுடன் 'வழி தெரிந்தது' என்னும் நாடகத்திலும் நடித்திருந்தார்.

ஆழமான தமிழறிவும் தெளிவான சிந்தனையும் கொண்டமைந்த இவரது நாடகங்கள் நாடக நடிகர்களாலும் எழுத்தாளர்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டு அக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வந்தன. இதனால் புதிதாக நாடகங்களை எழுதும் இவரது முயற்சியானது வெற்றிபெறத் தொடங்கியது. 1973இல் எழுதப்பட்ட வையத்துள் தெய்வம் என்னும் நாடகமானது எ .ரி.அரசுவின் நெறியாள்கையில் பலமுறை மேடையேற்றப்பட்டு 1974இல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிலும் அளிக்கை செய்யப்பட்டது.

1976இல் அரங்கத்தார் என்னும் நாடகக் குழுவை அமைத்துப் பல நாடகங்களை மேடையேற்றி வந்த இவர் அதே ஆண்டில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நாடகம் கற்பித்தலுக்கான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவை முடித்து அக்கற்கை நெறியானது தந்த உணர்வாலும் பட்டறிவாலும் 23.01.1978 இல் நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்கினார்.

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 18

ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் முதன் முதலாக நாடகத்தைக் கற்பித்து அனைவரும் இந்தக் கலையைக் கற்றுக் கொள்ள வழிசமைத்து 1978 இல் வரலாறு படைத்தது இவரது கல்லூரி. இந்தக் கல்லூரியானது தொடங்கப்பட்ட போது அக்காலத்தில் நாடகக் கலைஞர்களாக இருந்த எ.ரி.அரசு, ஏ.ரி. பொன்னுத்துரை, பிரான்சிஸ், சூ.ப. பேர்மின், ரி.எ.லோகநாதன், எ.உருத்திரேஸ்வரன், சி.சு.நாகேந்திரா, பொன்.ராண், க.சிதம்பரநாதன் போன்ற பலர் தம்மை இவரது மாணவர்களாக இணைத்துக் கொண்டனர். இவர்களுக்கான களப் பயிற்சிகளை வழங்கியவர்களுள் அ.தாசீசியஸ் முக்கியமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கல்லூரியானது கோடை புதியதோர் வீடு, கந்தன்கருணை, சங்காரம், அபசுரம் போன்ற பல நாடகங்களைத் தொடர்ச்சியாக மேடையேற்றியது. நாடகத்துறையில் எழுச்சியையும் வளர்ச்சியையும் பெரும் திருப்பத்தையும் ஏற்படுத்திய இந்தக் கல்லூரியின் 'ஓடி விளையாடு பாப்பா' என்னும் நாடகமானது ஈழத்தமிழ் அரங்க வரலாற்றில் முதலாவது சிறுவர் நாடகமாகக் கருதப்படுகிறது. இந்த நாடகப் பிரதியை எழுதிய இவர் இன்றுவரை நுற்றுக்கும் அதிகமான நாடகங்களை எழுதியுள்ளதுடன் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் உள்ளார்.

1983 இற்குப் பின்னர் தனது நாடகப் பணியைப் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேரடியாக வழங்கியதுடன் ஆசிரியர்களுக்கான களப்பயிற்சிகளையும் வழங்கி ஆளுமை கொண்ட நாடக மாந்தரை உருவாக்கியதுடன் நாடகத்தை நடிக்க இருப்பவர்களுடன் கலந்துரையாடி நாடகத்துக்கான கருப்பொருளைத் தெரிவு செய்யும் பண்புடையவராகவும் இந்தப் பண்பாட்டை ஏனையவர்களுக்கும் கற்பித்த ஞானியாகவும் விளங்குகின்றார்.

அன்னையிட்ட தீ, மண்சுமந்த மேனியர், வேள்வித் தீ, எந்தையும் தாயும், நரகொடு சுவர்க்கம், நீசெய்த நாடகமே போன்ற நாடக எழுத்துருக்கள் இவருக்கு அழியாப் புகழ் சேர்த்தவை என்பதில் ஐயமில்லை. இவற்றுள் மண்சுமந்த மேனியர் யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டியெங்கும் மேடையேற்றப்பட்டு அனைத்து நிலை ரசிகர்களையும் கொள்ளை கொண்டிருந்தமை உலகறிந்ததே.



இவ்வாறு நாடகத்துறையில் முற்றிப் பழுத்த பழமாகத் திகழ்ந்து வரும் இவரது 'ஆர்கொலோ சதுரர்' என்னும் நடன நாடகமானது 2003இல் மேடையேற்றப்பட்ட போது ஈழத்து நாட்டிய நாடக மரபானது பெரும் மாற்றத்தை உள்வாங்கிக் கொண்டது. தற்போது இசைநாடக நடிகர்களுக்குரிய அரங்கப் பயிற்சிகளை வழங்கிவரும் இவர் மாலைகளுக்கோ பொன்னாடைகளுக்கோ பட்டங்களுக்கோ தலைவணங்காத தன்மானமுள்ள ஒரேயொரு கலைஞராக ஈழத்தில் கலைப்பணியாற்றி வருகின்றார்.

துறைசார்ந்த வல்லுநர்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் பணியாற்றுவதன் ஊடாகவே அத்துறையை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். பல நாடக மேதைகளுடன் இணைந்து இரவு பகல் பாராது பணியாற்றியதன் பட்டறிவு இன்றுவரை எனக்கு உதவுகின்றது. ஆனால் தற்காலத்தில் இணைந்து பணியாற்றும் பண்பாடானது அருகி வருகின்றது என்றே கூறலாம். தன்னம்பிக்கையின்மையும் தங்கள் பெயர் மறைந்து விடுமோ என்னும் சுயநலம் கொண்ட அச்சமும் இவ்வாறான நிலையை எம்மத்தியில் தோற்றுவித்துள்ளது என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

வசாவிளான் தவமைந்தன்

# கோங்கு பட்டைக் குடிநீர் சிறுநீர் கடுப்புக்கு சிறந்தது

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**காரை**

தாவரவியற் பெயர் Randia dumctorium (ரண்டியா டியூமெற்றோரியம்)
குடும்பம் Rubiaccac (ரூபியேசியே)

இதில் குத்துக்காரை, பெருங்காரை, மருக்காரை என்ற பேதங்களுண்டு. குத்துச் செடி முட்களுள்ளது. தனியிலைகள். முட்டையுருவானவை. தனிப்பூக்கள். வெண்மை நிறம். காய்கள் பச்சை நிறம். பழுக்கும் போது சிவப்பு, கறுப்பு நிறமாகும். உண்ணத்தக்கவை.

''காரை தழைக்குக் கடுப்பிரத்தம்போம் புளியைச்
சோரப்பெய் தாக்கிச் சுவைத்தறி நீ''

என்ற அகத்தியர் குணவாக படலுக்கிணங்க இதன் இலையைப் புளி சேர்த்துக் கறி சமைத்துண்ண இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு என்பன நீங்கும்.

இதன் பழம் அதிசாரம், சீதக்கடுப்பு, இரத்தக் கடுப்பு என்பவற்றை நீக்க வல்லது. விதையை நீக்கிப் பழத்தை உலர்த்திக் குடிநீரிட்டுக் காலை, மாலை பருகிவர மேற்படி நோய்கள் மாறும்.



**கோங்கு**

வேறுபெயர் கோங்கு, கணிகாரம், தணக்கு, கோங்கம் காட்டிலவு, மஞ்சள் இலவு
தாவரவியற் பெயர் Cochlospermum gossipium (கோக்லோஸ்பேர்மம் கொசிப்பியம்)
குடும்பம் Bixaccac (பிக்சேசியே)
சிங்களப் பெயர்: எல இம்புல்கினிஹிரிய
சமஸ்கிருதப் பெயர் கிரி சால்மலிக, சிலா கார்ப்பாச
ஆங்கிலப் பெயர் Yellow Silk Cotton

இது மரவகுப்புக்குரியது. இலையுதிர் மரம். தனியிலைகள், அங்கையுருவானவை. பருத்தி [illegible] நிறம். [illegible] விதையில் நீண்ட பஞ்சு இழைகளுண்டு.



மரத்திலிருந்து மஞ்சள் நிற பிசின் வடியும். இதன் இலைகளை வாட்டி வாதவீக்கங்களுக்கு வைத்துக் கட்ட வீக்கம் வற்றும்.

இதன் பட்டையை முறைப்படி குடிநீரிட்டுப் பருகிவர சிறுநீர்க்கடுப்பு, வெள்ளை என்பன நீங்கும். இந்தக் குடிநீரை வாயிலிட்டுக் கொப்புளித்து வர பல்வலி மாறும்.

இதன் பிசினைப் பொடித்து தேன் சேர்த்துச் சாப்பிட்டுவர மூத்திர கிரிச்சுரம், கடுப்பு என்பன நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 188

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | 5 | 6 |
| 7 | | | 8 | 9 | | | |
| 10 | | 11 | | | | | |
| | 12 | | | 13 | 14 | | 15 |
| 16 | | | 17 | | | 18 | |
| | | 19 | | | | 20 | |
| 21 | 22 | | | | 23 | | |
| 24 | | | | | | | |

அனுப்புவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. ஆகாயம்
4. மகாகவி
7. பொல்லு
8. விளங்குதல்
10. மருத்துவம்
12. மருத்துவப் பணியாளர்
13. பிரிபடாத
16. தண்ணீர்
17. பிறப்பின் பின் நடப்பது
19. கூர்மைப்படுத்த உதவும்
20. நோவு
21. தேவாரம்
23. சேர
24. மீளுதல்

### மேலிருந்து கீழ்

1. கணவனை இழந்தவள்
3. நவீன
4. கெடுதல்
5. தேர்
6. அசைச்சொல்
9. விரிப்பது
11. இறப்பின் நினைவுநாள்
14. கருமையைக் குறிக்கும் சொற்களில் ஒன்று
15. கனகச்சிதம்
16. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுபவர்
17. வயலின் எல்லையில் அமைவது
18. பாடசாலைகளுக்கு வருடத்துக்கு இது மூன்று
19. உட்புறம்
22. செல்வம்
23. வீடு

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/-, ரூபா 250/-, ரூபா 200/-, ரூபா 150/- ரூபா 100/ பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம்போட்டி - 188
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 23.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.188 இற்கான விடைகள் 27 11 2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 186 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) பாதுகாப்பு (5) புண் (6) விரைவு (7) தியானி (9) தகர்த்தல் (11) புதல்வி (13) தம் (14) தையல் (17) அதிக (19) சய (20) வரம்பு (21) விரல் (22) திம்பு (23) உடும்பு

### மேலிருந்து கீழ்

(1) பாவிப்பு (2) துரை (3) காவுதல் (4) புதிர் (5) புளிதர் (8) யாத்தல் (10) கவிதை (12) தந்திரம் (15) யதி (16) இயல்பு (17) அவதி (18) கம்பு (19) சரம் (21) விடு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 186 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **செல்வி சுகந்தி ஞானகுரு**
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி, கல்வயல், சாவகச்சேரி

2 ஆம் பரிசு — **ஜெ.அருள்செல்வி,**
நான்காம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி.

3 ஆம் பரிசு — **லோ. றொசில்றா ன்,**
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்.

4 ஆம் பரிசு — **சு.ஜெயகுமாரி,**
மட்டுவில்நாடு கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி.

5 ஆம் பரிசு — **கு.சரணுஜன்,**
'உதயம்' பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு.

### பாராட்டுப் பெறுவோர்

**கே. ஆனந்தராஜா,**
சோமா கொம்பனி வீதி, மல்லாகம்.

**க.செல்லையா,**
கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

**லூ. லக்ஷனா லேரியன்,**
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# பண்பைத்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யார் போட்டார்களோ? எவர் தவறவிட்டார்களோ? அதையெல்லாம் சிந்திக்க அவனுக்கு நேரமேது. எப்பொழுதோ எவரோ அதை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. மீண்டும் தெருவின் இரண்டு திக்கிலும் பார்வையைப் படரவிட்டான். ஒருவரையும் காணவில்லை. ஒருவரும் அவனைப் பார்க்கவில்லை என்பதைத் தீர்மானித்த அந்தக் கணத்திலேயே கைகள் அந்த நோட்டை நோக்கி அசைந்தன.

ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டான். அதிஷ்டக்காரன்தான் அவன் எதிர்பார்த்ததற்கும் மேலாகக் கைகளில் சேர்ந்த ஆயிரம் ரூபாய் பெரிதாகக் கனத்தது. வீட்டிலிருந்து புறப்பட்ட போதிருந்த கற்பனை தடம் மாறி மனம் இப்பொழுது அந்த ஆயிரம் ரூபாவைச் சுற்றிச் சுற்றியே சிறகடித்தது. அதனை எவ்வாறு வீட்டுக்காகச் செலவு செய்யலாம் என விரிந்தது.

இரண்டு பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் சோற்றுப் பொதிகளையே வாங்கி விடலாம். ராமசாமியும் ஒரு சொட்டு நாக்கை நனைத்துக் கொண்டால் நல்லது எல்லாவற்றுக்குமே இது அதிகம். பல வேளைகளில் இதில் நிறையவே மிஞ்சும் மனம் எண்ணமிட்டது.

வந்த வேகத்திலும் விரைவாகவே வீட்டுக்குத் திரும்பினான். வீட்டிலிருந்த ஒரு பிளாஸ்ரிக் பாக் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். வீதியில் கிடந்து எடுத்த ஆயிரம் ரூபாய்க்குள்ளே வாங்கப்போகும் சாமான்களின் பட்டியலொன்றைக் கணக்கிட்டு மனதுக்குள் வரைந்து கொண்டான்.

வீதியில் இறங்கி விரைவாக நடந்தான். எண்ணங்கள் முன்னரை விடவும் வேகமானது. இராமசாமி தனது றோட்டைக் கடந்து அந்த நாற்சந்தியின் இடது புறமாகத் திரும்பி நடந்தான்.

மக்கள் நடமாட்டம் இல்லை. கண்களில் நீர்வடிய அழுதபடி அந்தச் சிறுவன் நின்றுகொண்டிருந்தான். அந்தத் தெருவிலேயே நின்று அழுதழுதே அவன் கண்கள் சிவந்திருந்தன. பலமணி நேரமாய் எதனையோ எதிர்பார்த்திருந்தவனாய் இராமசாமியைக் கண்டதும் அழுத கண்களோடு மிகவும் ஆவலாய் அவனைப் பார்த்தான். அவனது சோகம் படர்ந்த முகமும் அழுது வீங்கிய கண்களும் இராமசாமிக்கோ அவன் மீதில் அனுதாபத்தை ஏற்படுத்தியது. "என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்? என விசாரித்தான். அதைக் கேட்ட மாத்திரத்திலேயே அடங்கிக் கிடந்த சிறுவனது விம்மல் மேலும் விரிந்து பேரழுகையாய் வெடித்தது. யார் பையன்? ஏன் அழுகிறான்? என்பதை அறிய ஆவலானான் இராமசாமி. சிறுவன் விக்கி விக்கி அழுதழுது சொன்னவற்றைக் கேட்டதுமே, இராமசாமியின் மனதில் இதுவரை எழுந்து நின்ற ஆரவாரம் செய்த அதிஸ்டக் கோட்டை அத்திவாரத்துடன் சாய்ந்தது.

வீதியில் கிடந்த பணம் அவனுடையது. அவன் சிறுவன்தானே! அதை அவனே தவறவிட்டிருந்தான். பையன் பாவம் அவனும் தன்னைப்போல் ஒரு தொழிலாளியின் மகன்தான் என்றபோது வர்க்க ஒற்றுமையுடன் இராமசாமியின் மனம் கசிந்தது.

அவனது தந்தை சுப்பிரமணியம், அவனும் வியர்வை சிந்தி உழைப்பவன். அவ்வாறு வியர்வை சிந்திப் பெற்ற அந்த ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, கடைக்குப் போய்ப் பாண் வாங்கி வரும்படி மகனை அனுப்பியிருந்தான். பாண் வாங்கும் முன்னரே முழுமையாய் அந்த நோட்டை வந்த வழியில் தொலைத்து நிற்கும் அவரது மகனின் அழுகை இராமசாமியை ஏதோ செய்தது.

காசைத் தொலைத்துக் கலங்கி நிற்கும் சிறுவனின் ஏக்கத்தை உளங்கொண்ட இராமசாமிக்கு இதயம் கனத்தது. பாதையில் அதிஷ்டமாய்க் கண்டெடுத்த பணத்தைச் சிறுவனிடம் கொடுப்பதா? விடுவதா? என்ற எண்ண இழுபறி. அதுவும் சில நொடிகளுக்குள் ஆடி அடங்கியது.

பணத்துக்கும் பசிக்கும் மேலானது பண்பு.

அந்தச் சிறுவனின் கையிலிருந்து தொலைந்த பணம் அவனுடையதுதான். அந்த உண்மையை உறுதி செய்த பின்னரும் இராமசாமிக்கு அந்த ஆயிரம் ரூபாவையும் தனக்கென எடுத்துக் கொள்ள மனம் இடந்தரவில்லை. அதனைத் தனதென எடுத்துக் கொள்வதால் ஏற்படப்போகும் இலாபம் என்ன? அதனால் கிடைக்கப்போகும் இன்பத்துக்கும் நன்மைக்கும் மேலாக அந்த ஏழைச் சிறுவனின் குற்றமிழைக்காத உள்ளத்துக்கும் அவனது தந்தையான சுப்பிரமணியத்தின் உழைப்புக்கும் மதிப்பளிக்க வேண்டாமா?

தனது கைக்குள்ளே கசங்கிக் கிடந்த ஆயிரம் ரூபாவையும் சுப்பரமணியத்தின் மகனுடைய கைக்குள்ளே திணித்தான். இந்தப் பாதையில் கிடந்துதான் எடுத்தேன் இந்தப் பணம் உன்னுடையதுதான் என்று சொன்னபோது பையனின் முகத்தில் விரிந்த மலர்ச்சி, இராமசாமியின் முகத்தில் மும்மடங்கு மலர்ச்சியைக் கொடுத்தது.

வீட்டிலே பசியுடன் உட்கார்ந்திருக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? முதலாளி முத்தையரிடம் கடன் வாங்கலாம் என்ற நம்பிக்கை விரிந்தது.

ஆயிரம் ரூபாவையும் பையனிடம் கொடுத்து விட்ட திருப்தி எல்லாமே சேர்ந்து உடலையும் உள்ளத்தையும் இலேசாக்கியது.

பையனின் கையில் காசு கிடைத்ததும் அவன் பறந்து போகும் அழகில் ஒரு தெய்வம் குடி கொண்டிருந்தது. மகிழ்ந்தான்.

காலையிலே வீட்டிலிருந்து புறப்பட்ட திசையிலேயே நடக்கத் தொடங்கினான். எந்த நோக்கத்தோடு புறப்பட்டானோ அதே நோக்கத்தோடு மீண்டும் அவனின் நடை. அவனை விரைவுபடுத்தியது. முதலாளியின் வீட்டுக்குப் போனால் கட்டாயம் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நடக்கும் இராமசாமியின் மனத்திலே உன்னதமும் உண்மையும் விளைத்த உற்சாகம், நிறைவான நம்பிக்கையை ஊட்ட நடையிலே வேகம் பிறந்தது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 44

## நீரிழிவு தினத்தை முன்னிட்டு குடாநாடு தழுவிய விழிப்புணர்வு நிகழ்வுகள்

பெருகிவரும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உலக நீரிழிவு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமானது குடாநாடு தழுவிய பல் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி இந்த நோயை எமது சமூகத்தில் மேலும் அதிகரிக்காது கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளது.

1. நடைபவனி விழிப்புணர்வு நிகழ்வு:
காலை 7.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய கிளினிக்குக்கு முன்பாக ஆரம்பிக்கும். நடைபவனி விழிப்புணர்வு நிகழ்வு வைத்தியசாலை வெளிவீதி வழியாக வலம் வந்து மீண்டும் தொடங்கிய இடத்தில் முடிவுறும்.
2. பாடசாலைகள் தோறும் சிறார்களுக்கு நீரிழிவு சம்பந்தமான அறிவூட்டல் நிகழ்வுகள்.
3. இலவச குருதிப் பரிசோதனைகள்.
4. பொது நிறுவனங்களில் நோயின் தாக்கத்தைக் குறைப்பது தொடர்பான பொது மக்களை அறிவூட்டும் நிகழ்வுகள்.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு சமய சமூக நிறுவனங்கள் அரச ஸ்தாபனங்கள், வங்கிகள் மற்றும் கல்வி நிறுவனங்களைக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

**நீரிழிவு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் சாவகச்சேரி, பருத்தித்துறை, அரியாலை, நெடுந்தீவு போன்ற இடங்களிலும் நடைபெறவுள்ளன.**

**நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

*உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## சத்தத்தால் நித்தமும் அசுத்தமாகும் சுற்றாடல்

வணக்கத் தலங்களில் இருந்து ஒலிபெருக்கியில் போடப்படும் நல்லிசைகளும் நல்ல அறிவுரைகளும் தவிர்க்கப்படவேண்டும். அவை உடல் நலனுக்கு நல்லதல்ல என்ற கருத்து பலதரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. இதன் உண்மை நிலை என்ன?

WHO எனப்படுகின்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி 25% ஆன நோய்கள் சுற்றாடல் மாசடைவதனால் ஏற்படுகின்றன என்பது அறியப்பட்டிருக்கிறது. தேவையற்ற சத்தங்கள் சுற்றாடல் மாசடைவதற்கு முக்கிய காரணியாக அமைகின்றன. சுற்றாடலை அசுத்தமாக்கும் பிரதான சத்தங்களாக இயந்திரங்களின் இரைச்சல், வாகனங்களின் இரைச்சல், வாகனங்களால் எழுப்பப்படும் ஹோரண் ஒலி, ரி.வி மற்றும் வீட்டு உபகரணங்களிலிருந்து வரும் ஒலி, ஒலிபெருக்கிகளினால் ஏற்படும் சத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒலியினால் சுற்றாடல் மாசுபடும்போது பல நோய் நிலைகள் மனிதனுக்கு ஏற்படலாம். அவையாவன: மன அழுத்தம், மனச்சோர்வு, ஞாபக மறதி, நித்திரைக் குழப்பங்கள், உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, கேட்கும் திறன் குறைவடைதல், கல்வி கற்றல் திறன் குறைவடைதல் போன்றவையாகும்.

நல்லிசைகளாலும் நல்ல அறிவுரைகளாலும் மக்களுக்கு நல்ல பயன்கள் ஏற்படுகின்றன. இதற்கான பயன்களை மக்கள் வணக்கத்தலங்களுக்கோ அல்லது அதற்கான நிலையங்களுக்கோ சென்று பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இதனை ஒலிபெருக்கிகள் மூலம் தினமும் ஒலி பரப்பினால் அந்தச் சுற்றாடல் மாசடையும்; மக்களை நோயாளிகள் ஆக்கும். மக்களுக்குக் கெடுதல் விளைவிக்கும் எந்தச் செயலையும் இறைவன் விரும்பமாட்டான் என்பது எமக்குத் தெரியும். எனவே தொடர்ச்சியான ஒலிபெருக்கிப் பாவனையை மதநிறுவனங்களில் தவிர்த்துக்கொள்வது நல்லது.

வீதிகளில் அநாவசியமாக 'ஹோரண்' அடிப்பதையும் தவிர்த்துக்கொள்வோம். நல்லமுறையில் வாகனத்தை ஓட்டும் திறனும் மன அமைதியும் சுயநலமற்ற மனப்பாங்கும் இருந்தால் 'ஹோரண்' அடிப்பதை 95 வீதத்தால் குறைத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனும் தெருக்களிலே பலமணி நேரங்களைச் செலவிடுகின்றான்.

பலர் தெருவோரங்களில் குடியிருக்கின்றனர். எனவே தெருக்களில் ஏற்படும் சத்தங்களைக் குறைப்பதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் பெருமளவு தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு தடவையும் 'ஹோரண்' இல் கைவைக்கமுன் எம் மனதில் கை வைத்துக் கேட்போம். இந்த 'ஹோரண்' அவசியம் தானா என்று.

சத்தம் இல்லாத அமைதி ஆரோக்கியத்துக்கு உதவும். நாம் தொலைத்துவிட்ட அமைதியும் ஆரோக்கியம் நிறைந்த உலகமும் மீண்டும் உருவாகும் என நம்புவோம்.

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

## குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் வலிப்புகள்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

**உங்கள் பிள்ளையின் உடல் வெப்பநிலையை அளவிடுதல்**

உங்கள் பிள்ளையின் உடல் சூடாக இருந்தால், இயலுமானால் ஒரு வெப்பமானியின் உதவியுடன் பிள்ளையின் உடல் வெப்பநிலையை சோதித்துப் பாருங்கள். கமக்கட்டில் வெப்பமானியை வைத்து அளவிடும்போது சாதாரணமான உடல் வெப்பநிலை 37° C (98.6° F) ஆகும்.

**மருந்து**

பிள்ளையின் காய்ச்சலுக்கு பரசிடமோல் (பனடோல் அல்லது கல்போல் அல்லது ஐபியூபுரோஃபென் (ப்ருஃபென்) என்பனவற்றைக் கொடுங்கள். எவ் வளவு மருந்து கொடுக்கவேண்டும் அல்லது எத்தனை தடவை கொடுக்க வேண்டும் என்பதை அறிய, மருந்துப் போத்தலில் உள்ள அறிவுரைகளை கவனமாகப் படியுங்கள்.

உங்களுக்குச் சரியாகத் தெரியவில்லையென்றால் மருத்துவர் அல்லது பார் மசிஸ்டுடன் பேசுங்கள்.

**உடை**

பிள்ளைக்கு மெல்லிய ஆடைகளை உடுத்துங்கள். பாரமான படுக்கையாடைகளை அகற்றுங்கள்.

**பிள்ளைக் காய்ச்சல் வலிப்புகள் பொதுவானவையே**

100 இல் ஐந்து பிள்ளைகளுக்கு ஆறு மாதத்துக்கும் ஆறு வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் குறைந்தது ஒரு தடவையாவது காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்றது.

இந்தப் பிள்ளைகளில் ஏறக்குறைய 10 இல் மூன்று பேருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவை காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்றது.

காய்ச்சல் வலிப்புக்கு வலுவான ஒரு மரபுவழித் தொடர்பு இருக்கின்றது. காய்ச்சல் வலிப்புள்ள பிள்ளைகளின் அநேகமான பெற்றோர்களும் காய்ச்சல் வலிப்பை உடையவர்களாகத்தான் இருந்தார்கள். மற்றும் பிள்ளையின் உடன் பிறப்புகளுக்கும் இந்த வலிப்பு வருவது சாத்தியமே.

**பிள்ளைக் காய்ச்சல் வலிப்புகள் மூளையைச் சேதப்படுத்துவதில்லை**

காய்ச்சல் வலிப்பின்போது ஒரு பிள்ளையின் தோற்றம் பெற்றோருக்கு மிகுந்த பயத்தை ஏற்படுத்தலாம். இருப்பினும் எமக்குத் தெரிந்தவரை குறுகிய வலிப்புகள் மூளையைச் சேதப்படுத்துவதோ அல்லது மூளையில் நிரந்தரமான மாற்றங்களை ஏற்படுத்துவதோ இல்லை.

அநேகமான காய்ச்சல் வலிப்புகள், நீண்ட நேரத்துக்கு நடப்பதாகத் தோன்றினாலும் கூட சில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கின்றன.

பிள்ளைக்கு நீண்ட நேரம் நீடிக்கும் காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால் கூட, மூளை சேதமடையும் அபாயம் குறைவாகவே உள்ளது.

**பிள்ளைக் காய்ச்சல் வலிப்பைத் தவிர்த்திட மருந்துகள் தேவையா?**

காய்ச்சல் வலிப்பைத் தடுக்கும் வலிப்பு எதிர்ப்பு மருந்துகள் (அன்டைகன்வல்சன்ட்ஸ் அல்லது அன்டை - எபிலெப்டிக் மருந்துகள்) காய்ச்சல் வலிப்புள்ள பிள்ளைகள் பொதுவாக எடுக்க வேண்டிய தேவையில்லை. இந்த மருந்துகளால் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

உங்கள் பிள்ளைக்கு அடிக்கடி காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால், குறுகிய நேரத்துக்கு செயற்படும் ஒரு வலிப்பு எதிர்ப்பு மருந்தை மருத்துவர் கொடுக்கக் கூடும்.

உங்கள் பிள்ளையை எப்படிப் பராமரிப்பது, எப்போது மருத்துவ உதவியை நாடுவது என்பதை மருத்துவர் விளங்கப்படுத்துவார்.

**ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
**குழந்தை வைத்திய நிபுணர்,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

எல்லாப் பிள்ளைகளுமே குறிப்பாக இளம் பிள்ளைகள் ஏதோ ஒரு வேளையில் சுகவீனமடையவே செய்கின்றார்கள். பிள்ளை காய்ச்சல் வலிப்புடைய உங்கள் பிள்ளையை சுகவீனத்தின் போது கடுமையான விதத்தில் பிரதிபலிக்கின்றது.

ஏனைய சாதாரணமான ஆரோக்கியமான பிள்ளையைப் போலவே அந்தப் பிள்ளையையும் பாதுகாத்து சிகிச்சையளியுங்கள். காய்ச்சலும் வலிப்பும் திடீரென ஆரம்பிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**பிள்ளை வளர்ந்ததும் பிள்ளைக் காய்ச்சல் வலிப்புகள் தானாகவே நின்றுவிடும்**

காய்ச்சல் வலிப்பு இருப்பதால் உங்கள் பிள்ளைக்கு பிற்பட்ட காலத்தில் காக்காய் வலிப்பு வரும் என்று அர்த்தமாகாது.

காய்ச்சல் வலிப்புள்ள பிள்ளைகளில்,நூறில் ஐந்துக்கும் குறைந்த பிள்ளைகளுக்கே காக்காய் வலிப்பு ஏற்படுகின்றது.

**முக்கியக் குறிப்புகள்**

★ காய்ச்சல் வலிப்பு என்பது காய்ச்சலால் தோற்றுவிக்கப்டும் கட்டுப்படுத்த முடியாத துடிப்புகளாகும்.

ஆறு மாதத்துக்கும் ஐந்து வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளில் இது பொதுவாகக் காணப்படுகின்றது.

★ காய்ச்சல் வலிப்பு ஒன்றின்போது உங்கள் பிள்ளையை சௌகரியமாக வைத்திருங்கள். மற்றும் அதன் வாயில் எந்தப் பொருளையும் போடாதீர்கள். பிள்ளையை ஒரு பக்கமாகத் திருப்புங்கள் அல்லது தலையை ஒரு பக்கமாகத் திருப்புங்கள்.

★ காய்ச்சல் வலிப்பொன்றின் பின் பிள்ளையை மருத்துவரிடம் எடுத்துச் செல்லுங்கள்.

வலிப்பு ஐந்து நிமிடங்களுக்கு மேல் நீடித்தால் குழந்தையை ஒரு பக்கமாக சரித்து படுக்க வைத்த வண்ணம் மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு செல்லுங்கள்.

உங்களிடம் கேள்விகளோ அல்லது கவலைகளோ இருந்தால் பிள்ளையின் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.பி.எல் ஃபூட்ஸ் நிறுவனத்துக்கு மூன்று தரச்சிறப்பு விருதுகள்




சி.பி.எல். ஃபூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனத்தின் மூன்று பிரதான தயாரிப்புகளுக்கு ISO 22000:2005, HACCP மற்றும் GMP சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நிறுவனத்தின் உணவு பதப்படுத்தல் பிரிவின் உணவு பாதுகாப்புத்தரம் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. சிபிஎல் நிறுவனத்தின் தயாரிப்புகளான றிட்ஸ்பரி சொக்லேட் வகைகள், டியாரா கேக் வகைகள் மற்றும் கோ ஜெலி போன்றவற்றுக்கு இந்த சான்றுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கேக் மற்றும் சொக்லேட் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்று இந்த மூன்று சான்றுகளையும் ஒரே தடவையில் பெற்றுள்ளமை இது முதல் தடவையாகும். சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தின் அங்கத்துவ கம்பனியான சிபிஎல் ஃபூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனம் 2002 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதிலிருந்து பல புதிய சொக்லேட், கேக் வகைகள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் நிறுவனம் தாபிக்கப்பட்டதிலிருந்து தனது வளங்களான உற்பத்தி செயன்முறைகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் மனித வளம் போன்ற விடயங்களில் அதி களவு அக்கறை செலுத்தி வருகிறது.

இந்த சான்றுகள் கிடைத்தமை குறித்து சிபிஎல் ஃபூட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த குணவர்த்தன கருத்து தெரிவிக்கையில்:

இந்த சான்றுகள் எமக்கு கிடைத்துள்ளமை காரணமாக எமது வெளிநாட்டு ஏற்றுமதியில் பாரிய மாற்றம் ஏற்படும். சர்வதேச தயாரிப்புகளுடன் எமக்கு போட்டியிட சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த சான்றுகளை பெறுவதற்காக நாம் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளின் காரணமாக சிறந்த செலவு கட்டுப்படுத்தல்கள், விரயங்களை தவிர்த்தல் மற்றும் அபாயங்களை தவிர்த்தல் போன்ற செயன்முறைகளை மேற்கொள்ள முடிந்தது.

இவற்றை நாம் தொடர்ந்து நடைமுறைப்படுத்துகையில் எமது போட்டியாளர்களுடன் சிறந்த போட்டிகரமான சவாலை ஏற்படுத்த முடியும் என்றார். மேலும் றிட்ஸ்பரி சொக்லேட் வகையானது சிபிஎல் ஃபூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனத்தின் முன்னணி தயாரிப்பாக திகழ்வதுடன், இந்த சான்றுகள் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கு விரிவாக்கல் நடவடிக்கைகளை மேற் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. - என்றார்.

றிட்ஸ்பரி சொக்லேட்ஸ் மற்றும் டியாரா கேக் வகைகள் அண்மையில் இடம்பெற்ற SLIM வர்த்தக நாம விருதுகளில் 5 விருதுகளை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் றிட்ஸ்பரி சிறந்த உள்நாட்டு தயாரிப்புக்கான தங்க விருதையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# DHL எக்ஸ்பிரஸ் சேவை யாழ்ப்பாணத்துக்கும்

உலகின் முன்னணி சர்வதேச Express சேவைகளை வழங்கும் DHL எக்ஸ்பிரஸ், தனது புதிய சேவை நிலையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் வடபகுதியை சேர்ந்தவர் களுக்கு Express Shipping பொதி சேவைகளை வழங்க முன் வந்துள்ளது.

DHL எக்ஸ்பிரஸ் நிறுவனம் இலங்கையில் சுமார் 30 ஆண்டு காலமாக தனது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் சேவை நிலையமானது இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள முதலாவது சேவை வழங்குநர் நிலையமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சேவை நிலையத்தின் மூலம் DHL Express Global வலையமைப்பு நிலையத்தை சேர்ந்த 220க்கும் அதிகமான நாடுகளுக்கு விரைவாகவும், நம்பிக்கையுடனும் பொதி அனுப்பல் சேவைகளை பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இந்த சேவை நிலையத்தின் மூலம் விசேட சேவைகளான குறுகிய காலப்பகுதியில் சென்றடையக்கூடிய ஆவணங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க வர்த்தக தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய பொதியிடல் வசதிகளையும் DHL Express Easy Box ,Flyers போன்றனவும் வழங்கப்படுகின்றன.

DHL எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் மனிஷ் படெல் கருத்து தெரிவிக்கையில்:

எமது வாடிக்கையாளர்களுடன் நாம் நெருக்கமான உறவைப் பேணும் வகையில், எமது DHL சேவை நிலையம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ளது. விநியோகித்தலின் நம்பகத்தன்மை, குறுகிய காலத்தில் விநியோகம் மற்றும் நெகிழ்வுத்தன்மை போன்றன வாடிக்கையாளர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்த புதிய கிளையின் மூலம் வழங்கப்படும் சேவைகளின் மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு பெருமளவு அனுகூலங்கள் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார். (த)




சர்வதேச சிக்கன தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கி சுன்னாகம் கிளை ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வில் வலயக்கல்வி பொது முகாமையாளர் கே.சு.டி.சுமணசிறி சேமிப்பில் பணம் வைப்புச் செய்த பயனாளி ஒருவருக்கு நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கிறார். (த)

# எடிசலாட்டுக்கு வெள்ளி விருது

2010ஆம் ஆண்டின் முற்பகுதியில் அறிமுகமாக இலங்கையில் பிரவேசித்த எடிசலாட் நிறுவனத்தின் சிறந்த அறிமுக செயற்பாடுகள் மற்றும் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கௌரவிக்கும் வகையில் SLIM விருதுகளில் எடிசலாட்டுக்கு வெள்ளி விருது வழங்கப்பட்டிருந்தது.

இந்த விருதுக்காக எடிசலாட் தெரிவு செய்யப்பட்டமைக் கான பிரதான காரணங்களாக இலங்கையில் அறிமுகப்படுத்தும்போது நிறுவனம் கையாண்டிருந்த சிறப்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் குறுகிய காலப்பகுதியில் இலங்கையர்கள் மத்தியில் இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் பிரபல்யம் பெற்றுள்ளமை போன்றன அமைந்திருந்தன.

எடிசலாட் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அதன் வாடிக்கையாளர் எண்ணிக்கை 3.5 மில்லியனாக அதிகரித்தது. அத்துடன் 3.75ஜ வலையமைப்பு அறிமுகத்துடன், தொழில் நுட்ப கண்டுபிடிப்பு துறையில் சந்தை முன்னோடியாக தன்னை நிலை நிறுத்தியுள்ளது.


எடிசலாட் ஆப்சோன், இலங்கையிலுள்ள முதலாவது மூன்றாம் தரப்பு மொபைல் ஆப்ளிகேஷன் வடிவமைப்பு தளம், இலங்கையர்களுக்கு அதியுயர் தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்குவதற்கான தன்னை அர்ப்பணித்துள்ளமையை எடுத்துக்காட்டுகிறது.

வண்ணத்துப்பூச்சி, மலர் செண்டு போன்ற இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் எடிசலாட் குறியீடு அமைந்துள்ளமை வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக மனதில் பதியக் கூடியதாக அமைந்துள்ளது. (த)



இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளைக்கான புதிய கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நினைவுக்கல்லை இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க திரைநீக்கம் செய்து வைக்கிறார். அருகில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன், இலங்கை வங்கியின் பிராந்திய பொது முகாமையாளர் கே.ஈ.டி. காமணஸ்ரீ, செயற்பாட்டு முகாமையாளர் ஜெயந்திரா மற்றும் கிளிநொச்சி இலங்கை வங்கி கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமாரன் ஆகியோர் உள்ளனர். (த 86)

# Digital House அறிமுகப்படுத்திய நீர் புகாத BENQ கமராக்கள்



சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற BENQ கமராக்களை அறிமுகப்படுத்தும் இமேஜ் டுடே கண்காட்சி கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்பில் நடைபெற்ற இமேஜ் டுடே கண்காட்சியிலேயே இக் கமரா டிஜிட்டல் ஹவுஸ் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

எட்டு வித்தியாசமான மாதிரிகளில் இலங்கை சந்தைக்கு முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்படுகின்ற கமராக்கள் மிக அழகிய தோற்றத்தையும் மெல்லிய உருவத்தையும் கொண்ட வகையில் அமைந்துள்ளது.

அமெரிக்க தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ள கமராக்கள் இலங்கை டிஜிட்டல் கமரா சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அதன் உள்ளூர் முகவர் நிறுவனமான டிஜிட்டல் ஹவுஸ் தெரிவித்துள்ளது.

அனைத்து BENQ கமராக்களும் குறைந்தபட்சம் 14 மெகாபிக்ஸல் கொண்டதாக அமைந்துள்ளது. அத்துடன் யாரும் எதிர்பார்க்காத மலிவு விலையிலேயே இவை விற்பனை செய்யப்படவுள்ளது.

கண்காட்சியின் போது வோட்டர்புரூப் (Waterproof) கமராக்கள் தண்ணீர் தாங்கியில் போடப்பட்டு அது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் தண்ணீரில் 5 மீற்றர் ஆழத்தில் 2 மணித்தியாலயம் வரையில் இக்கமராக்களை கொண்டு படங்களை பிடிக்கலாம்.

P1410, S1430, LM100, AE200, AE100, C1460 மற்றும் இ1430 ஆகிய 7 ரகத்தை சேர்ந்த கமராக்களும் இதன் போது அறிமுகப்படுதப்பட்டது. இவை அனைத்தும் அதியுயர் தொழில் நுட்பத்தை உள்ளடக்கியுள்ளது. 720க உயர்தர வீடியோ ரொக்கோடிங்கும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.


அமெரிக்காவின் முன்னணி நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த கமராக்கள் இத்தகைய பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. டிஜிட்டல் ஹவுஸ் (தனியார்) நிறுவனம் டிஜிட்டல் குரூப் ஒப் கம்பனியின் (DGS) இணை நிறுவனமாகும்.

1993 முதல் தனது பணிகளை இலங்கையில் ஆரம்பித்து மிக வெற்றிகரமாக நிறுவனம் இதுவரையில் இயங்கி வருகின்றது. தகவல் தொழில் நுட்பம் தொடர்பாக இலங்கையில் முன்னிலை பெற்றுள்ள 10 நிறுவனங்களில் DGS நிறுவனமும் இடம்பெற்றுள்ளமை அதன் ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகளைக் கட்டுப்படுத்தினால் வாழ்க்கை சொர்க்கமாகும்

ஆண்டவன் பெண்களின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுத்தும் அதிலே திருப்தியற்று வீணான ஆசைகளில் மனதைச் செலுத்திப் பெண்கள் தம் வாழ்க்கையைத் தாமே நரகமாக்கி வாழ்வது முறையானதா? இந்த விடயத்தில் நம் சகோதரிகள் மிகமிக விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் பெண்களுக்கு ஏற்படுகின்ற அளவுக்கதிகமான பேராசைகளால் குடும்பத்தில் நிறையவே நரக வேதனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இல்லத்தரசியாக இருக்கின்ற போது குடும்பத்துக்கான தேவைகள் அதிகமாகவே இருக்கும். அவை அனைத்தும் நிறை வாகக் கிடைக்க வேண்டும்; எல்லாவற்றிலும் நாம் நூற்றுக்கு நூறாக இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு வாழ்க்கைத் துணைவரோடு தேவையில்லாத சர்ச்சைகளில் ஈடுபட்டுக் குடும்பத்தையே போர்க்களமாக்கி விடுவது தேவைதானா?


சுபா,
சுன்னாகம்.

குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உணவு கிடைக்கிறதோ இல்லையோ அயல்வீட்டுப் பெண் நாகரீகமான சாறி அணிந்து கோயிலுக்குப் போனால் ஏனைய பெண்களுக்கு அது உடனடியாகக் கிடைத்துவிட வேண்டும். இல்லையேல் சில பெண்களுக்கு மூச்சே நின்றுவிடும். அடுத்தவரின் ஆடம்பர வாழ்க்கை போல் தாமும் வாழ வேண்டும் என்று நினைத்து தம் குடும்பத்தை போர்களமாக்காமல் நல்ல மனைவியாக, நல்ல தாயாக, வாழ்ந்து குடும்பத்தைக் கோயிலாக மாற்ற எம் சகோதரிகள் முன்வர வேண்டும்.

பெண்கள் எவ்வளவுதான் பட்டங்களைப் பெற்றாலும், நல்லமுறையில் செயற்படுக்கின்ற போதுதான் நல்லகுணம் கொண்ட பெண் என்ற பட்டத்தைப் பெற முடியும்.

கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறு, மனதிலே நிறைவான அமைதி, சாந்தமான புன்னகை வதனம் இவை இருப்பதே எம் வாழ்வுக்கு நிறைவான சொத்து. தேவைக்கேற்ப இருந்தாலே போதும். அதைவிடுத்து ஆடம்பரத் தேவைகளை எண்ணி நிகழ்காலத்தை இருள் மயமாக்காதீர்கள்.

## உறங்காத இரவுகள்...



ஓரிரு இரவுகளல்ல
ஒவ்வொரு இரவும்
உறங்காத இரவாகத்
தொடர்கின்றது....
அத்தனை இரவுகளும்
அம்மாவின் நினைவுகளை
சுமக்கின்றன.....
பத்து மாதங்கள் பட்ட கஸ்ரமும்
பள்ளிப் பருவத்தில் சொன்ன கதைகளும்
அள்ளி அணைத்தெனக்கு
சொன்ன அறிவுரைகளும்
மணம் முடித்துப் பார்த்து
மலர்ந்த இன்முகமும்
மனைவி பேசினாலே
நொந்த தாய்முகமும்
பேரப்பிள்ளை பிடிவாதத்தில்
பேதலித்த அம்மா முகமும்
என
ஒவ்வொரு இரவும்
ஒவ்வொரு நினைவு....

ந.வினோரூபன்,
யா/நெல்லியடி மத்திய ம.வி.

# பெண்களின் பிடிவாதம் அவர்களின் வாழ்க்கையையே அழிக்கும்


வந்தனா,
கரவெட்டி

பெண் என்பவள் பல பட்டங்கள் பெற்று ஆணைவிட பெரிய பதவி வகித்தாலும் ஏன் நாட்டையே ஆள்பவளாக இருந்தாலும் அவை எல்லாம் அவளுக்கு வாழ்க்கையில் பெருமை, சந்தோஷம் என்பவற்றைத் தேடித்தராது. எந்தப் பெண் குடும்பத்தைக் கோயில் என நினைத்து அதன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்கின்றாளோ அவளுக்குத்தான் சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றன. குடும்ப நிர்வாகத்தைச் சரிவர நடத்தமுடியாமல் தன் பதவிகளை நிர்வாகம் செய்யும் பெண்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். குடும்பம்வேறு, பதவி வேறு. அதனைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். உத்தியோகத்தில் காட்டும் கண்டிப்பை வீட்டில் ஒருபோதும் காட்ட முயலக்கூடாது. குடும்பத்தை அன்பால் கட்டிப்போட வேண்டும். பெண்ணைக் குத்துவிளக்குக்கு ஒப்பிடுவார்கள். காரணம் குத்துவிளக்கால் வீட்டில் தீபமும் ஏற்றலாம்; அதே தீபத்தால் வீட்டையும் கொளுத்தலாம். இதில் முழுப்பங்கும் பெண்ணைத்தான் சார்ந்தது.

பல பெண்கள் தமது முன் கோபத்தாலும், பிடிவாதத்தாலும் தம் வாழ்வை வீணாக்கி வருகின்றனர். மாயமான் என்று இராமர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதுதான் வேண்டும் என்று பிடிவாதம் கொண்டு அதன்பின் இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதை பட்ட கஸ்டங்கள் எத்தனை. இறுதியில் தீக்குளித்து தன் கற்பையே நிரூபிக்க வேண்டி ஏற்பட்டது. பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வாழ்வில் யாரும் மண் அள்ளிப் போட வேண்டியதில்லை. அவர்களாகவே போட்டுக் கொள்வார்கள். பிடிவாதம் குலநாசம் என்பார்கள். இது ஏனோ அதிகமான பெண்களுக்குப் புரிவதில்லை. ஆனால் குடும்ப நிர்வாகம் என்பது சில பெண்களுக்கு ஒரு கலையாக உள்ளது. கணவன், குழந்தைகள் மட்டுமே அவர்கள் உலகமாக இருக்கின்றது. அதற்குக் காரணம் கணவனது சர்வாதிகார நடவடிக்கை அல்ல; குடும்பம் என்ற வட்டத்துக்குள் இருந்து அவர்கள் வெளிவர விரும்பாததுதான் காரணம். அதற்காக அந்தப் பெண்களை உலகம் தெரியாதவர்கள் என்று கூறிவிட முடியாது. இல்லத்தின் அரசிகள் அவர்கள். அவர்களை எவராலும் வாழ்வில் ஜெயித்து விட முடியாது. வாழ்க்கை எனும் வண்டியின் அச்சாணி பெண்கள்தான். அவர்களால் மட்டுமே வாழ்வை சீராக நடத்த முடியும். பொன்னான வாழ்வை மண்ணாக்காது ஒவ்வொரு பெண்ணும் வாழ வேண்டும். அதுதான் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தரும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



## கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணி,

உன் தங்கையை உயிருக்குயிராய் நேசித்த நபர் இப்போது உன் தங்கையை ஏமாற்றிவிட்டதாக மிகவும் மனவேதனையுடன் எழுதியிருந்தாய். உன் தங்கை அவன் மீது உண்மையான அன்புதான் வைத்தாள். ஆனால் அவனுக்கோ அது வெறும் பொழுதுபோக்கான விடயமாகிப் போய்விட்டது. உன் தங்கைபோல் நிறையப் பெண்கள் தகுதியற்ற ஒருவன் மீது காதல் கொண்டு ஏமாந்து விடுகின்றனர்.

வாழ்க்கையில் எவருக்கும் காதல் அனுபவங்கள் வாழ்வில் வந்து போவது தவிர்க்க முடியாதது. அதில் வெற்றி உண்டு என்றாலும் தோல்வியே அதிகம். இதைப் புரிந்துகொண்டு பலவீனமடையாது இந்தக் கொடிய நோயிலிருந்து அதிஷ்டவசமாக மீளமுடிந்ததே என்று எண்ணி அவளை நிம்மதி அடையச் சொல்.

பூ வீழ்ந்து விட்டதே என்று கொடி புலம்புவதில்லை. மறுபடியும் பூத்துக் கொள்கின்றது. அதுபோல்தான் காதலும். காதல் மட்டும் வாழ்க்கையல்ல; அது வாழ்க்கையின் ஒரு பகுதிதான். இதனை உணர்ந்து கொண்டால் காதலில் ஏற்படும் ஏமாற்றங்களைச் சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியும். உன் தங்கைக்கு தைரியம் சொல். அவளது வாழ்வில் நிச்சயம் வசந்தம் வீசும்.

அன்புடன்....
கங்கா.

## பெண்களைப்பற்றி...



* இந்த உலகத்தை ஒவ்வொருவருக்கும் காட்டும் சுட்டுவிரல் பெண்.
* திருமண பந்தம் என்னும் ஆத்மார்த்த உறவால் சில பெண்கள் பழிவாங்கப்படுகிறார்கள்.
* புகுந்த வீடு, பிறந்த வீடு என்னும் இரு வீடுகளின் உடைமை பெண்.
* குடிகாரக் கணவனின் வன்முறையில் சிக்கும் பெண் சகல வன்முறைகளையும் அனுபவிக்கின்றாள்.
* கணவனின் உண்மை அன்பும் அரவணைப்பும் கிடைக்கும் பெண்ணே சிறந்த இல்லறத்தை ஆளும் இல்லரசி.

ரவீந்திரகலா,
லவ்லேன், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டை முன்னிட்டு

மாபெரும் சலுகை

High Quality

பனர் பிரதியாக்கம் 35/=

மட்டுமே...!

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்

யாழ்ப்பாணம் (C/5723) (6-7-8)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம், ஸ்ரேசன் வீதி, சிவன் கோயில் அருகில் செயற்படும் கராஜுடன் சுற்றுமதில் கிணறுடனான 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கராஜ் தேவையில்லாதவிடத்து தனிக் காணி மட்டும் விற்கப்படும்.

தொ ர்பு: 0777066148 (10331)(3,7,8)

## விற்பனைக்கு

அரச அலுவலரின் தனிப் பாவனையில் இருந்துள்ள மிகவும் நல்ல நிலையில் உள்ள NPHC xxxx இலக்க Honda Super Cup Custom 50 (Badge model) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.


தொ ர்பு 0779233437 (10320) (6-7-8)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுக்கும் ஏற்ப நல்ல நிலையிலுள்ள 2¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(10300) (6-7-8) தொடர்பு -0776943532

## திருமண வாழ்த்துக்கள்



கனடா (ரொரண்டோ) வில் நேற்று (12.11.2011) சனிக்கிழமை திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட

**திரு.திருமதி தமையந்தன் - நித்தியா**

தம்பதியினரை இறைவன் அருளுடன் என்றும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அக்கா, அத்தான், மாமா,
பிள்ளைகள்:
யதுர்ஷா, யதுர்சன், நிஷானி
உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (10404)(1,4,7)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் நாவலர் வீதி சந் திக்கு அருகில் நல்ல நிலையில் சகல தளபாடங்களுடனும் கூடிய வீடு தனியாகவோ, பகுதியாகவோ திணைக்களங்களுக்கோ வாடகைக்கு உண்டு. தொ ர்பு: 0777941089 (10298) (3,7,8)

## காணி விற்பனைக்கு

கைதடி சந்தியிலிருந்து (ஏ-9வீதி) 200 மீற்றர் தூரத்தில் 4 பரப்புக் காணியும், 3 கி.மீற்றர் தூரத்தில் கைதடி வடக்கில் (எக்கட்டியன்புலம்) 6 பரப்புக்காணியும் வீடு கட்ட உகந்தது, உடனடியாக விற்பனைக்குண்டு.

தொ ர்பு: 0718432030 (10350) (3,7,8)

## கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் ( நகரசபைக்கு அருகில்) இரு தளங்கள் ( ஒரு தளம் -1560 sq Feet) அடங்கிய மேல்மாடிக் கட்ட டத் தொகுதி வாடகைக்கு உண்டு.

தொ ர்பு: 0773636129,0771159862 (10360)(3,7,8)

## வீடு விற்பனைக்கு

மீசாலை அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு

தொ ர்பு 0779711972 (C/5749) (6-7-8)

## வயல் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் , நாவற்குழி, தெனியன் வெளியிலுள்ள ஒரு ஏக்கர் வயல் உடன் விற்பனைக்கு. நல்ல விளைச்சல் தரும். ஆகக்கூடிய விலை.

தொ ர்பு: 0776056995 (சி/5980)(3,7,8)

## CAR FOR SALE

300 - xxxx Ford Laser (Japan) for sale, 1998 Model Petrol, mannal, power, stearing, full A/C, 12 CD Loader, Alloywheel, high beat, mufler color silver.

Contact - 0772920304 (10349) (6-7-8)

## சேவை

UK, Singapore, Germany போன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலை வாய்ப்பு. தொடர்பு: 0779692434

## மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ (NON-RC) கௌரவ குடும்பம் 1975 ஆம் ஆண்டு பிறந்த எந்த வித தீய பழக்கங்களும் அற்ற இளமைத் தோற்றம் உள்ள அழகான மணமகனுக்கு அழகான, படித்த கிறிஸ்தவ கௌரவ குடும்ப பெண்ணை எதிர்பார்க்கின்றோம். மணமகனுக்கு சொந்த வீடு UK இல் உள்ளதுடன் UK Citizen உள்ளது. தற்போது BSc படித்து விட்டு 10வருடமாக Computer Desigener ஆக பணிபுரிகின்றார். தொடர்பு: 0771965521, 0213211795E-maill :rajanraj77@yahoo.com (10297)(3,7,8)

## சிறிய கடை வாடகைக்கு

இல 334, பொன்னம்பலம் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தியில் பழைய வெலிங்டன் திரையரங்கு முன்பாக சிறிய கடை வாடகைக்கு உண்டு.
தொ ர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0212227893 (10339) (6-7-8)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள GK xxxx தொடர் இலக்கமுடைய சிவப்பு நிற CD 200மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

(C/5742) (6-7-8) தொடர்பு :- 0759251078

## தேவை

கொழும்பு,கோட்டை,நான்காம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பிரபல பலசரக்கு மொத்த வியாபார நிலையத்துக்கு வேலைக்கு கணக்காளர் உட்பட ஆள்கள் தேவை.

(10089) (6-7-8) தொடர்பு -0775182548

## வீடு விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் ¾ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

(10279) (6-7-8) தொடர்பு :- 0778282783, 0775078421

## காணி விற்பனை

முல்லைத்தீவு, அளம்பிலில் உள்ள உடுப்புக் குளம் 5 ஆம் கட்டைப் பகுதியில் முல்லைத் தீவு புல்மோட்டை திருகோணமலை பிரதான காப்பெற் வீதியில் 10 ஏக்கர் தென்னந் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 0778691666, 0777208729 (10401) (6-7-3)


## திருநெல்வேலி அபான்ஸ் இல்

269, பலாலி வீதி, கந்தர்மடம், 021 222 0247, 021 222 0248

இன்றே ஆரம்பமாகிவிட்டது
நத்தார் பண்டிகைக் கால சலுகைகள்



அபான்ஸ் காட்சியறையில்...
புதிய வர்ண LCD, LED, 3D தொலைக்காட்சிப் பெட்டிகளை விசேட விலைக்கழிவில் நத்தார் சலுகைகளோடு 12, 15, 18 மாத தவணைக் கொடுப்பனவில் வட்டி இன்றிப் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள் திருநெல்வேலி அபான்சுக்கு...

உடன் நாடுங்கள்
இன்றே
பெற்றுக்கொள்ளுங்கள்

அரச ஊழியர் நிரந்தர வியாபாரிகளுக்கு விசேட சலுகைகள்

உங்களிடம் இருக்கும் பழைய தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை கொடுத்து LCD TV ஒன்றை விலைக் கழிவில் பெற அரிய வாய்ப்பை வழங்குகின்றோம்.

தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், குளிரூட்டிகள், AC, DVD, றேடியோ, கணினி லப்டொப் மற்றும் கணனி றைஸ்குக்கர் போன்ற மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/5750)(1,8)

# IELTS

BRITISH COUNCIL

IELTS FOR UK
STUDENT VISA APPLICANTS


### What is IELTS?

IELTS is the international English Language Testing System, the world's proven English language test. Over 1.5 million candidates took the test evetry year to start their journeys into international education and employment.



We Provide

1. A Placement test which determines to which level of English you belong Updated course modules
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. 40 Practice test.
4. Free IELTS pack & Mock Exams



'British Council Trained Trainers'

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

IELTS Registration Centre For British Council

| | |
|---|---|
| Course Schedule | Sat & Sun |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

For registration and further details contact

CITY COLLEGE OF ENGLISH

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 3216027
077 8803887

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்...













வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் இடம்பெற்ற பண்பாட்டுப் பேரணியில் தமிழ்ப் பெரியார்களின் வேடப் புனைவுகள் மற்றும் சிறுமிகளின் நடனம். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்..அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தேசியக்கொடி ஏற்றுகிறார். பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமை உரையாற்றுகின்றார். கலைஞர் கௌரவிப்பில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலைப் பரிதி விருதை கலைஞர் ஒருவருக்கு வழங்கி கௌரவித்தார். அருகில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி யாழ்.பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் மு.சிவனேசன் ஆகியோரும் உள்ளனர். (ம-190)





தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்பட்டு வரும் இலவச வைத்திய முகாமில் சிகிச்சை அளித்து வந்த டாக்டர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் டாக்டர் எம்.யோகேஸ்வரதேவருக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனும், டாக்டர்கள் சி.சிவயோககுரு, பொன் சின்னத்தம்பி ஆகியோருக்கு வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்தியசாலை டாக்டர் கே.மயிலேறும் பெருமாளும், டாக்டர் சி.இராசலிங்கத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரனும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கின்றனர். (ம-236)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகர் சபையின் சமயபாடப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவ சமய பாடப்பரீட்சை இன்று ஞாயிற்றுக் கிழமை காரைநகரில் 12 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சையில் இம்முறை 1260 மாணவர்கள் தோற்றவுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலாளர் க.நேர்த்திரானந்தன் தெரிவித்துள்ளார்.

தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான காரை நகர் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் தோற்றவுள்ள இப்பரீட்சையில் பிரிவு ரீதியாக அதிக புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் வகுப்பு ரீதியாக முதல் 5 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன. (ம-250)

## அமெரிக்க வீசா லொத்தர்

எம்மூலம் விண்ணப்பித்தவர்களுக்கு ரசீதும் படங்களும், மின்னஞ்சல் இல்லாதவர்களுக்கு Email, Username, Password அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்காதோர் தொடர்பு கொள்ளவும்.

Tel: 0775811106 Email: bbsnetting@yahoo.com

BBSNETTING, No: 3/14, Pinwatta Road, Dehiwala.

## விற்பனை முகவர் தேவை (யாழ்ப்பாணம்)

- ஐஸ்கிறீம் இயந்திரம்
- பொப் கோண் இயந்திரம்
- யூஸ் மிஷின்
- ஹொட்டல்/பேக்கரி உபகரணங்கள்

மேற்குறிப்பிட்ட பொருட்களை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதற்கு

**தகுதியான விற்பனை முகவர்** தேவை

**WINRICH INTERNATIONAL (PVT) LTD**

No. 70-18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Colombo 03.

**தொடர்புகளுக்கு:**
**077 1070710, 077 3850089**

## கார் விற்பனைக்கு

நிஷான் பல்சர் 300
கார் விற்பனைக்கு / வாடகைக்கு உண்டு.
**T.P.: 0772673858**

## தேவை

தெஹிவளையில் இயங்கும் கட்டட கம்பனிக்கு உடனடியாக அனுபவமுள்ள மேசன் பாஸ், வேலையாள்கள் தேவை.
சம்பளம் 1100/= -1500/= வரை
இல. 23A, வண்டவட் பிளேஸ், தெஹிவளை.
தொ.பே: 0777417237 (4-6-7)

## வான் விற்பனைக்கு

56 - XXXX ,இலக்கமுடைய TOYOTA LITEACE VAN விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0779353065 (4-6-7)

## வாகன விற்பனை

Honda CD 200CC Road Master (Blue), புதியரகம், 92 Sri 5241 (1/80) 86 Sri 3517 (2/80). ஒரு உரிமையாளர்.
T.P. 0776511299/0726 111527 கொழும்பு 6

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில 2 மாதங்கள் தனியாகவும் 3 ஆம் மாதம் மாணவர்களுடனும் By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக சண்டிலிப்பாய். Tel-0776751649 (4-6-7)

## இனி இல்லை நெஞ்சுவலி!!!




இருதய நோயாளிகள் நெஞ்சுவலி இன்றி எதிர்காலத்தில் சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்து இரத்தவோட்டத்தை சீர்படுத்தும் பக்கவிளைவுகள் இல்லை. சுகமான எதிர்காலம் உறுதியானது.

எமது ஏனைய சிகிச்சைகள்
- புற்றுநோய் கவனிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டு முதுகுவலி
- புரொஸ்டிரேட் பிரச்சினை
- ஒற்றைத்தலைவலி
- மன அழுத்தம்
- இருமல் & சளி
- படுக்கைப்புண்
- நீரிழிவுப்புண்
- விஷ வைரஸ் பாதிப்பு

### உடல் மூட்டுகளில் வலியா?

*கை,கால், இடுப்பு,கழுத்து இவைகளில் வலி
*வீக்கம், பிடிப்பு, இறுக்கம் இருந்தால் ஒரு வைத்தியரை சந்தித்து சுகம் பெறுங்கள்.

Sponsored by
FAIR PHARMA (PVT) LTD
(ஆயுர்வேத மருத்துவம்)
Level 5 / East Tower / 1C, World Trade Centre, Colombo 01.
0094 115 517 897, 5 551 879, 5 558 442.
Fax: 5 517 756
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com

யாழ்ப்பாணம் விநியோகஸ்தர்கள்
ரி.ராஜவேல் மதுராஜன் மெடிக்கல்
கொடிகாமம் வீதி, நெல்லியடி
077 4656428

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330

BOI APPROVED & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## VACANCY

சிறந்த வேலை வாய்ப்பு உங்களை நாடி வந்துள்ளது.

1. நீங்கள் இலங்கையின் முன்னணி விளம்பரப்படுத்தல் நிறுவனத்தில் இணைய விரும்புகின்றீர்களா?

02. கீழ்க்காணும் வேலைப்பிரிவுகளில் தற்போது வெற்றிடங்கள் உள்ளன

- உகந்த/ ஒட்டு வேலை செய்பவர்
- வர்ணம் தீட்டுணர் (Spray மற்றும் தூரிகை)
- ஒட்டு பட வேலை (Sticker)
- பைபர் மற்றும் கிளடிங் வேலை
- வாகன ஓட்டுனர் (Light, Heavy)
- டிஜிடல் இயந்திர இயக்குனர் ( Printing Machine)
- வரை கலை நிபுணர் ( Graphic Designer)
- மின் வேலையாளர் (Electrician)

**திரை அச்சு பதிவு நிபுணர்**

குறித்தபர் - இத்துறையில் சிறந்த அறிவும் அனுபவமும் உள்ளவராக இருக்க வேண்டும். (குறிப்பாக ஸ்டென்சில் கட்டிங் மற்றும் பனர் பிரின்டிங்)

இத்துறையில் வேலை பார்க்க விரும்புவர்கள் அனுபவம் இல்லாது உதவியாளாராக பணி புரியலாம்
தனித்த நபரின் தகைமை, அனுபவத்தை பொறுத்தே சம்பளம் தீர்மானிக்கப்படும்.
மேற்குறிப்பிட்ட நபர் நீங்களா? உடனே சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் திங்கள் - வெள்ளி காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிக்கும் இடையில் எமது காரியாலத்திற்கு சமூகமளிக்கவும்.

***Frontline Outdoor Advertising (pvt) ltd.***
93/1, Sri Dhammadara Road, Rathmalana.
Contact No : 0727861196, 0727861200
www.frontlineoutdoor.com

## மணமகள் தேவை

யாழ். நல்லூர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச நிறுவனத்தில் தொழில் புரியும் மண மகனுக்கு 35-39 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.
S.Jeeva, 521/3, Galle Road, Wellawatte, Colombo -6.
Tel: 0716970264
(4-6-7) (சி/5989)

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் Communication NetCafe தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. Computers,Printers, Photo Copy, Scanner, Binding, Laminating Machines, Telephone booth, Counter table, Cabinet.
தொடர்பு: 0777 739883

## வீடு விற்பனைக்கு

யாழ். புனித பொஸ்கோ பாடசாலையின் சமீபமாக நல்லூர் ஆலயச்சூழல், மாநகரசபை மாவட்ட செயலகம் உட்பட அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள், புகையிரத நிலையம், பிரபல கல்லூரிகள் என்பவற்றை ½ km தூரத்துள் கொண்டமைந்ததான மருதடி வீதியில் 2 பரப்பு காணியுள் சுற்றுமதில், கிணறு, குளியலறை, வாகனத்தரிப்பிட வசதிகள் உள்ளிட்ட 4 அறைகள் கொண்ட விசாலமான வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. வைத்தியசாலை, அலுவலகம், தனியார் கல்வி நிறுவனம், களஞ்சியசாலை இவற்றுக்கும் பொருத்தமுடையதாகும்.
விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0775327636

## Sun Tv's Fame Vasundhra's



One Day Training in Latest Beauty & hair Treatment

and Launching of Latest Book written by her on Beauty

20th November 2011

at Booker Recreation, Colombo - 10 (Air Conditioned Auditorium)
Between 9.30a.m. - 5.30p.m.

For Details Please call the Local Organiser :
KINGS HOLDINGS INTERNATIONAL PVT. LTD., COLOMBO
146/F-04, Negombo Road, Wattala
0777843243 / 0777569516 / 0727843243


LUCKY DRAW PRIZE WORTH RS.2,500/- FOR 10 PEOPLES

THE VISIBLE DIFFERENCE - CHENNAI
+91 0448344079, 28343815

Locally & Internationally Recognized Certificate will be issues at the end of the Training

VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA | KINGS HOLDINGS | ASTA BERRY | VISIBLE DIFFERENCE | VIKRAM MEDIA

## மரண அறிவித்தல்



### கபிரியேல்பிள்ளை மரியாம்பிள்ளை

சில்லாலை வடக்கை பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட கபிரியேல்பிள்ளை மரியாம்பிள்ளை நேற்று முன்தினம் (11.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மாகிறேற்றம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரனிஸ்லாஸ் (ஜேர்மனி), யசிந்தா, அஞ்சலினா (றஜிதா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராசா, றொபீனா ஆகியோரின் மாமனாரும், ஜெனிவர், லக்சியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (14.11.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அஞ்சலீனா

(5756)(6-7-5)

## வேலை ஆள்கள் தேவை

தளபாட உற்பத்தி நிறுவனத்துக்கு தச்சுத் தொழிலாளி, உதவியாளர், உருக்கு அலுமாரி பொருத்துநர், உதவியாளர் தேவை.
T.P. 0779037203 (10360) (6-7-8)

## காணி விற்பனைக்கு

கொக்குவில், ஆடியபாதம் வீதியில் இரண்டு பரப்பு காணி உடன் விற்பனைக்கு.
(மருத்துவ பீடத்துக்கு அருகில்)
தொடர்பு:0771043575 (4-6-7)

## வீடு,காணி விற்பனைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில் இல.84,86 கல்லூரி வீதி, நீராவியடியில் 4 பரப்புக் காணியுடன் வீடும் எல்லா வசதியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778072985

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் - காரைநகர் வீதியில் 2½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0775561542

## கணினி மலிவு விற்பனை

P iv கணினி மற்றும் LCD Monitor மற்றும் அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 23,750/= விலையில் விற்பனைக்கு உண்டு. Free 4 GB Pen/Web cam

**SKY Computer**

162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road, யாழ். 222 4865
...7, 075 0698608
...Call, Internet பாவிக்கலாம்
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.

## மணமகன் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 இல் பிறந்த பாவக்கிரகம் 22, உயரம் 5'2'' திருவோண நட்சத்திரம் உள்ள லண்டனில் (Student) விசாவிலுள்ள பெண்ணுக்கு பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தேவை.
தொடர்பு: 0779012662 (C/5755) (6-7-8)

## CANADA, USA, UK, NEW ZEALAND, DENMARK

ஆகிய நாடுகளிற்கு உங்கள் குடும்பத்துடன் குடிபெயர வேண்டுமா?

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Germany, Italy, Canada, நாடுகளுக்கான Work permit

Lithuania ( Schengen Country) நாட்டிற்கான Resident Permit செய்து தரப்படும்.


கனடா, USA. UK. NEW ZEALAND Sehengem துருக்கி நாடுகளிற்கான Student visa ஒழுங்கு செய்து தரப்படும்.

அனைத்து நாடுகளிற்கும், அனைத்து வகையான விசாக்களுக்குமான பண வாய்புகள் வங்கிகளினூடாக செய்து தரப்படும்.

**EURO PROFILE**
16B, E.S. FERNANDO MAWATHA, WELLAWATTA.
நாதன் : 0773152327 நிஷ்தினா : 0778885903

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்துள்ள லிபிய மக்கள்...!



''நான் சர்வதேசத் தலைவன். அரபு ஆட்சியாளர்களின் முதல்வன் ஆபிரிக்காவின் அரசன். முஸ்லிம்களின் இமாம்!''

கழிவு நீர்க் குழாய்க்குள் பதுங்கி இருந்தபோது புரட்சிப் படைகளால் பிடிக்கப்பட்டு, ஒரு தெரு நாயைப் போல் இழுத்துச் செல்லப்பட்ட லிபிய முன்னாள் அதிபர் மும்மர் கடாபியின் சடலத்தைப் பார்த்தபோது, அவர் தன்னைப் பற்றி பிரகடனப்படுத்திக் கொண்ட இந்த வார்த்தைகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன!

உலகம் எத்தனையோ சர்வாதிகாரிகளைக் கண்டு இருக்கிறது. எனினும், கடாபி விசித்திரமானவர். அவருடைய தங்கக் காதல், வித்தியாசமான தோற்றம், பெண் மெய்க்காவலர்கள், விருந்தினர்களைச் சந்திக்க அவர் பயன்படுத்தும் கொட்டகைகள், சர்ச்சைக் கருத்துகள்... லிபியாவை 42 ஆண்டுகள் ஆட்டிப் படைத்த கடாபி இந்தத் தலைமுறைக்கு ஒரு கோமாளி சர்வாதிகாரியாகத் தெரியலாம். ஆனால், அவர் கொண்டாடப்பட்ட நாள்களும் உள்ளன.

1969, செப்.1 இல் ஒரு சின்ன ராணுவக் குழுவின் உதவியுடன் அரண்மனையை முற்றுகையிட்டு, ரத்தம் இல்லாப் புரட்சியின் மூலம், மன்னர் இத்ரியாஸின் கொடுமையான ஆட்சியில் இருந்து லிபியாவை விடுவித்தபோது, லிபிய மக்கள் தங்கள் மீட்பராக கடாபியைப் பார்த்தார்கள்.

உலகின் 2 சதவிகித எண்ணெய் வளத்தைப் பெற்று இருக்கும் லிபியாவில் அமெரிக்க, ஐரோப்பிய எண்ணெய் நிறுவனங்களின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, தேசிய எண்ணெய்க் கழகத்தின் கீழ் லிபிய எண்ணெய் வர்த்தகத்தைக் கொண்டுவந்தபோது, முதலாளித்துவ நாடுகள் சிம்ம சொப்பனமாக கடாஃபியைப் பார்த்தார்கள். பலஸ்தீன விடுதலைக் குழுக்களில் தொடங்கி, அயர்லாந்து விடுதலைக் குழுக்கள்வரை உலகின் பல ஆயுதக் குழுக்களுக்கும் வெளிப்படையாக அவர் ஆதரவு அளித்தபோது, போராளிகள் ஆபிரிக்காவின் சேகுவேராவாக கடாபியைப் பார்த்தார்கள்.

நாட்டில் வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதில் கடாபிக்கு என்று ஒரு பார்வை இருந்தது. கல்வியையும் சுகாதாரத்தையும் அரசின் முக்கிய கடமைகளாக அவர் பார்த்தார்.

ஆபிரிக்காவிலேயே கல்வி கற்றவர்கள் விகிதத்தில் முன்னணியில் இருக்கும் நாடாக லிபியாவை மாற்றினார். தன்னுடைய முதல் 15 ஆண்டு ஆட்சிக் காலத்துக்குள் லிபியாவில் ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் என்கிற மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கினார். ஒவ்வொரு லிபியனுக்கும் சொந்த வீடு என்ற அவருடைய கனவு, மண் குடிசைகளில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான லிபியர்களை சகல வசதிகளுடன் கூடிய வீடுகளில் அமர்த்தியது.

சின்ன தொழில்கள் தனியார் வசமும் பெரிய தொழில்கள் அரசின் வசமும் இருக்க வேண்டும் என்பது அவருடைய முக்கியமான பொருளாதார வியூகம். அது அவருக்கு வெற்றியைத் தந்தது என்றே சொல்ல வேண்டும். அதனால் தான், 2010 இல் கூட லிபியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.6 சதவிகித வளர்ச்சியை அவரால் உருவாக்க முடிந்தது!

ஆனால், கடைசிவரை ஜனநாயகம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரிந்து கொள்ளாததால், தூக்கி எறியப்பட்டு இருக்கிறார் கடாபி. தன் மீதான விமர்சனங்களுக்கு அல்ல; மாற்றுக் கருத்துகளுக்கே இடம் அளிக்காதவராக அவர் இருந்தார். லிபியாவில் பொது இடங்களில் அரசைப் பற்றிப் பேசினால், அது கடுங்காவல் தண்டனைக்கு உரிய குற்றமாகக் கருதப்பட்டது. எதிர்க்கருத்துகளை முன்வைத்தவர்கள் குரூரமாகக் கொல்லப்பட்டார்கள். வெளிநாடுகளிலும் கூட லிபிய அரசுக்கு எதிராகப் பேசுபவர்களைக் கொல்வதற்கு என்றே அவர் பிரத்தியேகக் கொலைக் குழுக்களை உரு வாக்கி இருந்தார்.

போராட்டங்கள் கொடூரமாக நசுக்கப்பட்டன. ஊடகங்கள் முழுக்க முழுக்க கடாபியின் கட்டுப்பாட்டில் இருந்தன. லிபியாவில் ஊடகச் சுதந்திரம் எப்படி இருந்தது என்பதற்கு, 'எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு 2010 இல் வெளியிட்ட பட்டியலில் லிபியா 160 ஆவது இடத்தில் இருந்தது ஒரு சான்று!

அரபு உலகத்தில் ஏற்பட்ட ஜனநாயகப் புயல் கடாபியின் சிம்மாசனத்தையும் நிர்மூலமாக்கி இருப்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால், லிபியப் புரட்சியின் பின்னணி, வரலாற்றில் மோசமான முன் உதாரணமாக மாறி இருக்கிறது.

லிபியாவின் எண்ணெய் வளத்தைக் குறிவைத்து அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் பின்னின்ற இந்தப் புரட்சியில், முதல் முறையாக எண்ணெய் நிறுவனங்கள் நேரடியாக முக்கிய பங்காற்றி இருக்கின்றன. பிரிட்டிஷ் நிறுவனமான 'வீடோல் இங்கிலாந்து அமைச்சர் ஆலன் டன்கன் மூலம் 5,000 கோடியை லிபிய ஆயுதக் குழுக்களுக்கு அளித்து, லிபிய எண்ணெய்ச் சந்தையைக் கூறு போட்டுக் கொண்டது ஓர் உதாரணம்.

ஜனநாயகத்துக்காகச் சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஏகாதிபத்தியத்திடம் சரண் அடைந்து இருக்கிறார்கள் லிபிய மக்கள். வேறு என்ன சொல்ல? *(நன்றி: இணையம்)*

# தமிழ் மக்கள் துயரை உலகுக்குப் புரிய வைத்த சட்டத்தரணி ரவிராஜ்

**சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் மறைந்து 10.11.2011 ஆம் திகதியுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவுற்றுள்ளன.**



சமகால தமிழர் அரசியல் வரலாற்றில், தமிழ் மக் கள் தம் துயரை உலகெல்லாம் துணிந்து பரவுதல் வகை செய்து சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல முடிந்த மொழியில் உரக்கக் கூறியதால் 44 வயதிலேயே தமிழருக்காகவே தன்னுயிரீந்த பெருமகனார் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் மறைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவுற்றுள்ளன. குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் அரசியல் சிந்தனைகளோடு செயற்பட்டகாலம் அது. பின்னாளில் என் அன்பு நண்பர் ரவிராஜ் சட்டத்தரணியாகி தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்ட ஆலோசகராய் இளைய சட்டத்தரணியாய் செயற்படக் கண்டேன். அதற்கு முன் அரச சட்டவாதியாய் பணியாற்றினார் இவர் தென்மராட்சியின் மைந்தர். சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவன்.

பலரும் போராளிகளாக விடுதலை இயக்கங்களோடு இணையும் காலம். நாம் மிதவாத அரசியற் கட்சிகளோடு. அன்று மிதவாத அரசியற் கட்சிகள் தமது எதிரிகளோ என்று இயக்கங்களெனப்பட்டவை சந்தேகங் கொண்ட காலமும் உண்டு. ரவிராஜ் தமிழர் விடுதலைக் கூட்டணியில் 1990 இல் இருந்த போது நான் தமிழ் காங்கிரஸில் 1980 இல் இருந்து செயற்பட்டேன். ரவிராஜ் வேறு பாசறையாயினும் அண்ணல் குமார் மீது பற்றும் பாசமும் கொண்டவர். சட்டத்துறையில் அவர் குமார் பொன்னம்பலத்தின் சிஷ்யன் அல்ல. ஆனால் அடிக்கடி அண்ணல் குமாரின் குயீன்ஸ் றோட் வீட்டில் சந்தித்துப் பேசுவோம். 1994 ஆம் ஆண்டு. நாடாளுமன்றத்தேர்தலில் கொழும்பில் குமார் பென்னம்பலம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருமதி சறோஜினி யோகேஸ்வரன், ரவிராஜ், முகுந்தன் உட்பட நானும் விநாயகமூர்த்தியும் உள்ளிட்ட பட்டியலில் தராசு சின்னத்தில் போட்டியிட்டோம். அன்று தேர்தல் அரசியலில் காலடி எடுத்து வைத்த ரவிராஜ் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாணப் பிரதி மேயராகவும் சிவபாலன், திருமதி யோகேஸ்வரன் ஆகியோர் சுடப்பட்ட போதும் துணிந்து பணியாற்றியவர் ரவிராஜ். பின்னர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இரு தடவைகள் வெற்றி பெற்றார். அவர் வளர்ந்து வந்த பாதையில் துணிவோடு வேகமாகத் தனது குறிக்கோள் நோக்கியும் தன் கடமையைச் செய்வதாகவும் இருந்தது.

அவரிடம் ஒரு குறிப்பிடத்தக்க வளம் இருந்தது. மும் மொழிகளிலும் தான் சொல்ல வேண்டியதைத் துணிவோடு சொல்லிவிடுவார்.

அவர் எம்மிடம் இருந்து பிரிக்கப்பட்ட, உயிர் பறித்து எடுக்கப்பட்ட நாளில் காலை 7 மணிக்கும் 8 மணிக்குமிடையில் தெரண தொலைக்காட்சியில் பலகேள்விகளுக்கும் பதிலளிக்கின்றார். பின்னர் வீடு திரும்பித் தன் சட்டத் தொழிலுக்காகத் தயாராகிப் புறப்பட்டபோது அவர் வீட்டுக்கு அண்மையிலேயே சராமாரியான சூடு. எங்கள் ரவிராஜ் இல்லாதொழிக்கப்பட்டார். எத்தனை குரூரம். அதே காலப் பகுதியில்தான் அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பணிகளுக்கப்பால் கொழும்பில் தமிழ் மக்கள் காணாமற்போதல் கடத்தல், கப்பம் என்பனவும் உக்கிரமடைந் திருந்தபோது மனோகணேசன் மக்கள் கண்காணிப்புக்குழுவை ஏற்படுத்தி வாசுதேவ நாணயக்கார, சிறிதுங்க ஜெயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ணவும் இணைந்து வெள்ளை வான் கடத்தலுக்கு எதிராக நடத்திய போராட்டங்களிலும் இணைந்து கொண்டார். ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டார். பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை விட தலைநகரிலும் தமிழர் துயரை உரக்க உரைத்தவர் ரவிராஜ்.

தெரண தொலைக்காட்சியில் கூட அவர் கூறினார். ''சிங்கள மக்களோ தமிழ் மக்களோ இராணுவ நடவடிக்கைகளை, யுத்தத்தை, இந்த நாட்டில் இரத்தக் களரி ஏற்படுவதை விரும்பவில்லை. வடக்கு கிழக்கு தமிழர்கள் பண்டைக்காலம் முதல் வாழ்ந்த இடம். இது ஒன்றாகவே, ஓரலகாகவே இருக்க வேண்டும். இனப் பிரச்சினைக் கான தீர்வு காணப்படுதலில் இதுவே அடிப்படையாகும்'' என்றார்.

எனவே, பிரிவினையை விரும்பாத, சக வாழ்வை வலியுறுத்திய ரவிராஜ் ஏன் சுடப்பட்டார்? இதன் தாற்பரியம் எதை உணர்த்துகின்றது?

அண்ணல் குமார் பொன்னம்பலமும் தம்பி ரவிராஜும் தலைநகரில் காலை வேளையில் பட்டப் பகல் வெளிச்சத்தில் சுடப்பட்டார்கள் என்றால் தமிழர் தம் துயரை எமது அபிலாசைகளின் நியாயத் தன்மையை உலகறிய சங்காய் முழங்கிய, படித்த, மும்மொழியிலும் சிங்கள சகோதரர்கள் புரிந்துகொள்ள வைத்த ஜனநாயகவாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் மூலம் படித்த சிங்கள சகோதரர்களும் புரியும் வகையில் எடுத்துச்சொல்லக்கூடிய தமிழ்த் தலைமைகள் இல்லாமற் செயற்பட வேண்டும் என்கின்ற நிலைமை அன்று எண்ணக் கருவாக உருவாகிற்று என்று எண்ணுவதில் ஏதும் தவறு இருக்க முடியாது எனக் கொள்ளலாம்.

குமாரண்ணலின் பேச்சுக்களும் எழுத்துக்களும் உள்ளக் குமுறல் போல் எரிமலையாகவே இருந்தது. ரவியின் கருத்து யுத்தகாலத்தின் உயர்பாதுகாப்பு வலய விஸ்தரிப்பு, பொருளாதாரத்தடை என்பவற்றால் தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகளை சிங்கள சகோதரர்களும் மேற்குலகும் புரிந்துகொள்ளும் வகையில் தன்மையாக எடுத்துரைத்தார். தமிழர் துயரை நல்ல முறையில் உலகறியச் செய்ததுதான் ரவி எம்மிடம் இருந்து பறிக்கப்பட ஒரே காரணமாயிற்று.

தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் நிம்மதியாக சம உரிமையோடு வாழும் காலம் அமரர் சட்டத்தரணி ரவிராஜின் ஆத்மா சாந்தியடையும். நாற்பத்திநான்கு வயதில் பதினெட்டு வயதே ஆகாத இரு குழந்தைகள் முதுமாணிப் பட்டதாரி ஆசிரியையான தனது பாசமிகு மனைவி ஆகியோரை விட்டுவிட்டு அன்று தான் நேசித்த தமிழினத்துக்காகத் தன்னுயிரைத்துச்சமென மதித்து செயற்பட்ட ரவிராஜை சமகால தமிழர் அரசியல் வரலாறு பதித்துக்கொள்ளும்.

-கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வலய உதைபந்தாட்டம் தேவரையாளி இந்து வென்றது

யாழ்ப்பாணம்,நவ.13

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16,18 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் வெள்ளிக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானம், அல்வாய் மனோகர விளையாட்டுக் கழக மைதானம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

இதில் 16,18 வயது இரு பிரிவுகளிலும் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

அல்வாய் மனோகர விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இமையணன் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கியது.

18 வயதுப் பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வர கல்லூரி அணி மோதிக் கொண்டன.

இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அணி மோதிக் கொண்டது.

இதில் ஆட்டம் தொடங்கியது முதல் முடிவடையும் வரை இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# யாழ். மத்தி., சென்.பற்றிக்ஸ் இறுதியாட்டத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் 2:2 என்ற கோல்களைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளும் சமநிலையில் முடிவுற்றன.

மேலும் ஒரு உதைகள் இரண்டு அணிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி தனக்கு வழங்கப்பட்ட தண்டனை உதையை கோலாக்கத் தவறியது.

யாழ். மத்திய கல்லூரி தனக்கு வழங்கப்பட்ட தண்டனை உதையை கோலாக்கியது.

இதனால் ஆட்ட முடிவில் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# ஏழாலை ஸ்ரீ முருகன் சம்பியன்

வலி. வடக்கு, நவ.13

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் இணுவில் மத்தியகல்லூரி சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் இணுவில் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டதுடன் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்துக்கு மைதானத்தில் ரசிகர்களின் அதிகரித்த ஆதரவும் காணப்பட்டது.

இந்த நிலையில் முதலாவது கோலை இணுவில் மத்தியகல்லூரி பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து ஆட்டம் சூடுபிடித்தது. இதன்போது மீண்டும் ஒரு கோலை இணுவில் மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது.

ஸ்ரீமுருகன் வித்தியாலயம் தொடர்ந்து தனது அபாரமான ஆட்டத்தின்மூலம் தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்ட நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடியது. இணுவில் மத்தியகல்லூரி மீண்டும் இரண்டு கோல்களைப் பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் இணுவில் மத்திய கல்லூரி 04:01 என்ற கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தை வென்று சம்பியனானது.

(த-86)

# இறுதியாட்டம் செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,நவ.13

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# தீவகக்கோட்டத்தில் வெற்றியீட்டிய அணிகள்



யாழ்ப்பாணம்,நவ.13

தீவக கல்வி வலய கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

காரைநகர் கோட்ட மட்ட போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

16,18 வயதுப் பிரிவில் முதலாமிடம் டாக்டர் தியாகராஜா ம.வி., 16,18 வயது பிரிவில் இரண்டாமிடம் யாழ்ரன் கல்லூரி, 16,18 வயது பிரிவில் மூன்றாமிடம் காரைநகர் சுந்தர மூர்த்தி நாரயண வித்தியாலயம்.

வேலணை கோட்டப் போட்டியில் வெற்றியீட்டி அணிகளின் விவரம் வருமாறு:

18 வயதுப் பிரிவு.புங்குடுதீவு மகா வித்தியாலயம் முதலாமிடம், புங்குடுதீவு கணேச வித்தியாலயம் இரண்டாமிடம், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் மூன்றாமிடம். (ம-23)

டினேசனின் பந்து வீச்சும், கார்த்தீபனின் துடுப்பாட்டமும் கை கொடுக்க

# கொக்குவில் இந்துவை வென்றது யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம்,நவ.10

டினேசனின் துல்லியமான பந்து வீச்சும் கார்த்தீபனின் சிறப்பான துடுப்பாட்டமும் கை கொடுக்க கொக்குவில் இந்துக் கல்லூரியை முதல் இன்னிங்ஸில் வெற்றி கொண்டது யாழ் மத்திய கல்லூரி.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயது பிரிவினருக்கான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றுக்கான ஆட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 66.5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கார்த்தீபன் 55



ஓட்டங்களையும், டினேசன் 22 ஓட்டங்களையும், கௌதமன், 19 ஓட்டங்களையும், செந்தூரன் ஆட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பாக கபிலன் 13 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், பிரியங்கன் 10 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சாந்தோஸ் 7 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக்களையும், றொசாந், 7 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி அணி தனது ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

கொக்குவில் இந்துக்கல்லூரி இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடியது.

அதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் டிலக்சவரன் 60 ஓட்டங்களையும், கபிலன், 13 ஓட்டங்களையும் றொசாந், 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக டினேசன், 11 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும், செந்தூரன் 6 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் விதுஷன் 7 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டி விதிகளுக்கு அமைய முதலாவது இனிங்ஸில் யாழ். மத்திய கல்லூரி கூடிய ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. (எ-23)

# யாழ்.லீக்கின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தப் படும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை திங்கட்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 4 மணி

ஊரெழுறோயல் விளையாட்டுக் கழகம் எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் மரூண் அணி.

பிற்பகல் 4.55 மணி

பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனிஸ் வெள்ளை அணி. (த-23)

# இறுதியாட்டத்துக்கு தெரிவான அணிகள்

யாழ்ப்பாணம்,நவ.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகர விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற அரை இறுதியாட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோகர விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அல்வாய் மனோகர விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற மற்றைய அரை இறுதி யாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டில்ஷான்

# மீண்டும் பலமாக எழுவோம்

இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையில் நேற்று முன்தினம் நடந்த முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணியை இலகுவாக வெற்றி கொண்டது.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணியின் தோல்வி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அணித் தலைவர் டில்ஷான், நாங்கள் சிறப்பான முறையில் ஆரம்பிக்கவில்லை. எப்படி இந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவதென்றே தெரியவில்லை. சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடாமைதான் எமது தோல்விக்கு முக்கிய காரணம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கின்றேன். நாங்கள் மீண்டும் பலமாக மீண்டு வருவோம் - என்றார்.

வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக் கருத்துத் தெரிவிக்கையில், இது எங்களது அணியின் முழு முயற்சி. எங்களது வீரர்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டிருக்கிறார்கள். வேகப் பந்து வீச்சாளர்கள் மிகச் சிறந்த ஆரம்பத்தை அமைத்து தந்தார்கள். அப்ரிடி மற்றும் ஹபீஸ் உட்பட பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக தங்களது பங்கை சரியாகச் செய்தனர். உரிய நேரத்தில் இலக்குகளை வீழ்த்தியமையால்தான் இலங்கை அணிக்கு உரிய முறையில் நெருக்கடி கொடுக்க முடிந்தது - என்றார்.

ஆட்டநாயகன் விருது வென்ற அப்ரிடி, மீண்டும் அணிக்கு திரும்பியிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. நாங்கள் தற்போது மிகச் சிறந்த கூட்டணியாகவுள்ளோம். மிஷ்பா மிகச் சிறப்பாக அணியை வழிநடத்துகின்றார் - என்றார்.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் நாளையதினம் டுபாயில் நடைபெறவுள்ளது. (15)

# அசத்தும் இளம் சிங்கங்கள்

உமேஷ் யாதவ், வருண் ஆரோன் உள்ளிட்ட இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் அசத்துகின்றனர். இவர்களது எழுச்சி, இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கு கைகொடுக்கும், என்று இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் அனுபவ வீரர் சகீர்கான். தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். வலது கணுக்கால் காயத்துக்கு முதலில் சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அடுத்து தொடைப் பகுதியில் ஏற்பட்ட தசைப் பிடிப்பு பெரும் பிரச்சினையாக அமைந்தது. தற்போது குணமடைந்து வரும் இவர், மும்பை அணி சார்பில் ரஞ்சி கிண்ணத் தொடரில் விளையாடி உடல் தகுதியை நிரூபிக்க காத்திருக்கிறார். அடுத்து இடம்பெறவுள்ள ஆஸ்திரேலிய தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளார். இவர் இல்லாத நிலையிலும் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சு துறை சிறப்பாகவே உள்ளது.

இது குறித்து சகீர்கான் கூறியதாவது:

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் உமேஷ் யாதவின் சிறப்பான பந்துவீச்சை பார்த்து பிரம் மித்து போனேன். அசுர வேகத்தில் பந்துவீசி அசத்தினார். இதே போல வருண் ஆரோனும் நம்பிக்கை தருகிறார். இவர்களை போன்ற இளம் வேகப்பந்துவீச்சாளர்களின் வருகை, இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கு மிகவும் நல்லது.

காயத்தில் இருந்து விரைவாக குணமடைந்து வருகிறேன். தேசிய கிரிக்கெட் அக்டமியை சேர்ந்த உடற் கூற்று நிபுணரின் ஆலோசனைப்படி தொடர்ந்து பந்து வீச்சு பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். கடந்த இரண்டு வார பயிற்சியில் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. நூறு சதவீத உடல் தகுதி பெற்ற பின்னர்தான் இந்திய அணியில் இடம் பெறுவது பற்றி சிந்திக்க முடியும்.

அடுத்து இடம்பெறவுள்ள ஆஸ்திரேலிய தொடரில் வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இதுவரை ஆஸ்திரேலிய மண்ணில் முழுத்தொடரில் விளையாடியதில்லை. இந்தக் குறை, இந்தமுறை நிவர்த்தி செய்யப்படும் என்று நினைக்கிறேன்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் களமிறங்கும் போதெல்லாம் சதம் அடிக்க வேண்டும் என்று ரசிகர்கள் விரும்புகின்றனர். விரைவில் சதத்தில் சதம் காண்பார். இவர், சர்வதேச அளவில் தனது 100 ஆவது சதத்தை எப்போது அடிப்பார் என்பது மட்டும் 'மில்லியன் டொலர்' கேள்வியாக உள்ளது - என்றார். (15)

# இவருடன் முரண்பட்டது வருத்தமாக இருக்கிறது



சச்சின் போன்ற இந்தியாவின் மூத்த கிரிக்கெட் வீரர்களுடன் சிறந்த முறையில் தொடர்பைப் பேணாது அவர்களுடன் முரண்பட்டிருந்தமைக்கு வருந்துவதாக இந்திய அணியின் முன்னாள் சர்சைக்குரிய பயிற்றுவிப்பாளர் கிரேக் சப்பல் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதியுள்ள சுயசரிதை புத்தகத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2005-2007 வரையிலான காலப்பகுதியில் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக சப்பல் கடமையாற்றியிருந்தார்.

இந்தக் காலப்பகுதியில் சச்சின் போன்ற மூத்தவீரர்களுடன் நல்ல நட்புறவு ரீதியில் சிறப்பாக பழகவில்லை எனவும், சச்சினை எப்போதும் நான்காம் நிலை துடுப்பாட்ட வீரராக களமிறக்கியது தவறான நடத்தை எனவும் இப்போது மன்னிப்பு கோரியுள்ளார்.

ஒரு தடவை தென்னாபிரிக்காவில் வைத்து சச்சினிடமும், சேவாக்கிடம் இன்னமும் கூடுதலாக எதிர்பார்ப்பதாக கூறினேன். ஆனால் அவர்களது முகத்தை பார்த்து சொல்லியிருக்கலாம். அவர்கள் அவமரியாதைக்கு உள்ளாவதாக உணர்ந்துள்ளார்கள். ஒரு போதும் யாரும் அவர்களை இப்படி பணித்ததில்லை என்று ஓய்வறையில் டிராவிட் இது பற்றி என்னிடம் முறையிட்டிருந்தார் என்றார்.

மேலும் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் பி.சி.சி.ஐயினால் தனக்கான கொடுப்பனவுகள் சில சந்தர்ப்பங்களில் தாமதிக்கப்பட்டிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (15)

## அஸ்வினுக்குத் திருமணம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீரராக திகழ்பவர் ஆர்.அஸ்வின். சென்னையைச் சேர்ந்த அவர் தனது அறிமுக டெஸ்டிலேயே சிறப்பாக பந்து வீசினார். இந்த நிலையில் அஸ்வின் திருமணம் செய்ய உள் ளார். 25 வயதான அவர் தனது பள்ளி தோழி பிரீத்தியை மணக்கிறார்.

இந்தத் திருமணம் கோடம்பாக்கத்தில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் இன்று நடக்கிறது. உறவினர்கள், குடும்ப நண்பர்கள் ஆகியோருக்கு மட்டுமே திருமண அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் திருமணத்திற்கு மறு நாள் (14 ஆம் திகதி) இந்தியா- மேற்கிந்தியத்தீவுகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் கொல்கத்தாவில் நாளை தொடங்குகின்றது. திருமணம் முடிந்தவுடன் 2 ஆவது டெஸ்டில் விளையாட அஸ்வின் கொல்கத்தா சென்று விடுவார். (15)

## உலகக்கிண்ண கபடி அரையிறுதியில் இந்தியா

இரண்டாவது உலகக் கிண்ண கபடி (சர்க்கிள் ஸ்டைல்) போட்டி பஞ்சாபில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் இந்திய அணி கனடாவை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 51-24 என்ற புள்ளி கணக்கில் கனடாவை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 45-32 என்ற புள்ளிக்கணக்கில் ஆஸ்திரேலியாவை தோற்கடித்தது. (15)

# 800 ஆவது வெற்றி



பெடரர்

பிரான்ஸின் பரிஸ் நகரில் நடந்து வரும் ரெனிஸ் போட்டியின் அரையிறுதி சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினார்.

இவர் ஆர்ஜென்டினாவின் ஜூவன்மொனாக்கோவை 6-3, 7-5 என்ற நேர்செட்டில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இந்த ஆட்டம் வெறும் 90 நிமிடம் மட்டுமே நடந்தது. பெடரருக்கு இது 800 ஆவது வெற்றியாகும். இந்தப் பருவத்தில் மட்டும் அவர் 57 வெற்றிகள் பெற்றுள்ளார்.

800 ஆட்டங்களில் வெற்றி பெறும் 7 ஆவது வீரர் பெடரர் ஆவார். (15)

## தண்டனையை எதிர்க்கிறார் பட்

'ஸ்பொட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்கள் 3 பேருக்கு லண்டன் நீதிமன்றில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சல்மான்பட்டுக்கு 30 மாதமும், முகமது ஆசிப்புக்கு 12 மாதமும், முகமது அமீருக்கு 6 மாதமும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக சல்மான்பட் ஏற்கனவே அறிவித்து இருந்தார். அதன்படி அவர் மேன்முறையீடு செய்துள்ளார். கடந்த சில தினங்களாக ஆலோசனை செய்யப்பட்டு இந்த மேன்முறையீடு செய்யப்பட்டதாக பாகிஸ்தான் இணையதளம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் மேன்முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் எதுவும் தெரியவில்லை. அந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என்று தெரிகிறது. (15)



சல்மான் ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாழில் முதியோர் இல்லம்"

யாழ். நகரில் திருநெல்வேலியில் அமைந்திருக்கும் சென்றல் நர்ஸிங்ஹோம் (திருநெல்வேலி-0212222263) உடன் இணைந்து யாழ். நகரப்பகுதியில் மருத்துவ, சிறப்புப் பராமரிப்பாளரின் சேவையுடன் குறைந்த செலவில் முதியோர், நோயாளர்கள் பராமரிக்கப்படுகின்றனர்.

சேவைக்கும் தொடர்புகளுக்கும்-
0752555689, 0718234691

## விற்பனைக்கு

3 தட்டு பழுதாத மற்றும் 2HP கொம்பிறசர் செற், 4HP கொம்பிறசர், தாவரியங்கி கிறீம் மெசின் மற்றும் யூஸ் பொதி செய்யும் இயந்திரம் என்பனவை விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0788307100, 0776071675

## தவறிவிட்டது

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த இரத்தினம் தேசிகா ஆகிய எனது சான்றிதழுடன் கூடிய ஆவணங்கள் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தனியார் பஸ்ஸில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அரசடி தொலைத் தொடர்பகம், சங்கத்தானை, சாவகச்சேரி எனும் முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

TP: 0774805107

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09.05.1962 | மறைவு 13.10.2011

அமரர்
### தர்மலிங்கம் செல்லத்துரை

13.10.2011 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்தி திருப்பலி இன்று [13.11.2011] ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும். தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (தகவல்- ரேகன்)

வசந்தா (மனைவி),
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் ஆலோசகர்
Rtn. வாமதேவன் அவர்களின் தந்தை
### இராசா. தம்பிஜயா
அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

றொட்டரக் கழகம், சுன்னாகம்.

தலைவர் மற்றும்
கழக அங்கத்தவர்கள்.

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் என்பனவற்றுக்கு ஏற்றவகையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776138978

## வாகனம் வாடகைக்கு


10 அடி நீளமுள்ள கலர் வாகனம் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0788307100

## தரம் 5 மாணவர்களே! வாங்கிவிட்டீர்களா?
### உங்கள் வெற்றிக்கான வழிகாட்டி




அருகில் உள்ள பத்திரிகை முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 071 6850005, 071 4273035.

## Acme Homes



தென்னிலங்கையில் வீடு நிர்மாணத் துறையில் புதிய புரட்சி படைத்த "Acme Homes" புதிய Europe & Middle East Country House designs உடன் நவீன தொழில்நுட்பத்துடன் (Modern) வாஸ்து சாஸ்திரத்து டன் கட்டித்தர உத்தரவாதத்துடன் உங்கள் அருகில்

"யாழினது அடுத்த கட்ட பரிமானத்துக்கு "Acme Homes"
- Homes & Building Construction - Arranging Bank loans
- Charted Architectural Drawing - Stage Payments
- கொழும்பில் இடம் எடுத்து வீடு கட்டிக்கொடுக்கப்படும் - Surveying plans

*Jaffna Branch*
Director: S.T.Subakaran
நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P:0779943113, 0723003000
Email: tkaran 023 @ gmail.Com.

*Colombo Branch*
Director: Indika Muthunayaka
No.551/7/2 Kandy Road, Ranmutugala,
Kadawatha, T.P:0112969444
Email: acmehomes @ sltnet.lk (Reg . No.WR 8949)

(10415)(1,6,7)

## ENGLISH, SINHALA & COMPUTER CLASSES

IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்
வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

சிங்கள வகுப்புக்கள்
பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

கணனி வகுப்புக்கள்
MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## காணி விற்பனைக்கும், கடை வாடகைக்கும்

வைமன் வீதி முதலாவது ஒழுங்கையில் 2 பரப்புக்காணி [பாதையுடன்] விற்பனைக்கும். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இரண்டு கடைகள் [மேலும், கீழும்] வாடகைக்குண்டு.
தொடர்பு- தொ.பே-0778449687

## ஆள் தேவை

பொருள்களைக் கொண்டு சென்று விற்கும் ஆள் உடனடியாகத் தேவை. மாதாந்த வேதனம் 18000 ரூபாவும் மூன்று நேர உணவும் தங்குமிட வசதியும் கொடுக்கப்படும்.
தொடர்பு:கொற்றாவத்தை,நெல்லியடி,
0777167110
0770242370.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவானந்தன்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவானந்தன் நேற்று(12.11.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-விஜயரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி சிவலோகபூபதியின் அன்புக் கணவரும் சிவாநந்தினி (பிரதேச சபை பண்டத்தரிப்பு), வடிவேற்கரசன் (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயலட்சுமி, இராஜேஸ்வரி காலஞ்சென்ற சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான புண்ணியலிங்கம், தர்மலிங்கம், நமோலிங்கம் மற்றும் நவலோகபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## REPAIRING

Contact : 021-222 4459, 0774192275

சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

NORTH LEAD
Computer Sales and Service Center
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## காணி விற்பனைக்கு

வெணி வைத்தியசாலைக்கு பின்புறமாக கொடிகாமம் வீதியிலிருந்து 300m தூரத்தில் 14(பதினான்கு) பரப்பு தென்னங்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772720024, 0213210606

## காணி விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி நீலாம்பரி உணவகத்துக்கு முன் ஒழுங்கையில் $1\frac{3}{4}$ நிலப்பரப்பள்ள காணி தண்ணீர்த் தாங்கியும், [illegible]
[illegible]
தொடர்புகளுக்கு: 0774927359
021-222-5649

## வடக்கு கிழக்கு புதிய அலுவலக கிளைகளில் வேலைவாய்ப்பு

LMRB

நீங்கள் 18 வயதிலும் கூடிய, தொடர்பாடல் திறன் மிக்க நபரா?
ஆம் எனின் எம்முடன் இணையுங்கள்...

- ஒப்பந்த அடிப்படையில் பயிலுனர் பயிற்சி பெற்ற ஆய்வாளர்கள்
- மேற்பார்வை அதிகாரிகள் (களப்பணியில் அனுபவமும், சிங்களம், ஆங்கிலம் பேசும் திறன் விசேட தகைமையாக கொள்ளப்படும்)

மாதாந்தம் அதிக வருமானம்
- கேள்வி கொத்து அடிப்படையில், போக்குவரத்து கொடுப்பனவு, உற்சாகக் கொடுப்பனவு உட்பட கொடுப்பனவுகள்.
- நேர்முகத் தேர்வுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய இடங்களிலும் வெற்றிடங்கள் உள்ளன.

கீழுள்ள முகவரிக்கு உடனே விண்ணப்பியுங்கள்.

நிறுவனத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து அதிகாரிகளும் கிராம சேவையாளர் சான்றிதழை நிறுவனத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

கள முகாமையாளர்
இல. 24,
ஸ்ரீ சித்தார்த்த பெசேஜ்
கிருலப்பனை
கொழும்பு - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

மஹி: ஆமாம்!

யாழ்ப்பாணத் தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டார்களா? அவர்களுடைய வாழ்க்கை நிலைமை நன்றாக இருக்கிறதா? அல்லது மோசமாக இருக்கிறதா? நாங்கள் அவர்களுக்கு உதவலாமா? என்றெல்லாம் அவர்கள் (தமிழ்நாட்டு அரசியல்வாதிகள்) என்னிடம் கேட்கிறார்கள். அவர்கள் ஏன் தமது மீனவர்களுக்கு உதவக்கூடாது? அவர்களே அவர்களுடைய உரிமைகளைப் பிடுங்கிக் கொண்டார்கள். இது ஏமாற்றம் தரும் விடயம்தான். இதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்.டி: ஆக...., இலங்கைத் தமிழ் மீனவர்கள்தான் அங்கு மீன்பிடிக்க வேண்டும் என்கிறீர்களா?

மஹி: இல்லை. கொடுத்து வாங்கும் கொள்கையை (give and take policy) கடைப்பிடியுங்கள் என்றுதான் சொல்கிறோம். அதைப் பற்றி நாங்கள் கலந்துரையாட வேண்டும். அத்தோடு இந்த விடயத்தில், எமது தமிழ் மீனவர்களோடு பேசுவதே சிறந்த விடயம் என்று நான் சொல்வேன். இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் மீனவர்களைத் தெரிவு செய்து அவர்களைப் பேச அனுமதித்தால் அவர்களே ஒரு தீர்வைக் காண முடியும். இந்தப் பிரச்சினையில் அரசுகள் நுழைவதை நான் விரும்பவில்லை.

என்.டி: நல்லிணக்க முயற்சிகள் எப்படி இருக்கின்றன. எல்லாமே மந்த கதியில் நகர்வதாகத் தெரிகிறதே?

மஹி: இல்லை, எல்லாமே மிக வேகமாக நகர்கின்றன. கடந்த இரண்டு வருட காலங்களில் 95 சதவீதமான மக்களை நாங்கள் மீளக்குடியமர்த்தி இருக்கிறோம்.

என்.டி: நான் அரசியல் நல்லிணக்க முயற்சி பற்றிப் பேசுகிறேன்...

மஹி: அரசியல் ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். கடந்த ஒன்றரை மாதங்களாக அவர்கள் சரியான 'பிஸி'. அமெரிக்கா, பிரிட்டன் என்று சுற்றித் திரிந்து தங்களுக்காகப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இது ஓர் உள்ளக விவகாரம். அவர்கள் எதற்காக இப்படிப் பறந்து பறந்து பிரசாரம் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இறுதியில் இது அரசு சார்ந்த ஒரு விவகாரமாக மட்டுமே இருக்கும். எப்படியும் அவர்கள் எங்களுடன் தான் கலந்துரையாடியாக வேண்டும். ஏன் சொல்கிறேன் என்றால் பிரச்சினையைத் தீர்க்க குழு ஒன்றை நாங்கள் நியமித்திருந்த போதும் அவர்கள் இன்னும் அதற்கான தமது பிரதிநிதிகளை நியமிக்கவில்லை. ஆனால் ஊர் சுற்றுகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் 23 கட்சிகள் இருக்கின்றன. அதனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நாம் நியமிக்க வேண்டியிருக்கிறது. அதுதான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மிகச் சிறந்த இடம். அரசும் எதிர்க்கட்சிகளும் ஒரேயிடத்தில் அமர்ந்து பேச விட்டால் அவர்கள் எனக்குத் தீர்வு ஒன்றைத் தருவார்கள். பின்னர் அதனை நிச்சயம் நடைமுறைப்படுத்தலாம்.

என்.டி: 2009இல் போர் முடிந்ததில் இருந்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பலமாக எழுப்பப்படுகின்றனவே...

மஹி: அதற்கான எதிர்வினை என்ன என்று பார்த்திருக்கிறீர்களா?

என்.டி: ஆம்! பார்த்திருக்கிறேன். ஆனால், படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையை எப்பொழுது வேண்டுமானாலும் உங்களிடம் கையளிக்கும் என்ற நிலை இருக்கிறது. அந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவீர்களா?

மஹி: அடுத்த 19ஆம் திகதி அறிக்கை கையளிக்கப்படும். நான் அதனைப் பெற்று முதலில் படிக்க வேண்டும். அதன் பின்பே எல்லாம். அது ஒன்றும் பொதுமக்கள் ஆவணம் அல்ல. அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டுமானால் நான் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னரே அது பகிரங்க ஆவணமாகும்.

என்.டி: அந்த அறிக்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பற்றி ஏதாவது சொல்லப்படும் என்று பயப்படுகிறீர்களா?

மஹி: அப்படி அவர்கள் குறிப்பிட்டால் அதனடிப்படையில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். யாரையும் நான் பாதுகாக்கப் போவதில்லை. அந்தத் தேவையும் எனக்கில்லை.

என்.டி: அப்ப அது ஒரு மிக நீண்ட செயற்பாடாகவே இருக்கும் என்கிறீர்கள்..?

மஹி: ஆமாம்! போரின் கடைசி 10 நாள்கள் பற்றியே எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் கடந்த 30 வருடங்கள் பற்றி யாரும் பேசுவதில்லை. எத்தனை மக்கள் கொல்லப்பட்டார்கள்? எத்தனை தமிழ்த் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்? உங்கள் பிரதமர்கூடக் கொல்லப்பட்டார். எனவே இந்த விடயங்கள் எல்லாம் வெறுமனே.... உங்களுக்குப் புரியும்தானே.

## தமிழீழ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு உரையாற்றிய உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் தெரிவித்ததாவது:-

வியட்நாமில் மக்கள் அழிக்கப்பட்ட நேரத்தில் இந்தியாவில் புதுக்கவிதை எழுதியவர்களும் இலக்கியம் படைத்தவர்களும் உள்ளார்கள். கருத்து வெளியிட்டவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் ஈழத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொலையுண்டு விழுந்த நேரத்தில், உலகத்தில் யார் ஈழத்தமிழ் மக்களுக்காக எழுதினார்கள்?

எத்தனையோ பெரிய கொடுமைகள் ஈழத்தில் நிகழ்த்தப்பட்டன. யார் அந்த மக்களுக்காகக் கைகொடுத்தார்கள்? பெண் உறுப்பில் வெடிகுண்டு வைத்து மட்டக்களப்பில் கோணேஸ்வரி சிதைக்கப்பட்டாள். புங்குடுதீவு கண்ணகி கோவிலில் வைத்து சாரதாம்பாள் வெறியர்களால் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்டாள். அவர்களின் வேதனைகளை இந்த உலகம் கணக்கில் எடுக்கவில்லை.

இவ்வாறே போரின் இறுதியில் இசைப்பிரியா. அவளைச் சிறைப்படுத்திய இனவெறியர்கள் போர்க்கைதிகளை நடத்தும் உலக விதிப்படியா நடத்தினார்கள்? இல்லையே!

இன்று அவற்றையெல்லாம் எழுத்தில், கவிதையில், திரைப்படத்தில், சிற்பத்தில் வடிக்கும் காலம் வந்துள்ளது. ஓவியர் சந்தாணம் முள்ளிவாய்க்கால் படுகொலையினை வைத்து வரைந்த படத்தினை மாதிரியாகக் கொண்டு முருகன் என்கின்ற சிற்பி தஞ்சையில் சிலை வடிக்கிறார். அந்த நினைவுச்சின்னம் முள்ளிவாய்க்கால் கொடுமையினை இந்த உலகுக்கு என்றும் பறை சாற்றி நிற்கும்.

அப்படிப்பட்ட கலைஞனே இன்று இந்த மண்ணுக்குத் தேவை தமிழீழத்திற்காக தமிழ்நாட்டில் பல படைப்பாளிகள் படைப்புக்களை எழுதிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு எழுதிய எழுத்தாளர்களின் அளவு, ரஷ்ய விடுதலைப்போரின்போது எழுதிய எழுத்தாளர்களின் அளவு, தமிழினத்தின் விடுதலைக்காக நடந்த போராட்டத்திற்காக எழுதியவர்களை எண்ணித்தான் பார்க்கவேண்டும்.

பல திரைப்படங்கள் இன்று உருவாகிக்கொண்டு இருக்கின்றன. இன்னும் இன்னும் கூடுதலான திரைப்பட கலைஞர்கள் தமிழினத்திற்கு கைகொடுக்கவேண்டும். விடுதலைக்காக கலைஞர்கள் இயங்கவேண்டும் எழுதவேண்டும், என்ற கருத்தினை படைப்பாளிகள் மத்தியில் முன்வைக்கின்றேன்.

உலகில் வாழ்கின்ற அனைத்து நாடுகளிலும் அத்தனை அரசுகளின் கீழ் இயங்குகின்ற நாடுகளிலும் அறவழியில் போராடுவதற்கான உரிமை மக்களுக்கு இருக்கின்றது. ஆனால் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை எதிர்த்து வாய் திறந்து பேசமுடியாத நாடாக உலகில் இலங்கை மட்டுமே காணப்படுகின்றது. தமிழ் மக்கள் அப்படிப்பட்ட கொடுமையான சூழலில் வாழ்கிறார்கள்.

தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட இயக்கம் தமிழர் கூட்டமைப்பு. அவர்களால் எந்த அறப் போராட்டத்தையும் முன்னெடுக்க முடியவில்லை. அவர்களால் அங்கு பேசமுடியாது. பேசினால் நாளை அவர்களுக்கு உயிர் இருக்காது. ம்.. என்றால் சிறைவாசம்; ஏன்... என்றால் வனவாசம் என்ற நிலை இன்று தமிழீழத்தில் இருக்கிறது. இதை கேட்பதற்கு யாருமே இல்லை.

முள்ளிவாய்க்கால் முடிந்து மெல்ல மெல்ல செய்திகள் மறைந்து அமுக்கப்பட்டு எல்லாம் தீர்ந்து விட்டதென்று யாரும் நினைக்காதீர்கள். நாங்கள் நெருப்பின் நடுவில் இருக்கிறோம். ஒன்றை மட்டும் உறுதியாக சொல்ல விரும்புகின்றேன். தமிழீழ விடுதலைப் போர் மீண்டும் வெடிக்கும் - என்றார் காசிஆனந்தன். (உ)

## கொமன்வெல்த்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கோல்ட் கோஸ்ட் நகரம்ஆகியன போட்டியிட்டன.

71 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொண்டன. இதன் முடிவுகள் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை வெளியிடப்பட்டது.இதில் ஆஸ்திரேலியாவுக்கு 43 வாக்குகளும் இலங்கைக்கு 27 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த முடிவுகள் தொடர்பாக இலங்கையின் மத்திய வங்கி ஆளுநரும் 'அம்பாந்தோட்டை 2018' பிரசாரக் குழுவின் தலைவருமான அஜித் நிவாட் கப்ரால் தெரிவிக்கையில்; இந்த வாய்ப்பை இழந்தமையானது ஏமாற்றமளிக்கின்றது. எனினும் அம்பாந்தோட்டையை பொருளாதார கேந்திர மையமாக மாற்றியமைக்கும் செயற்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார்.

ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் அமைந்துள்ள குயின்ஸ்லாந்து மாநில பிரதமர் அன்னா பிளீக் இந்த முடிவு குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். நாம் மேற் கொண்ட கடின உழைப்புக்கு பலன் கிடைத்துள்ளதாகவும், இந்த வார ஆரம்பத்தில் அதிக பிரதிநிதிகள் அம்பாந்தோட்டைக்கு ஆதரவாக இருந்தனர். இருப்பினும் எமது தொடர் பிரசாரங்கள் மூலம் அதனை வெற்றி கொண்டுள்ளோம் என்று தெரிவித்தார்.

இதன்படி 2018 ஆம் ஆண்டு கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை ஆஸ்திரேலியா பெற்றுக் கொண்டுள்ளது. இந்த வாய்ப்பை ஆஸ்திரேலியா பெற்றுக் கொண்டுள்ளதன் மூலம் 5 ஆவது தடவையாகவும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளது. (ஒ-15)


## மரண அறிவித்தல்



### யோசேப் ஞானம்மா

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசேப் ஞானம்மா நேற்று(12.11.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை யோசேப்பின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னட்டி யாகோபு மரியாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-செல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் அருமைத்துரையின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, மனுவல்பிள்ளை, கிறிஸ்தோ, கத்தரீனா, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மரிசிலின், தாவீது(செல்லக்கண்டு), செபமாலை(பட்டு), ஞானப்பிரகாசம்(ராசா)-கனடா, மரியதாஸ்(மணி), தேவராசா, பிலோமினா(பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும் சரஸ்வதி, அம்பிகாவதி, மேரிராணி, இந்திராணி(கனடா), அமலஉற்பவறதி, தேவமலர், தேவதாஸ் பீரிஸ்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக பூதவுடல் இன்று(13.11.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கோப்பாய் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
மகன் தாவீது (செல்லக்கண்டு).

## பதவி வெற்றிடம்

சிறுவர் இல்லத்தில் பின்வரும் பதவிகளுக்கு தொண்டுதிய அடிப்படை ரீதில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.பெண் விடுதி மேற்பார்வையாளர்
02.பாதுகாப்பு ஊழியர்கள்
03.அலுவலக சிற்றூழியர்கள்

வயதெல்லை 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கல்வித் தகைமை தொழில் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை

* சாப்பாடு தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்
* வேலைக்கு ஏற்ப தொண்டுதியம் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி 22.11.2011 நேர்முகத் தேர்வு 27.11.2011 முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

தர்மகர்த்தா சபையினர்,
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.

## கார் வாடகைக்கு

VIP
தொடர்பு:- 0775533114

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 11.07.1977 மறைவு 09.11.2011

### தியாகராஜா செல்வரூபன்

எமது பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கிளையின் பிரதம முகாமைத்துவ உதவியாளராகவும், பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றும் திரு.தியாகராஜா இராசமாணிக்கம் அவர்களின் அன்புச் சகோதரராகிய தியாக ராஜா செல்வரூபன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆயிரம்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்களுக்கு போதைப் பொருளை விநியோகித்த கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அன்றைய தினம் குறித்த நபர் ஒருவர் மூலம் மட்டும் யாழ் நகரில் இரண்டு மணி நேரத்தில் 45 ஆயிரம் ரூபாவுக்கு போதைப் பொருள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

போதைப் பொருள் யாழ்ப்பாணத்துக்கு தென்பகுதியிலிருந்துதான் கொண்டு வரப்பட்டதா என்பது தொடர்பில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரனிடம் கேட்ட போது, தென்பகுதியிலிருந்துதான் போதைப் பொருள்கள் இங்கு கொண்டு வரப்படுகின்றன என்று சொல்ல முடியாதுள்ளது. எம்மால் கைது செய்யப்பட்டவர் மூலமாக தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இது தொடர்பாக மேலும் சிலரைக் கைது செய்துள்ளோம் - என்றார்.

(ஓ-15)

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

செய்யப்பட்டன. இந்த வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றில் நடந்து வரு கின்றன. இதில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேடப் படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கின் இறுதி விசாரணை எதிர்வரும் 22ஆம் திகதி நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த வழக்கின் மனுதாரரின் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன், நீதிபதிகள் நாகப்பா, சுதந்திரம் ஆகியோர் கொண்ட குழு முன், சிறப்புக் கவன ஈர்ப்பை நேற்றுமுன்தினம் கொண்டு வந்தார். அதில், உயர்நீதி மன்றில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாலைத்தீவில் நடந்த சார்க் மாநாட்டில், இந்திய பிரதமரை சந்தித்து, தமிழகத்தின் மீனவர் பிரச்சினை உள்ளிட்டவை பற்றி ஆலோசனை செய்ததாகப் புகைப் படத்துடன் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் குறித்து பிரதமருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால் இந்திய பிரதமர் அவரை சந்தித்திருக்கலாம். ஆனால், தேடப்படும் குற்றவாளி சர்வதேச நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளார். எனவே, அவரை விசாரணைக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினர்.

இதையடுத்து, நீதிபதிகள் நாகப்பா, சுதந்திரம் ஆகியோர், வழக்கின் இறுதி விசாரணையை வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர்.

(த)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பொலிஸ் நிலையமும் இணைந்து யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செயலமர்வு ஒன்றை நடத்தியது. யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் அதிகாரிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மனித உரிமைகள் குற்றவாளிகளுக்கான சட்ட பாதுகாப்பு விதிகள், சிறுவர்கள் பெண்களுக்கான உரிமைகள் தொடர்பான சட்டத்துறையினர் அங்கு விளக்கிக் கூறினர்.

நிகழ்வின் உரை நிகழ்த்திய பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்ய வரும் பெண்களிடம் முறைப்பாடு, ஏற்கும் பொலிஸாரால் தொலைபேசி இலக்கம் கேட்கப்படுவதாக பொது மக்களிடம் இருந்து குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பொலிஸாரை நம்பி முறைப்பாடு செய்ய வரும் பொது மக்களுடன் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக முறைப்பாடு செய்யவரும் பெண்களிடம் அவர்களின் தொலைபேசி இலக்கம் கேட்பதை தவிர்க்க வேண்டும் - என்றார்.

(ஓ-14)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

நான்கு பிள்ளைகளின் தாயான இரத்தினம் பூங்கோதை சாட்சியம் அளித்திருந்தார்.

2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் - அதாவது தற்போதைய அரசாங்கத்தின் பதவிக் காலத்தின் போது, சட்டவிரோதமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, அதே ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த குழுவின் தலைவர்களில் ஒருவரான இனியபாரதியினால் கடத்தப்பட்டு இருவாரகாலம் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் 2009 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்த போது பொலிஸார் கைது செய்து இரு மாதங்களின் பின்னர் சி.ஐ.டியினரிடம் ஒப்படைத்தனர். அதேபோல பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட 3 பிள்ளைகளின் தாயான தனது சகோதரியொருவர் காணாமற் போயுள்ளதாகவும் நல்லிணக்க ஆணைக்குழு முன் தெரிவித்திருந்த பூங்கோதை தனக்கு நியாயம் வழங்குமாறு கோரியிருந்தார்.

இது தொடர்பாகப் விசாரிப்பதற்காக குற்றப் புலனாய்வுப்பிரிவினர் தன்னை கொழும்பிலுள்ள விசாரணை மையத்தின் 4 ஆம் மாடிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வருமாறு கல்முனை பொலிஸ் ஊடாக அழைத்துள்ளதாக பூங்கோதை என்ற அந்தப் பெண் கூறுகிறார்.

தனது பாதுகாப்பு மற்றும் குடும்ப பொருளாதார நிலைமையை சுட்டிக்காட்டி கொழும்புக்கு செல்ல முடியாத நிலை பற்றி தான் ஆணைக்குழுவிடம் தெரிவித்தபோது, கல்முனையிலேயே இந்த விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக ஆணைக்குழு பதிலளித்ததாக அவர் கூறுகிறார்.

கல்முனையில் இந்த விசாரணை நடைபெறும் போது மனித உரிமை அமைப்பின் பிரதிநிதியொருவர் அல்லது சட்டத்தரணி ஒருவர் முன்னிலையிலேயே இந்த விசாரணை நடைபெற வேண்டும் என்று தான் விரும்புவதாக அவர் தெரிவிக்கிறார்.

2007 ஆம் ஆண்டுக்கு முன்னர், முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலங்களில் தனது இரு சகோதரர்கள் காணாமற் போனதாகவும், ஒரு சகோதரி பாலியல் வன்முறைக்கு இலக்காகி மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தனது கணவன் சுற்றிவளைப்பில் கைதாகி சடலம் கூட கிடைக்கவில்லை என்றும் இவர் தெரிவிக்கிறார்.

ஆனால் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எனக்கும் எனது குடும்பத்துக்கும் எதிராக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவே தான் ஆணைக் குழுவிடம் நியாயம் கோருவதாக அவர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

(ஓ-15)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி - தாமராதேவி

புலவனார் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி - தாமராதேவி நேற்று (12.11.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆறுமுகம் திருச்செல்வம் (மோகன்)

*(மின் பாவனையாளர் சேவை நிலையம், சுன்னாகம்)*



அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திருச்செல்வம் 10.11.2011 வியாழக் கிழமை காலமானார்.

கடந்த 11.11.2011 வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(#/5764) (2-6-7)

**NALRAVI**
**SPOKEN ENGLISH**

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

**CAR FOR SALE**

14 SRI XXXX, HYUNDAI, STELLAR, GSL MODEL, WHITE COLOUR.
CONTACT:-0776621884

**விற்பனைக்கு**

எம்மிடம் அனைத்துவகை England கார்களுக்குமான (Austin, A30, A40, A50, Morris Minor 1000, Morris Oxford, Farina, Cambridge) புதிய மற்றும் பழைய உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

(10308) (6-7-8) தொடர்புகளுக்கு: 0777778529

**கார் விற்பனைக்கு**

HP தொடரிலக்கமுடைய
Maruthy 800CC Brand New
கார் விற்பனைக்குண்டு (13000 Km)
தொடர்பு -0773222847
0773284430
(10352) (6-7-8)

**ரூபா 50,000/-க்கு**
மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.




- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

Price Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 0771066902, 0773918870

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் பயிற்சிமையம்.
**Spoken English**

veta®
Experts in English Training
ISO 9001:2000 INSTITUTION
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 10.00 a.m.<br>Mon, Wed, fri 8.30 a.m.<br>Sat, Sun 4.00 p.m. | Sat, Sun 1.30 p.m.<br>Tue, Fri 8.30 a.m.<br>Wed, fri 3.30 p.m. | Sat, Sun 8.00 a.m.<br>Wed, fri 9.30 a.m. | 1st Batch<br>Mon, Tue 3.30. p.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலுங்கள்.

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி,<br>Tel.: 021-222 4403 | M.M.V. வீதி,<br>Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி.<br>Tel. :021-227 0243 | கே. கே. எஸ். வீதி.<br>Tel. : 021-320 7700 |

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**BIT BIT BIT**
Semester - 1, 3, 5
Final Year Project

**ICT - A/L**
**ICT - O/L**
**ICT - Gr 10**

**Practical Web Development**
Joomla, PHP, MySQL, jQuery, CSS, HTML
Domain Registration & Web Hosting

கணினிக் கல்வியில் தொடர்ச்சியான 10 வருட அனுபவம்.
Mr R.Kumaran-B.Sc. (Computing & IS) TPNo : 0776577359
Visit : www.ictschool.org
MIS Open Source College
74, சபாபதி வீதி தலையாழி பிரம்படி யாழ்ப்பாணம்.
இராமநாதன் வீதியிலிருந்து 150 m

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிறார்களின் கைவண்ணங்களைச் சுமந்து வெளி வருகிறது உதயனின் மற்றுமொரு வெளியீடு....

# 'அர்ச்சுனா'

## பொருத்தமில்லாதவை பிழையானவற்றிற்கு வழிவகுக்கும்...



அனைவரும் திறமையான வீரர்களாக இருந்தாலும் ஒரு வலுவற்ற வீரனால் மொத்த அணியும் தோல்வியடையும் சந்தர்ப்பத்தை நீங்கள் கண்டிருக்கலாம்.

**அதேபோல்...**

**உங்கள் பஜாஜ் முச்சக்கரவண்டிக்கோ அல்லது மோட்டார் சைக்கிளுக்கோ போலி உதிரிப்பாகங்களை பொருத்துவதனால் மற்றைய பாகங்களின் செயற்திறனான தொழிற்பாடும் பாதிக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியுமா?**



இங்கு காட்டப்படுவது போலி உதிரிப்பாகங்களை பொருத்தியதால் பாதிப்பிற்குள்ளான உதிரிப்பாகங்களாகும். இதேபோன்று பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களினால் ஏற்படுவதில்லை.

உங்களின் பஜாஜ் வாகனத்தில் செயற்திறனுடைய பயணத்தை மேற்கொள்ள...

**பஜாஜ்**

**அசல் உதிரிப்பாகங்கள்**

மட்டுமே பொருத்திக்கொள்ளுங்கள்...

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

நிறுவன பதிவு இலக்கம் PB270


75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600

tradlanka

---


**AMCO**

**weight GAIN**



## எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.

அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்



Hotline: 0719 258 758

தொலைபேசி: +94 11 481 0251

---

# THE HIGHEST INTEREST RATE FOR ONE YEAR FIXED DEPOSITS

වසරක ස්ථාවර තැන්පතු සඳහා ඉහළම පොලියක්

ஒரு வருட நிலையான வைப்புக்கு அதிகூடிய வட்டிவீதம்

# 13%

වා.පො.අ. = වා.ස.පො.අ.

(ජ්‍යෙෂ්ඨ පුරවැසියන් සඳහා) (For Senior Citizens)

**CALL 077 22 68 723**

**Branches**

Jaffna, Nugegoda, Negombo, Kollupitiya, Ratnapura, Trincomalee, Vavuniya

**Pawning Centres**

Aluthgama, Batticoloa, Chilaw, Gampaha, Hatton, Ja-Ela, Kandy, Ragama, Sea Street, Wattala

*Conditions Apply

**SWARNAMAHAL FINANCIAL SERVICES PLC**

சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் பிஎல்சீ

No.338, Hospital Road, Jaffna. Tele/Fax: 021 2220245

E-mail: info@sfs.lk | Web: www.sfs.lk

SFS

Registered by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988

---

**இணையற்ற**

நிதிச் சேவைகளின் முன்னோடியாகவும் மாபெரும் நிறுவனமாகவும் விளங்கும் நாம், 40 ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கிவரும் தரமுயர்ந்த சேவைகளினால் பல்லாயிரக்கணக்கான இலங்கை மக்கள் எம்மில் நம்பிக்கை வைத்துள்ளனர். நீங்களும் எமது நிலையான வைப்புக்களில் முதலீடுசெய்து பயனடையுங்கள்.

# 2 வருட நிலையான வைப்பு

பற்றி அறிந்துகொள்ள இன்றே அழையுங்கள்!

அதிகூடிய வட்டி. சிறந்த பாதுகாப்பு.

| காலம் | மாதாந்தம் | வ.தே.வ.வி. | முதிர்ச்சியில் | வ.தே.வ.வி. |
|---|---|---|---|---|
| 2 ஆண்டுகள் | 11.00% | 11.57% | 12.50% | 11.80% |

| காலம் | மாதாந்தம் | வ.தே.வ.வி. | முதிர்ச்சியில் | வ.தே.வ.வி. |
|---|---|---|---|---|
| 3 ஆண்டுகள் | 11.25% | 11.85% | 13.00% | 11.60% |
| 4 ஆண்டுகள் | 11.25% | 11.85% | 13.00% | 11.04% |

*சகல வட்டி வீதங்களும் குறிகாட்டிகள் மட்டுமே. சந்தை நிலைமைகளுக்கேற்ப மாறலாம்.

**1% சிரேஷ்ட பிரஜைகளுக்கு மேலதிக வட்டி!**

வட்டி வீதங்கள் 2011 ஒக்டோபர் 13 முதல் செல்லுபடியாகும்.

கிறெடிட் ரேட்டிங் BBB+/P2 RAM ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டட்

கூட்டிணைத்த திகதி: 30.05.1971

(1988இன் 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது)

40 Years together with Sri Lanka

இன்றே அழையுங்கள்!

077 7587366, 077 7587387

**LB FINANCE**

எல்.பி. பினான்ஸ் பி.எல்.சி. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com

நிலையான வைப்பு ஹொட்லைன்

**011 4521020**

The 7th Frontier

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NatWealth

நற்வெல்த் செகுரிட்டீஸ் லிமிட்டெட்டினால் இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நடாத்தப்படும் பொதுக்கருத்தரங்கு.

பாதுகாப்பான முதலீட்டுக்கான வெகுமானம் பற்றிய
"முதலீட்டாளர் விழிப்புணர்வு."

அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்கான அரிய சந்தர்ப்பம்.

பிரதான விடயங்கள்:

- அரச பிணையங்கள் சந்தையின் மீளாய்வும் அதன் புதிய அபிவிருத்திகளும்.
- இலங்கைப் பொருளாதாரமும் அதன் போக்குகளும்.

2011 நவம்பர் 18ம் திகதி (வெள்ளிக்கிழமை) காலை 09.30 தொடக்கம் பிற்பகல் 12.30 வரை. யாழ்- பொது நுலக கேட்போர் கூடத்தில்.

நுழைவு இலவசம் அனைவரும் பங்குபற்றலாம்.

நற்வெல்த் செகுரிட்டீஸ் லிமிட்டட்
17 எ, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 07.
தொலைபேசி : 0114-703000 தொலைநகல் : 0114-716275
மின்னஞ்சல் : info@natwealth.com இணையத்தளம் : www.natwealth.com

# ஆயிரம் கிலோ நிறையுடைய உலகின் மிகப் பெரிய தங்க நாணயம்



ஆயிரம் கிலோ நிறையுடைய உலகின் மிகப் பெரிய தங்க நாணயம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் உலகின் பல நாடுகளில் உருவாக்கப்பட்ட நாணயங்களை விட இது பல மடங்கு பெரிதானது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆஸ்திரேலியாவின் பேர்த் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட 99.99 வீதம் தூய தங்கத்தில் இருந்து இந்த நாணயம் உருவாக்கப்பட்டது. இதன் பெறுமதி 35மில்லியன் பவுண்கள் என்று மதிக்கப்பட்டுள்ளது.

இது பிரிட்டன் மகாராணியின் ஆஸ்திரேலியா பயணத்தின் ஞாபகார்த்த சின்னமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் ஒரு முகப்பில் மகாராணியின் சிரசு உருவமும், மறுபக்கத்தில் ஆஸ்திரே லியாவின் தேசிய மிருகமான கங்காருவின் உருவம் அமையுமாறு 'பதிக்கப்பட்டிருக்கிறது. இந்த தங்க நாணயத்தை உரு வாக்குவதற்கு 18 மாதங்கள் எடுத்தாக தெரிவிக்கப்படுகிறது. இதன் பெறு மதி அதிகமாக இருந்த போதிலும் சட்டப்படி இதனை கொள்வனவு செய்தவர் 65,000 பவுண்கள் விலை மதித்துள்ளார். இதனை சட்டப்படி தங்கக் குச்சிகளாக்க முடியாது. இதனை ஒரு சின்னமாக வைத் திருக்க வேண்டும் என்று தெரிவிக் கப்படுகிறது.

SWISSTEK
டைல் மோட்டார்
ஃபுளோர் மற்றும் வோல் டைல்களைப் பதிப்பதற்கான நவீன உடனடிக் கலவை
சர்வதேச நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டது
சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.



உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு விஷேட சலுகை.

உங்கள் குருதியில் சக்கரையின் அளவை கணித்துக்கொள்ள ப்ரொடீஜி ஓட்டோகோட் மற்றும் ப்ரொடீஜி பொக்கட்

இந்த விளம்பரத்தை எந்தவொரு பிரதான பாமசி, Arpico மற்றும் Laugfs சுப்பர்மார்கட்களில் வழங்கி இந்த சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேளுங்கள்



இலங்கையில் கோர்ட் முறை இல்லாமல் ஒரு துளி இரத்தத்தில் உங்கள் சக்கரையின் அளவை கணிக்கும்

Approved by the US FDA

எந்த ஒரு பழைய கருவியையும் கொடுத்து புதிய கருவியை பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக தகவல்களுக்கு இப்போதே அழையுங்கள் 0773464342

PRODIGY AutoCode
Handy Easy Fast
~~Rs. 5950/=~~
Rs. 4950/=

PRODIGY Pocket
Small Fast Convenient
~~Rs. 3950/=~~
Rs. 2950/=



விஷேட சலுகை 30ம் திகதி நவம்பர் 2011 வரை மட்டுமே.

Service for Health
Emar
Imported and Marketed by EMAR PHARMA (PVT) LTD.
No.23, Anderson Road, Kalubowila,Dehiwela.
Ter.:2810913/4 Fax: 2768475 E-mail: emar79@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஓய்வு நேரங்களை பயனுடன் கழித்திட
இனிது! இனிது!!
மாதாந்த சஞ்சிகை
மறந்து விடாதீர்கள்





- 1050cc Petrol, 4 Cylinder, EFI engine
- Fabric Seats
- 5 Speed Manual Gear Box
- 7 Seater (5-8 adults)
- Rack & Pinion Steering System
- Dual Air Con
- Front Disc Brakes & Rear Drum Brakes
- FM Radio

Micro Holdings (Pte.) Limited


| | | |
|---|---|---|
| Borella Showroom | [T] 011 2695056/8 | [F] 011 2692786 |
| Kandy Showroom & Service Centre | [T] 081 5747013 | [F] 081 5747013 |
| Matara Showroom | [T] 041 2235551 | [F] 041 2235552 |
| Kurunegala Showroom | [T] 037 2223550 | [F] 037 2223551 |

E-mail : sales@microholdings.lk
Web site www.microcars.lk

Hotlines
0773140248 0773667658 0777715259 0773963261 0777715122
0773523308 0773667698 0773667678 0773667686 0777385232
0773523307 0777426823 0772366107 0777480677 0777226732

micro HOLDINGS






## அங்கும் இங்கும் அலைக்கழிக்காத www

திடீரென இல்லாமல் போகும் சிக்னலினால் www வோடு தடுமாற வேண்டி உள்ளது. சிக்னல் முற்றிலும் இல்லாத இடங்கள் பற்றியோ சிக்னல் கூடிக் குறையும் இடங்கள் பற்றியோ உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அதனால் SLT ப்ரோட்பேன்ட்டுடன் இணையுங்கள். தடங்கலில்லாமல் சிக்னல் கிடைப்பதால் www க்கு தடையில்லை. அதுமட்டுமல்ல எந்த ஒரு காலநிலையிலும், எந்த ஒரு நேரத்திலும் நிலையான, தடங்கலற்ற, அதிவேக இன்டர்நெட் அனுபவம். இனிமேல் எப்படி www?

www.slt.lk துரித அழைப்பு (011) 2 555 555

BROADBAND
சக்தியளிப்பது Megaline


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சலுகைகள் வழங்கும்

# நிலையான வைப்பு

அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு

11.50%
நிலையான வைப்பு

12.05%
சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
ஈ-மெயில் lofin@lankaorix.com
இணையத்தளம் www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602




ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
MOTORPLUS
யதார்த்தத்திற்கோர் காப்புறுதி

Easy Pay
24/7

மோட்டார் வாகனக் காப்புறுதிக்கு
இலங்கையில் அதிசிறந்த 1

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தேசத்தையே தாங்கும் பேரரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org